
## பதிப்புரை

உலகமெங்கும் உள்ள தமிழ் வாசகர்களால் பெரிதும் கவரப்பட்ட எழுத்தாளர் திருமதி ரமணிசந்திரன் அவர்கள். அவரது எழுத்துக்களுக்கு நாளுக்கு நாள் மிகப்பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது.

கட்டுக்கோப்பான, குடும்பப் பாங்கான கதை அமைப்பும், தெளிந்த நீரோட்டமான நடையும்தான் வாசகர்களின் வரவேற்பைப் பெற காரணமாக உள்ளது. அன்றாட நிகழ்வுகளை வைத்து கதை எழுதுவதிலே வல்லவர் என்பது வாசகர்கள் கருத்து. இது மேலும் வளர வாசகர்களின் பேராதரவை மேலும் வேண்டுகிறேன்.

அருணோதயம் அருணன்

# உன் முகம் கண்டேனடி



கல்லூரியில் இருந்து திரும்பி வந்ததிலிருந்து மஞ்சரிக்கு இருப்புக் கொள்ளவில்லை. அடிக்கொரு தடவை, யோகேந்திரன் வந்து விட்டானா என்று, குட்டி போட்ட பூனை மாதிரி, வாயில் பக்கம் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அத்தை திலகம் ஹாலில்தான் உட்கார்ந்து, சுந்தர காண்டம் படித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், அவளிடம் எதையும் கேட்டுப் பயன் இல்லை.

பழைய காலத்து மனோபாவம்! ஆண்கள் வெளியே சென்றால், அவர்களுக்கு ஆயிரம் வேலைகள்! அது எப்போது முடிந்து, எப்போது வீட்டுக்கு வருவார்கள்

என்று எப்படிச் சொல்ல முடியும்? வழிமேல் விழி வைத்துக் காத்திருக்க வேண்டியதுதான்! வந்த பிறகு, வேண்டியதைக் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்!

யோகேந்திரன் எப்போது வீட்டுக்கு வருவான் என்று, அவளிடம் கேட்டால், இந்தப் பதில்தான் வரும்.

இதற்கு, அவளிடம் கேட்காமல் இருக்கலாம் என்று சற்று நேரம் காத்திருந்த மஞ்சரியின் பொறுமை கரைந்து விட, அத்தையம்மாளிடம் போய் நின்றாள். புத்தகத் தின் மீது அவள் கைகளைப் பரப்பி வைத்துப் படித்துக் கொண்டிருந்த பக்கத்தை மறைக்கவும், திலகம் நிமிர்ந்து மஞ்சரியைப் பார்த்து, லேசாக முறுவலித்து, ''என் னம்மா?'' என்று வினவினாள்.

''யோகண்ணா எப்போது வருவார்?'' என்று கேட்டவளின் குரல் சிணுங்கியது.

ஹால் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''தெரியவில்லையே! அவனுக்கு என்ன வேலையோ, என்னமோ?'' என்றாள் யோகனைப் பெற்றவள்.

''வேலை என்றால், கூப்பிட்டுச் சொல்லக் கூடாதா? நான் என் சினேகிதி கூடவே போயிருப்பேன் அல்லவா? இந்த யோகண்ணா வந்து, என்னை அழைத்துப் போவ தற்குள், அந்தச் சல்வார் செட் விற்றே போய்விடப் போகிறது!'' என்று குறைப்பட்டாள் சின்னவள்.

சற்று யோசித்துவிட்டு, ''அதை வாங்குகிற யோகம் உனக்கு இருந்தால், நிச்சயமாக விற்றுப் போகாமல், கடையிலேயே உனக்காகக் காத்திருக்கும். அந்தக் கொடுப்பினை இல்லை என்றால்தான் விற்றுப் போகும். தம்பி வந்த பின் கடைக்குப் போய்ப் பார். விதி



இருந்தால் கிடைக்கும்!'' என்றுவிட்டு, மீண்டும் சுந்தர காண்டத்தில் மூழ்கினாள் திலகம்.

விதியாம்... கொடுப்பினையாம்! என்ன அசட்டு விளக்கம்!

இதற்கு, இந்த அத்தையிடம் எதுவும் கேளாமலே இருந்திருக்கலாம்!

எரிச்சலும், அலுப்புமாகத் தன் அறைக்குச் செல்ல அவள் திரும்பியபோது, வெளி கேட் திறந்து, கார் உள்ளே வரும் ஓசை கேட்க, ஆவலோடு வாயிலுக்கு ஓடினாள்.

மஞ்சரி ஓடி வருவதைக் கண்டதும், யோகேந்திரனும் வேகமாகக் காரை விட்டிறங்கி வந்து, ''என்ன மஞ்சரி?'' என்று சிறு கவலையுடன் கேட்டான்.

''அது..'' என்று ஆவலோடு தொடங்கிய மஞ்சரிக்கு, அவனது முகத்தைப் பார்த்ததும், மேற்கொண்டு கேட்கத் தோன்றாமல், பேச்சு நின்றது.

காலையில் அவளைக் கல்லூரியில் விட்டுவிட்டு வேலைக்குச் சென்றவன் இப்போதுதான் வீட்டுக்குத் திரும்பியிருக்கிறான். அலுப்பும் களைப்பும் எவ்வளவு இருக்கக் கூடும்!

இவனைப் போய், உடனே காரை எடுத்து, என்னைக் கடைக்குக் கூட்டிப் போ என்று எப்படிச் சொல்வது? பயங்கரச் சுயநலமில்லையா? அவன் பாவமில்லையா?

தயக்கத்துடன் அவள் நிற்கையில், ''என்ன வாயில் வரை வந்து வரவேற்பா? அம்மா அப்படியென்ன ஸ்பெஷல் சிற்றுண்டி செய்திருக்கிறார்கள்? வா, என்னோடு

சேர்ந்து, இன்னொரு தரம் வெட்டு! வா,'' என்றவாறு, யோகேந்திரன் வீட்டினுள் செல்லத் தொடங்க, ஒன்றும் சொல்லாமலே, அவளும் அவனோடு உள்ளே சென்றாள்.

அவனது ஊகம் வேறு, அவளைச் சுட்டது!

ஏதோ அவனுக்காகவே எதிர்பார்த்தது போலல்லவா எண்ணி விட்டான்! அவளானால், நேர் விரோதமாக... சே சே! சுத்த மோசம் அவள்!

மானசீகமாகத் தன் தலையில் ஒரு குட்டு வைத்துக் கொண்டு, ''இன்றைக்கு.. இன்றைக்கு... மெது பக்கோடா யோகண்ணா. காஃபியும், அதுவுமாக நான் ஏற்கெனவே, ஒரு பயங்கர வெட்டு வெட்டி விட்டேன்! சீக்கிரமாக முகம் கழுவிக் கொண்டு வாருங்கள்! அதற்குள், உங்களுக்கும் காபி போடச் சொல்லுகிறேன்!'' என்றுரைத்த படி சமையல் அறையை நோக்கிச் சென்றாள் மஞ்சரி.

அத்தை சொன்னது போல, அந்த சல்வாரை அணிவதற்கு, அவளுக்குக் கொடுப்பினை இல்லைதான் போலும்! இன்னும், இவன் முகம் கழுவி, சாப்பிட்டு.. ஊகூம்! வாய்ப்பே இல்லை! கடை நிச்சயமாக மூடிவிடும்! அல்லது, அதை யாராவது வாங்கிப் போய் விடுவார்கள்!

காபி போட்டு அனுப்பும்படி சமையல்கார அன்னம்மாவிடம் சொல்லிவிட்டுத் தட்டில் பக்கோடாவுடன் அவள் வந்தாள். அவன் லுங்கிக்கு மாறாமல், முகத்தை மட்டும் துடைத்தபடி, ''வா. சீக்கிரமாகப் போய், உன் சல்வாரை வாங்கி வந்துவிட்டு, அப்புறமாகச் சாப்பிடலாம்!'' என்று அவளை விரட்டினான்.



அத்தை மகனிடம் சொல்லியிருக்கிறாள்!

உள்ளம் துள்ளியபோதும், அடக்கிக் கொண்டு, ''உங்களுக்குப் பசிக்குமே, யோகண்ணா! நீங்கள் காபி டிபன் முடித்த பிறகு..'' என்றவளை அவன் இடையிட்டான்.

''முடிந்த பிறகு போனால், கடைக்கு வெளியே நின்று, மூடிய ஷட்டரைத்தான் பார்த்துவிட்டு வர நேரும். உங்களுக்கெல்லாம் வழக்கமான அந்த அண்ணா சாலைக் கடைதானே? சீக்கிரமாக மூடி விடுவார்கள்! வா. போகலாம்!'' என்றவாறு அவள் கொண்டு வந்த தட்டில் இருந்த பக்கோடாக்களில் ஒன்றை எடுத்துப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டபடி, வாயிலை நோக்கி நடந்தான் யோகேந்திரன்.

நல்ல வேளையாகக் கடை திறந்திருக்க, மஞ்சரி வேகமாகக் கடையினுள்ளே சென்றாள். அவளுடைய வகுப்புத் தோழி அணிந்து வந்திருந்தது போலவே, அதே நிறத்தில், அதே அலங்கார வேலைப்பாட்டுடன், அங்கே இன்னொன்றும் இருக்கவும், மஞ்சரிக்கு மிகவும் சந்தோஷமாகி விட்டது.

காரைப் பார்க் பண்ணி நிறுத்திவிட்டு உள்ளே வந்த யோகேந்திரனிடம், ''பாருங்கள், யோகண்ணா! இதுதான்! காலையில் இருந்து நினைத்துக் கொண்டே இருந்தேன்!'' என்று கூறிவிட்டு, அவனுக்குச் சல்வார் செட்டைப் பிரித்துக் காட்டுமாறு விற்பனைப் பெண்ணிடம் கேட்டுக் கொண்டாள்.

ஆனால், அதை நன்றாக இருப்பதாகச் சொல்லும் போதே, யோகேந்திரனின் கவனம் வேறு புறம் பாய்ந்து விட்டது.

அவனது கருத்தைக் கவர்ந்த தினுசில் இரண்டை எடுத்துப் போடச் சொன்னான்.

சேர்த்து வைத்துப் பார்க்கும்போது, யோசிக்கக்கூடத் தேவையில்லாதபடி, அவனது தேர்வுகள் மிக அழகாக இருந்தன.

மஞ்சரி முன்னதையும் ஒரு தரம் ஆராயவும், ''வேண்டு மானால், இரண்டு தினுசையும் எடுத்துக் கொள்!'' என்றான் அவன்.

''ஹையோ! அது நன்றாக இருப்பதாக எப்படி நினைத்தேன் என்று யோசித்து, அதைப் பார்த்தேன்! இதன் பக்கத்தில், அதைப் பார்த்தால், 'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அது போல..' என்று ஒரு பாடல் வருமே, அது மாதிரி இதற்கும் சல்வார் என்று பெயரா என்று நினைக்கத் தோன்றுகிறது!'' என்று அவள் உவமான உவமேயங்களோடு விளக்க, அவன் சிரித்தவாறு, பின்னதற்கு பில் போடச் சொன்னான்.

திரும்பி வரும்போது, மறுநாள் கல்லூரிக்கு, இந்த செட்டை அணிந்து சென்றதும், எல்லோரும், எப்படி 'ஹ' என்று பெருமூச்சு விடப் போகிறார்கள் என்று மஞ்சரி பெருமையோடு அளக்க, யோகேந்திரன் முறுவலித்த படியே காரை ஓட்டினான்.

வீட்டை அடைந்ததும், உள்ளே ஓடிச் சென்று, ''அன் னம்மா, யோகண்ணன் காபி டிபன் கூடச் சாப்பிட வில்லை! சீக்கிரமாகச் சாப்பாடு எடுத்து வையுங்கள்!'' என்றுவிட்டு, திலகத்திடம் தன் சல்வார் செட்டைக் கடை பரப்பினாள்.



''என்னமோ கொடுப்பினை இருந்தால், அந்த சல்வார் கிடைக்கும் என்று சொன்னீர்களே, அத்தை! பாருங்கள்! யோகண்ணன் எனக்கு, நான் நினைத்ததை விட நல்லதாக வாங்கித் தந்திருக்கிறார்! இத்தனைக்கும், அதுவும் அந்தக் கடையில் இருக்கும்போதே!'' என்று பெருமையோடு உடையைத் தன் மீது வைத்துக் காட்டியபடி அதை வாங்கிய வரலாறு முழுவதும் கூறினாள். ''இது ரொம்ப நன்றாக இல்லை?''

லேசான முறுவலோடு, புத்தகத்தை மூடி வைத்து விட்டு, ''ரொம்பவும்!'' என்று ஒப்புதலாகப் பேசினாள் அந்த அம்மாள். ''நீ நினைத்ததை விட நல்லதாகக் கிடைக்க வேண்டும் என்று உனக்குக் கொடுப்பினை இருந்து, இந்த அழகான சுரிதார், அவன் கண்ணில் பட்டிருக்கிறது, பார்!'' என்றவாறு, மகனுக்குப் பரிமாறுவதற்காக, உணவு மேஜைக்குச் சென்றாள்.

''ஓ! இப்படிக் கிடைப்பதுதான் கொடுப்பினையா, அத்தை?'' என்று கேட்டபடி, சல்வாரை மடித்து வைத்தாள் மஞ்சரி.

கை கழுவிக்கொண்டு தட்டின் முன் உட்கார்ந்தவளிடம், ''நீ பேசுவதைக் கேட்டால், எல்லோரும் சிரிப்பார்கள், மஞ்சு!'' என்றான் யோகேந்திரன்.

அவள் ஏன் என்று கேட்குமுன், ''அம்மாவை அத்தை என்கிறாய். என்னை அண்ணன் என்றால் கேட்கிறவர்கள் சிரிக்க மாட்டார்களா? அத்தையுடைய மகன் அண்ணனா?'' என்று விளக்கமும் கொடுத்தான் யோகன்.

''ஓ! அதுவா? ஆனால், அப்படியே பழகி விட்டதே!'' என்றாள் அவள்.

''மாற்றிக்கொள்.''

''மாற்றுவதா? எப்படி?'' என்று, தட்டில் தோசையை வைத்த திலகத்தைப் பார்த்து, ''என்னவென்று அழைப் பது, அத்தை?'' என்று மஞ்சரி வினவினாள்.

மகனைப் பார்த்துவிட்டு, ''அத்தை மகனை அத்தான் என்பார்கள்!'' என்றாள் அந்தப் பெண்மணி.

''அத்தான்., கித்தான்., பொத்தான்!'' என்று உதட்டைப் பிதுக்கினாள் சின்னவள். ''முப்பது, நாற்பது ஆண்டு களுக்கு முந்தைய திரைப்படத்தில் பேசுகிற மாதிரி இருக்கிறது!'' என்று, அந்த யோசனையை ஒதுக்கினாள்.

''அண்ணன், அத்தான் என்று அடை மொழிகள் எதற்கு? எல்லோரையும் போலச் சும்மா, யோகன் என்று கூப்பிடேன்!'' என்று யோசனை சொன்னான் யோகேந்திரன்.


''ஐயோ! மரியாதை இல்லாத மாதிரித் தோன்றாது?'' என்று ஆட்சேபித்தாள் அவள்.

''ஏன்? யோகன், வாடா, போடா என்றா சொல்லப் போகிறாய்? வாங்க, போங்க என்று பேச்சில் மரியாதைப் பன்மையைப் பயன்படுத்து, போதும்!''

கண் மூடி, ''யோகன்! யோகன்..'' என்று சொல்லிப் பார்த்துக் கொண்டாள் அவள்.

''நன்றாகத்தான் இருக்கிறது, யோகன்!'' என்று மஞ்சரி முறுவலிக்க, மகன் புன்னகையோடு தாயைப் பார்த்தான்.






மறுநாள் மஞ்சரியின் கற்பனை, அப்படியே நிஜ மாயிற்று.

சக மாணவிகளில் பலர், அவளது சல்வாரைப் பார்த்து, ஹாவென்று வாயைப் பிளக்கத்தான் செய்தார்கள்.

அத்தோடு நில்லாமல், ''நேற்று ப்ரீதி அணிந்து வந்தது போல வாங்கப் போவதாகத்தானே சொன்னாய்? இப்போது, இப்படிப் பளீர் என்று வந்திருக்கிறாயே!'' என்று ஒரு சிலர் ஆச்சரியமாகக் கேட்டபோது, ''அதை வாங்கத்தான் போனோம்ப்பா! ஆனால், என் கார்டியனுக்கு இதுதான் ரொம்பப் பிடித்தது. அவர் காட்டியதும் எனக்குப் பிடித்துப் போயிற்றா, இதையே வாங்கி விட்டோம்!'' என்று கூறியபோது, மஞ்சரியின் குரலில், அவளையும் மீறிப் பெருமை தொனித்தது.

''இப்படி இரட்டை வண்ணமாய்ப் பட்டு நூலில் அலங்காரத் தையல் வேலை செய்திருப்பது பிரமாதமாக இருக்கிறதுப்பா!'' என்று ஒருத்தி பாராட்டினாள்.

அதே போல, இன்னும் சில பெண்கள் பாராட் டியதும், மஞ்சரிக்கு மகிழ்ச்சிதான்.

ஆனால், எல்லோருமே ஒரே மாதிரி இருக்க மாட் டார்கள் அல்லவா? விதி விலக்காய் ஓரிரு வக்கிரங் களும் இருப்பார்கள்தானே!

அவர்களுள் ஒருத்தி, ''பிறந்த நாள் உடை என்று, நேற்று ப்ரீதி பெரிதாகப் பீத்திக் கொண்டாளே! அவளுதை இதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சூரியன் முன் மண்ணெண்ணெய் விளக்கு என்றுதான் சொல்ல வேண்டும்! இல்லையாப்பா?'' என்று உரக்கக் கூறவும், ப்ரீதியின் முகம் சட்டென வாடி இருட்டடித்துப் போயிற்று.

மஞ்சரியே, மயிலுக்கும் வான் கோழிக்கும் ஒப்புமை காட்டி, வீட்டில் பேசியவள்தான். ஆனால், ப்ரீதியின் முகவாட்டம், அவளை உறுத்தியது!

எனவே, ''சேச்சே! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ப்ரீதியுடையதும் மிகவும் அழகுதான். இல்லாவிட்டால், அதே மாதிரி வேண்டும் என்று வாங்கப் போயிருப்பேனா?'' என்றாள் மஞ்சரி. ''ஆனால், என் கார்டியனுக்கு இது தான் பிடித்தது!'' என்று நிலைமையைச் சமாளிக்க முயன்றாள்.

''அடேயப்பா! கா...ர்டியனுக்குப் பிடித்ததால் மட்டும், இதை வாங்கிக் கொண்டாளாம்! இல்லாவிட்டால்... எல்லோரும் கேட்டுக் கொள்ளுங்கப்பா. ஹூம்! இந்த மாதிரி கார்டியன் எங்களுக்குக் கிடைக்கவில்லையே! சரியான பத்தாம் பசலி. கஞ்சப் பிசுநாரி அம்மா, அப்பாக்கள் மட்டும்தானே, நமக்கு இருக்கிறார்கள்! ஓர் ஐந்து ரூபாய் குறைவாக இருந்தால், அதை வாங்கி நம் தலையில் கட்டிக் கொண்டு! மஞ்சரி அணிந்திருப்பது, ப்ரீதியினதை விடக் குறைந்தாலும், ஓர் ஐந்நூறு, அறுநூறு ரூபாய் அதிகம் இராது? என் அப்பா தலையில், கிலோக் கணக்கில் ஐசை வைத்துத் தேய்த்தாலும், பைசாப்



பெயராது!'' என்றாள் மாலினி மீண்டும் பொறாமை யுடன்.

என்னமோ, மஞ்சரிக்கு உள்ளே கலங்கியது.

அப்பாவாக இருந்திருந்தால் உரிமையோடு கணக்குப் பார்த்திருப்பாரோ?

கார்டியன் என்பதால், மற்றவர்கள் யாரும் குற்றம் சொல்லிவிடக் கூடாது என்று, யோகேந்திரன், இப்படி அதிகப்படியாகச் செலவு செய்கிறானோ?

சிறு வயதில் பெற்றோரை இழந்தது, அவளது பிழை போலத் தோன்றிவிட, நெஞ்சு கனத்தது.

தன் வேதனையை மாலினிக்குக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று, பிடிவாதமாகப் புன்னகை செய்தாள் அவள். ''ஓர் ஐந்நூறு ரூபாய்க்காகத் தந்தையையே விட்டுவிடத் 'தயாராக இருக்கிறாயே! உன் பெற்றோர் பாசத்துக்கு நிகரே கிடையாதும்மா! வாழ்க மகளே, வாழ்க உன் தமிழ்ப் பண்பு!'' என்று கிண்டலாகக் கூறப் பலரும் கை தட்டிச் சிரித்தனர்.

''வெறும் ஐந்து ரூபாய்க்குக் கணக்குப் பார்க்கிற அப்பாவுக்கு, இந்தப் பாசம் போதும்ப்பா!'' என்று மாலினி பதில் தர, சமயம் பார்த்து மணியடிக்க, சிரித்த படியே எல்லோரும் கலைந்தனர்.

மற்றவர்கள் பிரிந்து சென்றுவிட, மஞ்சரி, ப்ரீதியிடம் சென்றாள்.

''சாரி, ப்ரீதி! நான் புதிது அணியப் போய், உனக்கு மனக் கஷ்டம் ஏற்படுமாறு நேர்ந்து விட்டது! இந்த மாலினி கண்டபடி பேசிவிட்டாள்! சாரிப்பா!'' என்று, நடந்தது தன் பிழை போல மன்னிப்புக் கேட்டாள்.

''சேச்சே! அவள் பேசியதற்கு, நீ என்ன செய்வாய்? அவளுக்குப் பொறாமை அதிகம்! நேற்று என் சல்வாரைப் பார்த்ததும், இப்படித்தான் ஏதோ சொன்னாள். இத்தனைக்கும், எனக்கெல்லாம், ஆண்டுக்கு ஒரு தரம் தான், இந்த அளவுக்கேனும் ஒன்று கிடைக்கும். ஆனால், மெய்யாகவே, உன் கார்டியனுக்குத் தாராள மனம்தான், மஞ்சரி. சாதாரணமாக வாங்கப் போனவளுக்குப் பார்ட்டியில் அணிகிற மாதிரி வாங்கிக் கொடுத்திருக்கிறாரே!'' என்று புகழ்ந்தவளின் மனம், உள்ளூரப் பொருமியது.

'பாவி! கணக்குப் பாராமல் பணத்தை வீசி வாங்கியவன், அதற்கு ஏற்பக் கொஞ்சம் அதிகப்படி பளபளப்பாகக் காடியாகவேனும் வாங்கியிருக்கக் கூடாதா? எனக்கு முக்கி முனகி, ஆண்டுக்கு ஒரு தரம் வாங்குகிற ஒரே நல்ல துணி ஒரே நாளில் சாயம் வெளுத்துப் பழசாகிப் போன மாதிரி ஆகி விட்டதே!'

ஆனால், மனதின் பொருமலை வெளிக்காட்ட முடியாமல் விழுங்கிவிட்டு, ''என்னப்பா, அடுத்த வாரம் சேவை முகாமுக்கு நீ வருகிறாய்தானே? அல்லது, வீட்டுச் சாப்பாடு இல்லாமல் வாடி வதங்கி விடுவாய் என்று உன் கார்டியன் அனுமதி மறுத்து விடுவாரா?'' என்று, வேடிக்கை போலக் கேட்டாள் அவள்.

''மறுக்க மாட்டார். அதுவும் நான் பெயர் கொடுத்த பிறகு இதிலெல்லாம் அவர் தலையிடவும் மாட்டார்!''

''அதில்லை மஞ்சரி, ஒரு சல்வார் வாங்குவதில்கூட மூக்கை நுழைக்கிறாரே என்று பார்த்தேன்... நீ ஆசைப்பட்டதை வாங்க விடவில்லையே!''



சொல்வது அறியாமல், மஞ்சரி பேசாது நின்றாள்.

அவளும் மனம் பிடித்துப் போய் வாங்கியதுதான். அதைச் சொன்னால், முதலில் சொன்னது பொய் என்று ஆகும். ஆனால், யோகேந்திரனைக் குறைவாக மற்றவர்கள் நினைப்பதும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

எனவே, ''அதைவிட, இது நன்றாக இருப்பதாக அவர் கருத்து. ஐந்து வயதில் இருந்து வளர்த்த குடும்பம். அதனால், நானும், அவர் கருத்துக்கு மதிப்புக் கொடுத்தேன். மற்றப்படி, என் விருப்பங்களுக்கு அங்கே யாரும் குறுக்கே வருவது இல்லை. அதிலும், கல்லூரியில் நான் பெயர் கொடுத்துவிட்ட பிறகு, யோகண்ணன் நிச்சயமாக அதில் தலையிட மாட்டார்!'' என்று ஒரு வழியாக விஷயத்தை விளக்கி முடித்தபோது, உள்ளூர யோகேந்திரன் மீதுதான் அவளுக்குக் கோபம் வந்தது.

பேசாமல், அவள் சொன்ன சல்வார் செட்டையே வாங்கித் தொலைத்திருந்தால், இவ்வளவு சமாளிப்புக்கு அவசியம் இல்லையல்லவா? இவனை யார் இன்னொன்றைப் பார்க்கச் சொன்னது?

கல்லூரி முடிந்து வீட்டுக்குச் செல்லும்போது, சேவை முகாமுக்குச் செல்வது பற்றியும் யோகேந்திரன் ஏதாவது சொல்லித் தடுக்கக் கூடுமோ என்ற எண்ணம் மஞ்சரிக்கே வந்தது.

ப்ரீதி சொன்ன மாதிரி, 'சுனாமி நிதிக்குத்தான் நிறையப் பணம் கொடுத்து விட்டோமே, அதற்கு மேல் வெய்யிலில் அலைந்து திரிந்து, கண்ட சாப்பாட்டையும் சாப்பிட்டு, உடம்பைக் கெடுத்துக் கொள்வானேன்?' என்று கேட்கக் கூடுமோ?

ஆனால், அவன் அப்படி எதையாவது சொல்லித் தன்னுடைய முக்கியத்துவத்தை நிலை நாட்டுகிறவன் அல்லதான். பள்ளி, கல்லூரிச் சுற்றுலாக்கள் எதற்கும் யோகேந்திரன் தடை சொன்னதும் இல்லை. ஆனாலும்,

கல்லூரியில் திரட்டிய சுனாமி நிதி நிறைய இருக்கிறது. அதைப் பத்தோடு பதினொன்றாக அரசு நிதிகளில் சேர்த்துவிட்டுக் கைகட்டிச் சும்மா இருப்பதை விடத் தாங்களே உருப்படியாக ஏதாவது செய்யலாம் என்று, கல்லூரி மாணவியர் சங்கம் முடிவெடுத்திருந்தது. அதற்கு, நிர்வாகமும் ஒப்புதல் அளித்து, போக்கு வரத்து போன்ற உதவிகளைச் செய்ய முன் வந்தது.

அதன்படி, சுனாமி தாக்கிய பகுதிகளுக்குச் சென்று, முகாமிட்டு அங்கே பாதிக்கப் பட்டிருக்கும் பள்ளிச் சிறுவர் சிறுமியரிடம், அவர்கள் இழந்த புத்தகம், பேனா, பென்சில் போன்றவை பற்றி விசாரித்துப் பட்டியலிட்டு, கல்லூரியில் சேர்த்திருந்த நிதியிலிருந்து வாங்கிக் கொடுப்பது என்று திட்டமிட்டிருந்தார்கள்.

விடுமுறை தொடங்கி விடுவதால், பத்திலிருந்து பதினைந்து நாட்கள் வரை இந்தப் பணி புரியலாம் என்றும் ஏற்பாடு.

மாணவிகளின் திட்டம் பிடித்துப் போய், மூன்று ஆசிரியைகளும் கூட வருவதாக ஒப்புக் கொண்டிருந்தனர்.

நல்ல விஷயம் என்பதோடு, நிர்வாகம், ஆசிரியர்கள் எல்லோருமே ஆதரவு அளித்ததால், எந்த வீட்டுப் பெரியவர்களும் இதுவரை பிரச்சினை கிளப்பவில்லை.

இப்போது யோகன் வேண்டாம் என்றால், அவளுக்கு எவ்வளவு அசிங்கமாக இருக்கும்!



ஃபைல் பார்த்துக் கொண்டிருந்த யோகேந்திரனிடம், மனதில் கவலைப்பட்டுக் கொண்டேதான் இந்தப் பயணம் பற்றி, மஞ்சரி சொன்னது.

ஆனால், "பரவாயில்லையே! இந்த மாதிரி நல்ல நல்ல ஐடியாக்கள் எல்லாம் கூட, உங்களுக்கு வருமா? நான் என்னமோ, நீங்கள் எல்லோருமாக அடுத்தவரின் நடை, உடை, அன்றைய ஃபாஷன் பற்றிப் பேசிய நேரம் போக, அவ்வப்போது பாடத்தையும் கொஞ்சம் கவனிப்பீர்கள் என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்!" என்று புருவம் உயர்த்தி, அவன் வியக்கவும், மஞ்சரிக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது.

"எல்லா செமஸ்டர்களிலும், இதுவரை முதல் வகுப்பு வாங்கியிருக்கிறேன். நான் அவ்வப்போது பாடத்தைக் கவனிக்கிறவளா? ஆனாலும், உங்களுக்கு வாய்க் கொழுப்பு அதிகம்தான், யோகண்.. இல்லை, யோகன்!"

"தனியாக இருக்கும்போது, அடிக்கடி என் பெயரைச் சரியாகச் சொல்லிப் பழகிக் கொள். அல்லது, என் பெயரே, இப்படி 'யோகண்.. இல்லை யோகன்' ஆகி விடக் கூடும்!"

"அதெல்லாம் ஆகாமல் நான் பார்த்துக் கொள்ளுவேன். ஆனால், உங்கள் பெயரை நெட்டுருப் பண்ணுகிற போது, அந்தப் பெயரில் யாராவது கடவுள் இருந்து காட்சி தந்து விட்டால் என்ன செய்வது என்கிற பயம்தான்!"

"கடவுள் என்ன வருவது? நானே வந்து, என் பக்தைக்குக் காட்சி தந்து விட்டுப் போகிறேன்!"

"உங்கள் பக்தையா? நானா? உதைதான் கிடைக்கும்!"

''போற்றலும், தூற்றலும் போகட்டும் கண்ணனுக்கே என்பார்கள்! உதை என்றால் என்ன? தூற்றுவது என்றால் என்ன? எல்லாம் ஒன்றுதானே? ஏற்றுக் கொள்கிறேன். பக்தையே! இப்போது, உனக்கு என்ன வரம் வேண்டும், சொல்!''

''இந்த அனுமதிக் கடிதத்தில் கையெழுத்திட்டுவிட்டு, அடுத்த வினாடியே, நீங்கள் அந்தர்த்தானம் ஆகிவிட வேண்டும், மகாதேவா!''

''அடுத்த வினாடி அந்தர்த்தானம் ஆக வேண்டுமா? காரியம் ஆனதுமே கழட்டி விடுகிறாயாக்கும்! கெட்டிக்காரி ஆகிவிட்டாய் என்று சொல்லு. ஆனால், பத்மாசுரன் மாதிரி வரம் கொடுத்தவன் தலையிலேயே கையை வைப்பதற்கு, இது மேல்! கடிதத்தைக் கொண்டு வா. கையெழுத்திட்டுத் தருகிறேன்!'' என்று, சிரித்த முகத்துடன் யோகேந்திரன் கேட்கவும், புன்னகையோடு உரிய காகிதத்தைக் கொடுத்து, அவனது கையெழுத்தைப் பெற்றுக் கொண்டாள் அவள்.

ஆனால், இந்த வேடிக்கை உணர்வு அவளுக்கு விரைவிலேயே மாறி விட்டது.

எப்போதும், அவளுக்கு உதவியே வந்திருப்பவன் யோகேந்திரன். அவளது விருப்பத்தை அவன் நிறைவேற்றாமல் இருந்ததே கிடையாது. இப்போது, சம்பந்தமே இல்லாத எவளோ ஒருத்தி, என்னவோ சொன்னாள் என்று, அவன் மீதிருந்த நம்பிக்கையை அலைபாய விட்டாளே! செய்யலாமா?

'தாயில்லாப் பிள்ளையைப் பரிவாகப் பார்த்துக் கொள்வார்கள் என்று எண்ணி...' 'ஐந்து வயதில்,



அவளைத் தோளில் தூக்கி வந்து, இந்த வீட்டு ஹாலில் இறக்கி விட்டு, அவளுடைய தந்தை இந்த மாதிரி ஏதோ சொன்னது, மஞ்சரிக்கு நினைவு இருந்தது. ரொம்பத் தெளிவாக இல்லை என்றாலும், சற்றுக் கலங்கிய தோற்றங்களும் குரலுமாக.

ஏதோ விபத்தில் சிக்கித் தப்பிப் பிழைத்து வந்தார் களோ, என்னவோ? தந்தை முகத்தில், ரத்தம் போலச் சிவப்பாக ஏதோ தெரிந்த நினைவு கூட!

வீட்டுப் பெரியவர்கள் அவரைச் சூழ்ந்து பரபரப் புடன் பேச, மிரட்சியும் பயமுமாக நின்றபோதுதான், மஞ்சரி யோகேந்திரனை முதல் முதலாகப் பார்த்தது.

ஒல்லியாக, உயரமாக... அந்த ஐந்து வயதுச் சிறுமிக்கு, பதிநாலு வயது யோகனையும் அண்ணாந்து தான் பார்க்க வேண்டியிருந்தது. ஆனால், மற்றவர் களைப்போல, அவன் வயதில் ரொம்பப் பெரியவனாக இல்லாததால், அவனைக் கொஞ்சம் நெருங்கினவனாகப் பார்க்க அவளால் முடிந்தது.

'பாப்பாவைப் பார்த்துக் கொள்!' என்று, அவனிடம் யாரும் சொன்னார்களா என்று அவளுக்குத் தெளிவாக நினைவு இல்லை.

ஆனால், ''வா!'' என்று அழைத்துச் சென்று, ஒரு பிஸ்கெட் பாக்கெட்டை உடைத்து, அவளுக்கு உண்ணக் கொடுத்த யோகேந்திரன், உடனேயே அவளுக்கு வேண்டியவனாக ஆகிப்போனான்.

அதன் பிறகு, இன்று வரையிலும் அப்படித்தான்.

யோகேந்திரனுடைய தந்தையோடு, மருத்துவ மனைக்குச் சென்ற தந்தை திரும்பி வரவில்லை. அவரது

வாழ்வு அங்கேயே முடிந்திருக்க வேண்டும் என்பது பல காலத்துக்குப் பிறகு, அவள் ஊகித்து அறிந்தது. தாயின் நினைவும் இல்லாததால், பெற்றவளும் முன்பே போயிருக்க வேண்டும்.

மற்றப்படியும், சந்தோஷமான நினைவுகள் அவளுக்கு வந்ததில்லை. மிகவும் சிரமப்பட்டு யோசித்தால், யாரோ அதட்டி மிரட்டியதுதான் மங்கலாக நினைவு வரும். மனமும் சோர்ந்து போகும். அடித்தது கூட!

எதற்கு வம்பு என்று, பழசு பற்றி யோசிக்காமலே இருக்கப் பழகிக் கொண்டாள் அவள்.

அதற்கு வசதியாக, மஞ்சரியின் முன்னிலையில், அவளுடைய குடும்பம், பழைய வாழ்வு பற்றி இங்கே யாரும் பேச்செடுத்தது கிடையாது.

புதிய வீடு, புதிய பள்ளி, புதிய நண்பர்கள் என்று, புதிய வாழ்வில், முழுக்க ஒன்றிப் போன மஞ்சரிக்கு, இதற்கு முந்திய காலம் என்பது அறவே மறந்து போயிருந்தது.

ஆனால், எந்த விதச் சிக்கலும் இல்லாமல், இவை அனைத்தையும் சாத்தியப் படுத்தியவன், யோகேந்திரன்.

குறிப்பறிந்து செயல் பட்டாலும், வேண்டியது பார்த்துச் செய்தாலும், திலகத்திடம் தேவைக்கு மேல் பேச்சு இராது.

அவ்வப்போது பிரியமாகத் தலையை வருடிவிட்டுப் போகும், ரொம்பப் பெரியவரான கார்த்திகேயனைப் பார்க்கையில், பாதுகாப்பாக உணர்ந்தாலும், அவரிடம் சகஜமாகப் பேச மஞ்சரிக்குத் துணிவு வராது.



'யோகண்ணா, யோகண்ணா...' என்று யோகேந்திரனின் காதுக்குள் மஞ்சரி ரீங்கரிக்க, அவன்தான் பெற்றோரிடம் சொல்லி, அவளுக்கு வேண்டியதைச் செய்ய வைப்பான்.

பொறுமையாகப் பாடம் சொல்லிக் கொடுத்தது, அவன் செய்த இன்னொரு பேருதவி. ஏனெனில், அவள் பள்ளிப் பாடம் என்று, அதுவரை சரியாகப் படித்திருக்க வில்லை.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பாகக் கார்த்திகேயன் இறந்ததில் இருந்து, எப்படித் தந்தையின் இடத்தில் அமர்ந்து தொழிலைக் கவனித்தானோ, அதே போல மஞ்சரியுடைய கார்டியனும் அவனே என்று ஆயிற்று.

அது அவளுக்கு வசதியாகவும் இருந்தது. ஏனெனில், யோகேந்திரனிடம் ஒன்றைக் கேட்பது, அவள் தன்னைத் தானே கேட்பது போல. அன்னியமாய் உணர்ந்ததே கிடையாது.




பெரியவரின் மறைவினால், மஞ்சரியின் வாழ்வில் பெரிய மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை.

வீட்டில் கம்பீரமாக நடமாடிய ஒரு பெரியவர் இல்லாது போன துக்கம், கொஞ்ச நாள் அவளைப் பாதித்தது. அதை விடவும், திலகத்தின் வாட்டம், மஞ்சரியை அதிகமாகப் பாதித்தது எனலாம்.

ஏற்கெனவே அதிகம் பேசாத அந்தப் பெண்மணியின் பேச்சு, முன்னிலும் குறைந்து போயிற்று.

கூடவே, அவனது தொழிலில் பாதிப் பங்குதாரரான சிவநேசனின் வருகை, முன்னைவிடச் சற்று அதிகரித்தது. முன்பு எப்போதாவது ஒரு முறை வந்து உட்கார்ந்து விருந்துண்டுவிட்டுப் போகிறவர், இப்போது மாதம் ஒரு தரம் கட்டாயம் வந்தார்.

சிவநேசன் எப்போது வந்தாலுமே, மஞ்சரிக்குச் சங்கடமாகத்தான் இருக்கும்.

கார்த்திகேயனை விடவும் சற்று வயதில் பெரியவர் அவர். கார்த்திகேயனைப் போலவே, அவளிடம் பிரியமாகத்தான் இருப்பார்.

ஆனால், 'பாடத்தைக் கொண்டு வா. முந்திய தேர்வில் எத்தனை மதிப்பெண்? யார் சினேகிதி? எந்த ஆசிரியை பிடிக்காது? ஏன்?' என்று துருவுவார். அதை விடவும் பாடப் புத்தகத்தைக் கொண்டு வரச் சொல்லிக் கேள்விகள் வேறு கேட்கத் தொடங்கி விடுவார்.

அந்த இரண்டும் கெட்டான் வயதில், அவர் அப்படித் துருவிக் கேட்பதே தப்புக் கண்டு பிடிப்பதற்காகவோ என்று அவளுக்குத் தோன்றும். தெரிந்த பாடம் கூடத் தெளிவாக வாயில் வராது.

கடைசியில், "விடுங்கள், அங்கிள். எல்லாம் அவளுக்குத் தெரிந்த பாடம்தான். என்னவோ, நீங்கள் கேட்கிற தினுசில் குழம்பிப் போகிறாள். அவளது ரிப்போர்ட் கார்டைப் பாருங்கள். உங்களுக்கே புரியும்!" என்று, யோகேந்திரன்தான் அவரிடமிருந்து அவளை விடு வித்து அனுப்புவான்.



ஏதோ ஒரு பெரிய இக்கட்டில் இருந்து தப்பினாற் போல, மஞ்சரி ஓடி விடுவாள்.

அப்போதே, சிவநேசனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்ற எண்ணம்தான் அவளுக்கு.

"அதெல்லாமில்லை., உன் மீது உள்ள அக்கறையால் தான் கேட்கிறார்!" என்று யோகேந்திரன் அவளுக்குச் சமாதானம் சொல்லுவான்.

காரணம், அவளுடைய தந்தை, யோகேந்திரனுடைய தகப்பனார், சிவநேசன் மூவரும் சிறு வயதில் இருந்து நெருங்கிய நண்பர்களாம். அந்தப் பாசம்தான் அவருக்கும் என்பான்.

அதை மெய்ப்பிப்பது போல, அவ்வப்போது, வெளியூர் சென்று வரும்போது, சிவநேசனும் மஞ்சரிக்குத் தனியாக ஏதாவது வாங்கி வருவார்.

ஒரு சில ஆண்டுகளில், அவரது வீட்டில் வந்து இருக்கும்படி அவர் கேட்டபோது, "பார்த்தாயா? பாசம் இல்லாமல் கூப்பிடுவாரா?" என்றும் அவன் கேட்டதுண்டு.

ஆனாலும், அவளுக்கு என்னவோ, அந்த வீட்டை விட்டுத் தன்னை வெளியேற்றச் சிவநேசன் முயற்சிப்ப தாகத்தான் தோன்றியது.

அதற்கு ஏற்றாற்போல, ஒரு நாள் அவரது குறுக்கு விசாரணையிலிருந்து தப்பி, அறைக்குள் முடங்கியிருந்த போது, தண்ணீர்த் தாகம் எடுத்துவிட, ஓசையின்றி இறங்கி வந்து தண்ணீர் குடிக்கச் சென்றபோது, முன்னறையில் அவர் பேசிக் கொண்டிருந்தது அவள் காதில் தெளிவாக விழுந்தது.

''நீங்கள்தான் மற்றவர்களின் பேச்சைப் பொருட்படுத்துவதே இல்லையே! சொன்னாலும் கேட்பது இல்லை!'' என்று குறை கூறும் பாவனையில் சொல்லிக் கொண்டிருந்தார் அவர்.

''நீங்கள் அவசியமற்றுக் கவலைப் படுகிறீர்கள், அங்கிள்!'' என்றான் யோகேந்திரன்.

''அது பச்சை மண், அண்ணா!'' என்று தன் மெல்லிய குரலில் சொன்னாள் திலகம்.

பெயரைக் குறிப்பிடாவிட்டாலும், இது தன்னைப் பற்றிய பேச்சே என்று, அந்தப் பதினாறு வயதிலும், மஞ்சரிக்கு நிச்சயமாகத் தோன்றிற்று.

ஏன் இந்த மனிருக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்று, அவளுக்கு ரொம்பவும் வருத்தமாக இருந்தது. அதிலும், அவருடைய தங்கை மகள் சென்ற விடுமுறைக்கு வந்து விட்டுப் போனதில் இருந்து, அவர் தன்னை வெறுக்கவே செய்கிறார் என்று, மஞ்சரி நிச்சயமாக நினைத்தாள்.

ஆனால், யோகேந்திரனின் தொழிலிலும், வாழ்விலும் முக்கியப் பங்கு வகிக்கும் அவரைப் பற்றி, அவனிடம் ரொம்பவும் குறை கூறக் கூடாது என்று எண்ணித் தன்னை அடக்கிக் கொண்டாள், அவள். ஆனால், உள்ளூர ரொம்பக் கவலை.

எப்படியிருந்தாலும், யோகேந்திரனைவிடச் சிவநேசன் ரொம்பப் பெரியவர். அவனுடைய தந்தையை விடவும், அதிக வயதுக்காரர். 'அங்கிள்' என்று அவனால் மதிப்பும் பிரியமுமாக அழைக்கப் படுபவர். தொழிலிலும் பங்குதாரர். அப்படிப்பட்ட அவர் ஒன்று சொல்லி,



அதை ஒரேயடியாக மறுப்பது சரியில்லை என்று, அவரது சொல்லுக்கு யோகேந்திரன் பணிந்து விட்டால்...?

எனவே மறுமுறை சிவநேசன் அவளை அழைத்த போது, திலகத்தின் தோளில் முகத்தை மறைத்துக் கொண்டு, ''நான் அத்தையை விட்டு எங்கேயும் போக மாட்டேன்!'' என்று மறுத்தாள், பெண்.

அவள் தலையை வருடி, ''ஷண்முகம் அண்ணன் என் கையில் கொடுத்தார். இவன் அப்பாவும்... இருக்கட்டுமே!'' என்றாள் திலகமும்.

''இந்த அண்ணனும், தங்கைக்காகவே...'' என்று தொடங்கிய சிவநேசனின் பேச்சில் குறுக்கிட்டு, ''அப்பாவின் விருப்பம் பற்றி, அம்மா சொன்னார்களே, அங்கிள், அதற்கு மேல் பேச என்ன இருக்கிறது? விட்டு விடுங்கள்!'' என்று யோகேந்திரன் தீர்மானமாகக் கூறியதோடு அன்று அந்தப் பேச்சு நின்றது.

அன்று மட்டும் அல்ல. அதன் பிறகு ஒரு போதுமே, அவளைத் தன் வீட்டுக்கு வருமாறு சிவநேசன் அழைத்தது இல்லை. ஆனால், கேட்டுப் பயன் இல்லை என்று சும்மா இருக்கிறாரே தவிர, அவள் இந்த வீட்டில் இருப்பதில் அவருக்கு ஒப்புதல் இல்லை என்ற எண்ணம், மஞ்சரியுள் மறையவே இல்லை.

அவளது வீட்டில், அவள் இருக்கிறாள். இதைப் பற்றி, இந்த மனிதர் என்ன சொல்வது என்ற ஆத்திரம் வேறு. எனவே, முடிந்த வரையில், அவரைக் கண்டாலே தேவைக்கு மேல் ஒரு கணம் கூட நில்லாமல் ஒதுங்கிப் போய் விடுவாள் அவள்.

உண்மை! திலகமும், யோகேந்திரனும் அவளை நடத்திய விதத்தில், அந்த வீடு, அவளுக்குச் சொந்த வீடாகத்தான் தோன்றியது.

மறுநாள் மஞ்சரி கல்லூரிக்குக் கிளம்புகையில், ''முடிந்தவரை, பத்து நாட்களிலேயே திரும்பிவிடப் பார், மஞ்சு! அடுத்த வாரக் கடைசியில், நானும் தொழில் விஷயமாக டெல்லிக்குப் போக வேண்டியிருக்கிறது. அதற்குள் நீ வந்து விட்டால், நன்றாக இருக்கும்!'' என்றான் யோகேந்திரன்.

லேசாகப் புருவம் சுழித்து, ''டெல்லியில் எத்தனை நாள்?'' என்று சிறு எரிச்சலுடன் கேட்டாள் மஞ்சரி.

''உன்னது மாதிரிதான். நீ பத்து நாட்கள், அல்லது இரண்டு வாரங்கள். நான் ஒரு வாரம், அல்லது பத்து நாட்கள்!'' என்று முறுவலித்தான் அவன்.

''ம்ம்ம்...'' என்று பதிலுக்கு அரைகுறையாகப் புன்னகை செய்தாள் அவள்.

யோகேந்திரன் ஊரில் இல்லாவிட்டால், இங்கேயே ரொம்பப் போரடிக்கும்!

அவளுக்குக் கூடப் பேச ஆள் இராது.

இரவில் எவ்வளவு தாமதமாக வந்தாலும், காலையில் பத்திரிகை படிக்கும்போதும், சிற்றுண்டியின்போதும் அவனிடம் ஊர்க் கதை எல்லாம் அளப்பாள். அது முடியாது.

திலகம் வழக்கம் போலச் சுந்தர காண்டத்திலும், பூஜையிலும் மூழ்கியிருக்க, அவள் மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருக்க வேண்டும்.



அது போகச் சின்னச் சின்னப் பிரச்சினைக்கும், சிவநேசனிடம் போய் நிற்க வேண்டும்.

அன்றாட நடவடிக்கைகள் பற்றி, அவரிடம் தெரிவிக்க வேண்டும்.

யோகேந்திரன் திரும்பி வரும்வரையிலும், அவளும் திரும்பி வராமல் இருக்க நேர்ந்தால், எவ்வளவோ நன்றாக இருக்கும் என்று நினைத்தாள் மஞ்சரி.

யோகேந்திரன் இல்லாத வீட்டை எண்ணி, அப்போது அவள் சாதாரணமாக நினைத்ததுதான். ஆனால், தனது பயணத்தை முடிக்கவே விரும்பாமல் இன்னும், இன்னும் பலப்பல நாட்களுக்கு நீட்டிக்கத் தான் மிகவும் ஆசைப் படக்கூடும் என்று, அப்போது அவளுக்குத் தெரியாது.

அவளுடைய வகுப்புத் தோழி ப்ரீதியுடைய அண்ணன் செல்வேசனை, அந்தச் சேவை மையத்தில் சந்திக்கப் போவதும் அவளுக்குத் தெரியாது.

ஏன்? ப்ரீதிக்கே அவளுடைய அண்ணனை அங்கே கண்டது ஆச்சரியம் என்றுதான் தோன்றியது.

மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பணிபுரிந்த அவன், அந்தப் பகுதியில் நாசத்தை மதிப்பீடு செய்யும் குழுவில் இடம் பெற்று அங்கே வந்திருந்தது, கடவுளின் செயல் என்று ப்ரீதி சொல்ல, மஞ்சரியும் அதை உள்ளூர ஆமோதித்தாள்.

முதலில் உள்ளூர! பிறகு வெளிப்படையாக!

செல்வேசனின் சொந்த வேலை எப்படி நடந்ததோ என்னவோ, தங்கைக்கு உதவி செய்வதுதான் அவனுக்கு முக்கியமாக இருந்தது.

அது பற்றி, அவனே சொன்னான். செல்வேசனுடைய மேலதிகாரி வீட்டில், நாலு அண்ணன்மாருக்கு ஒரே தங்கையாம். அனைவரின் அன்பையும் கவர்ந்த பெண்ணுக்குத் திருப்தியாக எதையும் செய்ய முடியாமல், புகுந்த வீட்டுக் கொடுமையில், சீக்கிரமே செத்துப் போனாளாம்! அதனால், யாரேனும் தங்கை என்று சொன்னாலே, உருகிவிடுவாராம்! ''என்ன பெரிய வேலை, செல்வம்? தங்கை கூடவே இருந்து வேண்டியதைச் செய்து விட்டு வா! இங்கே நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று அனுப்பினாராம்.

மேலதிகாரியே சொன்ன பிறகு, யார் அவனைக் கேட்பது?

ஆனால், மூன்று பேராகச் சேர்ந்து செல்லும்போது, அவன் தன் தங்கைக்கு மட்டுமாக எதையும் செய்ய முடியுமா?

'நெல்லுக்கிறைத்த நீர், வாய்க்கால் வழிந்தோடிப் புல்லுக்கும் அங்கே பொசியுமாம்!' என்பதுபோல, ப்ரீதிக்காக அவன் செய்த உதவிகள் மஞ்சரியையும் போய்ச் சேர்ந்தன.

வெய்யிலில் தொண்டை காய்ந்து நின்றபோது, கூட இருந்த மற்றவர்களுக்கும் சேர்த்தே, செல்வேசன் 'கூல்டிரிங்க்' வாங்கிக் கொடுத்தான். எங்கோ போய் அலைந்து திரிந்து, நல்ல அசலாகப் பார்த்து வாங்கி வந்து, அந்தக் குழுவில் இருந்த மூவரின் நன்றியையும் சேர்த்துப் பெற்றான்.

மாணவிகளை இரண்டு, மூன்று பேராகப் பிரித்து, பத்து வீடுகளில் பிள்ளைகளிடம் விசாரித்து, தேவைகளைப்



பட்டியலிட்டு வருமாறு அனுப்பினார்கள். இந்தப் பத்து சீக்கிரமாக முடிந்து விட்டால், ஆசிரியை அடுத்த இடத்துக்கு அனுப்புவார்கள்.

ப்ரீதி, ஆசிரியையிடமே சென்று, மஞ்சரியும் தானுமாகச் செல்வதாகக் கேட்க, ஆசிரியையும் மறுக்கவில்லை. மறுக்கக் காரணமும் இல்லையே! எல்லோருமே சக மாணவிகள். ஒருவருக்கொருவர் ஒத்துப் போகிறவர்களாக இருந்தால் நல்லதுதானே!

இரண்டு நாட்கள் கூடவே ஒட்டிக் கொண்டு அலைந்த பிறகு, இங்கே தான் அதிகப்படி என்று உணர்ந்து, அவர்கள் குழுவில் இருந்த இன்னொருத்தி, இன்னோர் - இரண்டு பேர்க் குழுவில் போய்ச் சேர்ந்து கொண்டாள்.

மறுநாள், செல்வேசன் இரண்டு குடைகளைக் கொண்டு வந்தான். வெய்யிலின் பூவி கதிர்களால், இரு பெண்களும் கறுத்துப் போய்விடுவார்களாம்! மஞ்சரியின் இயற்கையான தங்க நிறம் மாறுவதை, அவனால் தாங்க முடியவில்லையாம்!

கடைசியில், இரு குடைகளையும் ஒட்டிப் பிடித்து, அவனையும் நிழலில் நடத்திப் போனார்கள் அந்தப் பெண்கள்.

ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து, குறிப்பெடுத்த மஞ்சரி வியர்வையை வழித்தெறியவும், ஓடிப்போய், ஒரு பனை ஓலை விசிறியை விலைக்கு வாங்கிக் கொணர்ந்து, அவன் விசிறவும், அவளுக்குக் கூச்சமாகிப் போயிற்று.

உள்ளூர மனதில் பூரிப்பாகவும்!

வீட்டில் எல்லோரும் பிரியமாக இருக்கிறார்கள் என்றால், அடிப்படையாக அதற்கு ஒரு காரணம் இருந்தது. அவளுடைய தந்தையின் மீது, அந்தக் குடும்பம் முன்னர் வைத்திருந்த அன்பு, அவருடைய மகளையும் அரவணைத்துக் கொண்டது. பின்னர் அந்த அன்பு வளர்வதும் இயல்பாயிற்று.

காரணத்துக்கும், காரியத்துக்கும் அங்கே ஒரு தொடர்பிருந்தது.

ஆனால், இந்த செல்வேசன் ஒரு காரணமும் இல்லாமலே, இவ்வளவு பிரியம் காட்டுகிறானே!

ஒரு தேவதையைப் போலல்லவா நடத்துகிறான்!

சில சமயங்களில், ''போரடிக்கிறதுப்பா!'' என்று ப்ரீதி பாதியில் எங்காவது உட்கார்ந்து கொண்டால், வேலையை முடிப்பதிலும், செல்வேசன் மஞ்சரிக்கு வேண்டிய உதவி செய்வான்.

அவன் ஒளிவு மறைவாக வந்து பழகவுமில்லை.

பொறுப்பான ஆசிரியைகளை நேரில் சந்தித்துத் தான் இன்னார் என்று தெரிவித்து, தங்கைக்கு உதவி செய்ய அவர்களிடம் அனுமதியும் பெற்றுக் கொண்டுதான் செய்தான்.

தங்கைக்கும் மேலாக, மஞ்சரிக்கு உதவி செய்தான் என்பது வேறு விஷயம்.

தினமும் அவளைச் சந்தித்துப் பெரும்பான்மை நேரம் கூடவே இருந்து பழகிப் போனதாலோ என்னவோ, ஒரு



நாள் செல்வேசன் தாமதமாக வரவும், மஞ்சரி தவித்துப் போனாள்.


என்னென்னவோ ஆபத்து, விபத்துகளை மனதில் சித்தரித்துப் பயந்துவிட்டுப் பொறுக்க முடியாமல், ''உன் அண்ணனை இன்னும் காணோமே!'' என்று, ப்ரீதியிடமே கேட்டாள்.

''அதுதான் எனக்கும் கவலையாக இருக்கிறது!'' என்ற அவளது பதில், மஞ்சரியை மேலும் கலக்கிவிட, மேற்கொண்டு வேலை ஓடாமல் அப்படியே நின்றுவிட்டாள் அவள்.

ஆனால், சற்று நேரத்திலேயே, வாயகன்ற மூன்று பாட்டில்களில் பனை நுங்கு போட்ட பதனீருடன் செல்வேசன் வந்து, ''இப்படி நுங்கு போட்ட பதனீர் அருந்தியதே இல்லை என்று நேற்றுச் சொன்னாயல்லவா? எங்கள் அலுவலகத்திலிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு பனை மரத் திரடு இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே போய், ஒரு பனை ஏறுகிறவனைத் தேடிப் பிடித்து, நுங்கு, பதனீர் எல்லாம் இறக்கிக் கலந்து கொண்டு வந்தேன்!'' என்று கூறவும், சற்று நேரம் மஞ்சரிக்குப் பேச்சு, செயல் ஒன்றும் தன் வசப்படவில்லை.

யோகேந்திரனும், அவளுக்காக நிறையச் செய்வான் தான். ஆனால், அதற்குக் காரணம் இருந்தது. சிறு வயதிலிருந்து சேர்ந்து வளர்ந்த பாசமும் இருந்தது. எனவே, அவள் கேட்டதை எல்லாம் நடத்தி வைத்தான்.

இப்படி எந்தக் காரணமும் இல்லாமலே ஒருவன் உருகுவது என்றால்... கேளாமலே செய்வது என்றால்... இதற்கு ஒப்புவமையே இல்லையே!




செல்வேசன் அன்பை எண்ணி, மஞ்சரி சில கணங்கள் தன்னை மறந்து நின்றாள்.

நுங்கு போட்ட பதனீருக்காக, அவனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்பதுகூடத் தோன்றாத நிலை.

அந்த நிலையில், "அண்ணா, நீ வரத் தாமதம் ஆனதும் உனக்கு என்னவோ, ஏதோ என்று மஞ்சரி பயந்து விட்டாள்!" என்று ப்ரீதி போட்டு உடைக்கவும், செல்வேசன் இன்னமும் உருகினான்.

"ஐயோ! உன்னைக் கவலைப்பட வைத்துவிட்டேனே! இதை எப்படியாவது, உனக்கு வாங்கி வந்து விட வேண்டும் என்ற வேகத்தில், நேரமே மறந்து விட்டது. தயவு பண்ணி, என்னை மன்னித்து விடுகிறாயா, மஞ்சரி?" என்று அவன் வருந்திக் கேட்க, அவளுக்குக் கண்கள் கலங்கி விட்டன!

பாவம்!

செல்வேசன் தாமதமாக வர நேர்ந்த காரணமே, அவள்தான்!

அவனுக்கு அனாவசியமாக வேலை இழுத்து வைத்ததற்காக மன்னிப்புக் கேட்க வேண்டியவளும், அவளேதான். அலைந்து திரிந்து, ஆளைப் பிடித்துப் பதனீரும்



நுங்கும் அவளுக்காகத்தானே கொண்டு வந்திருக்கிறான்!

பார்த்தால், அவன் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு நிற்கிறான். காரணம், அவன் வரக் காணோமே என்று, இரண்டு தரம் அவள் எட்டிப் பார்த்து விட்டாளாம்!

கழிவிரக்கம் தாக்க, தன்னால் நேர்ந்த தொல்லைக்காக மஞ்சரி மன்னிப்புக் கேட்க, அவன் நாசூக்காக மறுக்க, அவள் மன்னிப்புக் கேட்டலை வலியுறுத்திவிட்டுப் பதனீருக்காக நன்றி கூற, என்ன பெரிய விஷயம் என்று அவளது நன்றியுரையை அவன் மிகவும் பெருந்தன்மையாக ஒதுக்கி விட்டுப் பதனீரை எடுத்துக் கொடுத்தபோது, இருவரும், 'மஞ்சு'வும் 'செல்வா'வும் ஆகிப் போயிருந்தனர்.

செல்வேசன் தந்த பிளாஸ்டிக் ஸ்பூனால், நுங்குத் துண்டுகளை எடுத்து உண்டவாறு, பதனீரின் சுவைக்காக மீண்டும் நன்றி சொல்லும்போதுதான் ப்ரீதியைக் காணோம் என்பதை, மஞ்சரி கவனித்தாள்.

"ஐயோ, ப்ரீதி எங்கே, செல்வா?" என்று கவலையோடு சுற்று முற்றும் கண்களால் சலித்தவாறு கேட்டாள் அவள்.

தூரமாய்க் கடற்கரையை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தாள் அவள்.

ஓடிப்போய், அவளை எட்டிப் பிடித்துக் கேட்டபோது, "நீங்கள் இருவரும், ஒருவர் மாற்றி ஒருவர் மன்னிப்புக் கேட்பதும், நன்றி சொல்வதுமாக எனக்குப் போரடித்தது. கடற்கரை ஓரமாக நடந்தபடி, இந்தப்

பதனீரைக் குடித்தால் நன்றாக இருக்கும், போல்த் தோன்றவும், வந்து விட்டேன். நான் இவ்வளவு தூரம் வரும் வரை, நீங்கள் இருவரும் கவனிக்கவே இல்லையே! அவ்வளவு சுவாரசியமாக, அப்படி என்னதான் பேசினீர்கள்?'' என்று கேட்டு, இருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள் அவள்.

முகம் சூடாவதை மறைக்க, எங்கேயோ பார்த்தாள் மஞ்சரி.

கணக்கெடுப்பு முடிந்து, கல்லூரிக் குழு சென்னைக்குக் கிளம்பியபோது, வேலைக்கு லீவு போட்டுவிட்டுச் செல்வேசனும் மறுநாளே சென்னைக்கு வந்து விட்டான்.

''பன்னிரண்டு நாட்களாக நம்மோடு சுற்றிவிட்டுத் தனியாக இருக்கக் கஷ்டமாக இருந்ததாம்! தங்கையை விட்டுப் பிரிந்து இருக்க முடியவில்லை என்று கேட்டதும், அந்தத் தங்கைப் பைத்திய மேல் அதிகாரி வேண்டிய லீவு கொடுத்து விட்டாராம்! ஆனால், எனக்கு ஒரு சந்தேகம்...'' என்று, மறுநாள் அவளைப் பார்க்க வந்த ப்ரீதி இழுத்தாள்.

''என்ன சந்தேகம்?'' என்று, புரியாமல் வெகுளியாய்க் கேட்டாள் மஞ்சரி.

''அண்ணனால் விட்டுப் பிரிந்து இருக்க முடியாதது, அவருடைய தங்கையையா, அல்லது வேறு ஓர் அழகான பெண்ணையா, என்ற சந்தேகம்!'' என்று ப்ரீதி பாவனையோடு சொன்னபோது, மஞ்சரியின் முகம் ரொம்பவே சிவப்பாகிப் போயிற்று.

மிச்சம் இருந்த விடுறை போரடிக்காமல் இருப்பதற்காக, மஞ்சரி ஒரு பெயிண்டிங் வகுப்பில் சேர்ந்திருந்தாள்.



அன்று மாலையில், பூங்காவில் செல்வேசனோடு சேர்ந்து உட்கார்ந்து, அவன் வாங்கித் தந்த ஐஸ்க்ரீமைச் சாப்பிட்டு விட்டுத் தாமதமாக வீட்டுக்குப் போனாள், மஞ்சரி.

கேள்வியாக நோக்கிய திலகத்திடம், பெயிண்டிங் வகுப்பில் ரொம்ப நேரம் சொல்லிக் கொடுத்ததாகப் பெயிண்டிங் பொருட்களை அலமாரியில் வைத்தவாறு, பொய் சொன்னாள்.

நல்ல வேளையாகக் காலையில் மஞ்சரி வீடு வந்து சேர்ந்த சிறிது நேரத்திலேயே, யோகேந்திரனும் டெல்லிக்குக் கிளம்பிச் சென்று விட்டபடியால், அவனிடம் விளக்கம் ஏதும் தர வேண்டிய அவசியம் இல்லாது போயிற்று.

ஆனால், வீட்டில் பொய் சொல்கிறாமே என்ற உறுத்தல், மஞ்சரியின் மனதைக் கொஞ்சம் குடையத் தான் செய்தது.

ஆனால், சும்மாவே முந்திய தலைமுறை, அதிலும், கணவர் இறந்த பிறகு, அரை நூற்றாண்டு பின்னோக்கிப் போய்விட்டவளிடம், சின்னவள் தன் பரபரப்பையும், குறுகுறுப்பையும் சொன்னால், அவளால் சரியான விதமாக ஏற்க முடியுமா?

புரிந்து கொள்ளாமல், பழங்காலக் கட்டுத் திட்டங்களைப் புகுத்தினால், இவளால் ஏற்க முடியாது.

எதற்கு வீண் வம்பு, என்றுதான் இந்தச் சின்னப் பொய் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள் மஞ்சரி.

இதுவே, யோகேந்திரன் வீட்டில் இருந்தால், மனதை அப்படியே, அவனிடம் கொட்டி விடலாம். கொட்டி விட்டு, என்ன செய்வது என்று, அவனிடமே ஆலோசனைகூடக் கேட்கலாம்.

ஆனால், யோசித்துப் பார்க்கையில், ஆலோசனை கேட்பதற்கு அவசியம் ஏதும் இல்லை என்றே மஞ் சரிக்குத் தோன்றத் தொடங்கியிருந்தது.

செல்வேசனைப் போல அவளிடம் அன்பு காட்டுகிற ஒருவன் உலகத்தில் இனிமேல்தான் பிறந்தாக வேண்டும்! அந்த அளவு பிரியம் அவனுக்கு.

எங்கேனும் உட்காரப் போனால், அவனது கைக்குட்டை யால், அந்த இடத்தைச் சுத்தம் செய்த பிறகுதான் உட்கார விடுவான். தன் கைக்குட்டை அழுக்காகுமே என்ற எண்ணமே கிடையாது. அந்த மாதிரிப் பாசம்.

'கண்கள் பாடுதே, காதல் காவியம்!' என்ற ஒரு பாடல், அதற்கு உதாரணம் போல, அவளைப் பார்த் தாலே, அவன் பார்வையில் கனிவு சொட்டும்.

தினமும், பெயிண்டிங் வகுப்பு முடிகிற நேரம் அங்கே வந்து காத்திருப்பான்.

இருவருமாகப் பூங்கா, சின்ன காபி ஷாப், ஐஸ்கிரீம் பார்லர் என்று எங்கேனும் உட்கார்ந்து பேசுவார்கள்.

காதலிப்பதாக இன்னமும் அவன் சொல்லவில்லையே தவிர, பார்வையாலும் செயலாலும், அதைத் தெளிவாகக் காட்டினான் அவன்.

மூன்று நாட்கள் இப்படிக் கடந்தன.

வீட்டிற்குத் தாமதமாகச் செல்வதைத் தவிர்க்க முடிய வில்லை.



திலகத்தின் கண்ணைப் பாராமல் பெயிண்டிங் பொருட் களை வைத்துவிட்டு, கைகால் கழுவுகிற சாக்கில், மஞ்சரி ஓடி விடுவாள்.

நாலாவது நாள், ப்ளஸ் டூ வரை அவளோடு பயின்று விட்டு, மருத்துவம் படிக்கப் போன அவளுடைய நீண்ட நாள் உயிர்த் தோழி வந்தனா அவளது வீட்டுக்கு வந்தாள்.

இருவருமாக அரட்டை அடித்த வேகத்தில், பெயிண்டிங் வகுப்பையே மஞ்சரி மறந்து போனாள்.

ஐந்தரை மணிக்குச் செல்வேசன் போன் செய்யும்வரை, அவளுக்கு வேறு நினைவே வரவில்லை.

வருத்தமும் கோபமுமாய்ச் செல்வேசனின் குரலைக் கேட்டதும், அவன் பெயிண்டிங் வகுப்பு வாசலில் காத்துக் கிடந்திருப்பானே என்ற நினைவு வர, 'ஐயோ' என்றாகிவிட்டது.

அவசரமாக நடந்ததை அவள் கூறி, மறந்துவிட்ட தற்காக மன்னிப்பு வேண்டினாள்.

ஆனால், சற்று நேரம் அவனிடமிருந்து பேச்சே இல்லை.

அவள் சாரி சொல்லவும், ''நாளையாவது என்னை மறக்காமல் வருவாயல்லவா?'' என்று கேட்டு, போனை வைத்துவிட, அவளுக்குச் சற்று நேரம் ரொம்பச் சங்கடமாகிப் போயிற்று.

''என்ன? என்ன?'' என்று கேட்ட வந்தனாவிடம், திலகத்தைக் கண்ணால் காட்டி விட்டு, வேறு பேசினாள்.

வாயில் வரை சென்று, தோழியை வழியனுப்புகை யில், வந்தனா மீண்டும் வினவ, ''யாரிடமும் சொல்லி

விடாதே, வந்தனா. இன்னும், செல்வா வெளிப்படையாகச் சொல்லவில்லை. அத்தோட, யோகண்.. யோகனிடம்தான், நான் முதலில் சொல்ல வேண்டும்...'' என்று பெரிய பீடிகையுடன் மஞ்சரி தொடங்கினாள்.

ஆனால், அதற்குள் பொறுமை யிழந்து, ''இப்படி இழுத்தாயானால், நீ விஷயத்தைச் சொல்லுமுன், நாளையாகி விடும்! அவ்வளவு நேரம் என்னால் காத்திருக்க முடியாது! நீ ஒரு வழியாய் விவரத்தைச் சொல்லத் தொடங்குமுன், வீட்டுக்குப் போய்த் தூங்கி விழித்து, நாளைக்குக் காலையில் வரட்டுமா?'' என்று சாதுவாய் வந்தனா கேட்க, இருவருக்குமே சிரிப்பு வந்தது.

''சே. போப்பா! நீ சுத்த மோசம்!'' என்று விட்டு, மஞ்சரி செல்வேசன் பற்றிச் சினேகிதியிடம் கூறினாள்.

''ப்ரீதியுடைய அண்ணனா? எந்த ப்ரீதி... ஓ நம் பள்ளிக்குப் பின் புறமாய்க் கொஞ்ச தூரத்தில், நெருக்கமாய் நிறைய ஃப்ளாட் உண்டே, அங்கிருந்து வருவாளே, அந்த ப்ரீதியா? அவளுடைய அண்ணன் என்றால்...''

''என்றால் என்ன? அவர்கள் வீட்டில், கொஞ்சம் வசதிக் குறைவு! அதைத்தானே சொல்ல வருகிறாய்? ஆனால், செல்வேசனின் அன்பு யாருக்கு வரும்? அந்த மாதிரி அன்புக்காகக் கஞ்சியைக் குடித்துக் கொண்டு குடிசையில்கூட வாழலாம், தெரியுமா?'' என்று மஞ்சரி படபடக்கவும், சரணாகதியாய்க் கையை உயர்த்தி, ''சரி சரி! உன் வாழ்க்கை, உன் விருப்பம், யோசித்தேன். அவ்வளவுதான்!'' என்றாள் வந்தனா.



''அதற்கும் நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன், வது! ஆனால், எல்லாமே நல்லபடியாகத்தான் நடக்கும்!'' என்றாள் மஞ்சரி, நம்பிக்கையோடு.

''அப்புறம் என்னம்மா? ஐமாய்..! மறந்துவிட்டேனே, மனமார்ந்த வாழ்த்துக்கள்! ஆமாம், உன் யோகண்ணன் எப்படி இருக்கிறார்? பார்த்து ரொம்ப காலம் ஆயிற்று. அவர்.. அந்தக் காதல் தோல்விக்குப் பிறகு, திருமண எண்ணத்தையே விட்டு விட்டார் போல! அல்லது, அவரும் யாரையாவது காதலிக்கிறாரா?'' என்று வந்தனா கேட்கவும், மற்றவளின் கண்கள் அகன்றன.

இன்னொரு காதலா? யோகனுக்கா?

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பாக, அந்த அனிதாவோடு அவனைப் பார்க்கும்போது, பொருந்தாமல், பிடிக்காமல், மஞ்சரிக்கு எப்படியோ இருக்கும். ஏன், யோகேந்திரனே ஏதோ சங்கடப்பட்டுக் கொண்டு நிற்பது போலத்தான் இருக்கும். அவள் ஒரேயடியாக விலகிப் போன பிறகுதான், பழைய மாதிரி நன்றாக இருக்கிறது!

இத்தனை ஆண்டுகள் நிம்மதியாகவும் கழிந்திருக்கின்றன.

இப்போது, இவ்வளவு காலம் கழித்து, அவனுக்கு இன்னொரு காதலா?

''சேச்சே! இனிமேலா?'' என்றாள் மஞ்சரி. ''அந்த அனிதாவை அவர் ரொம்பவே காதலித்திருப்பார் போல. அவள் அவரை விட்டு விட்டுப் போன பிறகு, அந்த மாதிரி உணர்வுகள் எல்லாவற்றையுமே, அவர் மூட்டை கட்டி, மூலையில் போட்டு, ஆண்டுக் கணக்கில் ஆகிறதே! பாவம் யோகண்.. யோகன்!''

''அதென்னப்பா, யோகன்.. யோகன் என்று இரட்டைக் கிளவி மாதிரி, இருதரம் பெயர் சொல்கிறாய்?'' என்று விசாரித்தாள் வந்தனா.

யோகேந்திரன் சொன்ன காரணத்தைக் கேட்டதும், வந்தனாவுக்கும் சிரிப்பு வர, ''அத்தை மகன் அண்ணன் என்றால், வேடிக்கைதான்! இவ்வளவு காலம் அதை யாரும் கவனியாததும் அதிசயம்தான்! அது திடுமென மிஸ்டர் யோகேந்திரனுக்கு உறுத்தியிருப்பதும் விசித்திர மாகத்தான் இருக்கிறது!'' என்று முறுவலித்தவாறே அவள் கிளம்பினாள்.

வந்தனாவை வழியனுப்பிவிட்டு, மெதுவாக நடந்து உள்ளே செல்லும்வரை, மஞ்சரிக்கு யோகேந்திரனின் காதல் பற்றிய யோசனைதான்.

'எந்தச் சுமையையும் நான் சுமக்க முடியாது!' என்று அவள் கத்திவிட்டுப் போனாள்.

அந்தச் சுமை... மஞ்சரியைத்தான் சுமை என்று சொன்னாளா?

அப்படியானால், யோகேந்திரன் தனி மரமாக நிற்கக் காரணம் மஞ்சரியேதானா?

யோசித்துப் பார்க்கையில், மஞ்சரிக்கு வலித்தது.

யோகேந்திரனைப் போல ஒரு நல்லவன், அவளால் குடும்ப வாழ்க்கை இழப்பதா?

ஆனால், ஒரேயடியாக இழந்து விட்டதாக எண்ணு வானேன்? நாற்பது வயதில்கூட, மணமுடிப்பவர்கள் இருக்கிறார்களே! யோகனுக்கு முப்.. இல்லை, இருபத் தொன்பதுகூட இப்போதுதான் தொடங்கியிருக்கிறது- பிறந்த நாள் வந்து, ஒரு மாதம் கூட ஆகவில்லை.



எத்தனையோ பெண்களுக்கே, இருபத்தைந்துக்கு மேல்தான் மணமாகிறது! அவர்களில் யாராவது ஒரு...

இல்லை. சும்மா யாராவது ஒருத்தியை அல்ல. ஒரு நல்ல நல்ல, ரொம்ப நல்ல பெண்ணைப் பார்த்து, யோகனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்.

ஆனால், அந்தப் பெண்ணும், சுமை வேண்டாம் என்றாளானால்?

சொல்லத்தான் செய்வாள்.

அதனால், அப்படி ஒரு நிலை மீண்டும் ஏற்படுமுன், 'சுமை'யை அகற்றி விட வேண்டும்.

அதாவது, அவனது சுமையான மஞ்சரி, அவனை விட்டு விலகிப் போயாக வேண்டும்.

எப்படி என்று யோசித்தபோது, அவளுக்குச் செல்வேசனின் உருவம் சந்தோஷமாக நினைவு வந்தது.

மஞ்சரி மனதில் நினைத்த விருப்பத்தை நிறைவேற்று கிறவன் போல, மறுநாள் அவளிடம் தன்னை மணக்கக் கேட்டான் செல்வேசன்.

மகிழ்ச்சிக் கடலில் தொபுகடீர் என்று விழுந்து, திக்கு முக்காடிப் போனாள் அவள்.



# 5

செல்வேசன் தன்னை மிகவும் காதலிக்கிறான் என்ற கருத்துதான் மஞ்சரிக்கும். தொண்ணூற்று ஒன்பது சதவீதமாக என்பார்களே, அவ்வளவு நிச்சயம்!

அவனுடைய தங்கையின் ஜாடைமாடையான பேச்சுகள், அதை நூறு சதவிகிதமாக ஆக்கியபோதும், செல்வேசன் இன்னமும் வாய்விட்டுச் சொல்லவில்லையே என்ற ஒரு சின்னத் துணுக்கம் அவளுக்கு இருந்தது.

திடுமென, நட்பு என்று சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பயம்.

இப்போது, அந்தக் கவலை தீர்ந்து நிம்மதி வந்தது.

யோகேந்திரனுக்குச் சுமையாக இனி இருக்கப் போவது இல்லை என்ற ஆறுதல் ஒரு கூடுதல் பரிசாக இருந்தது.

எல்லாமே, தனக்கு இவ்வளவு மகிழ்ச்சியை அளிக்கக் கூடும் என்று மஞ்சரியே எதிர்பார்க்கவில்லை எனலாம்.

எல்லையற்ற ஆனந்தத்தில் எதுவும் சொல்ல முடியாமல் அவள் வாயடைத்து நிற்கையில் அவளுக்கும் சேர்த்துச் செல்வேசன் நிறையச் சொல்லிக் கொண்டே போனான்.

அவளைப் பார்த்ததுமே, அவனுள் மின்சாரம் பாய்ந்த மாதிரியாய்ச் சிலிர்த்துப் போனதாம். அவளைப் பார்த்த கண்ணுக்கு மற்றப் பெண்கள் எல்லோரும் குரங்குகள் மாதிரித் தோன்றுகிறார்களாம். அவள் இல்லாமல், அவனால் வாழ முடியாதாம். கட்டாயமாக அவள் அவனைச் சீக்கிரமாகக் கல்யாணம் செய்து கொண்டே ஆக வேண்டுமாம். இல்லாவிட்டால், அவளுக்காக உருகி உருகி, அவனது ஆரோக்கியமே கெட்டு விடுமாம். உயிருக்கு உத்தரவாதம் கிடையாதாம்.

தன்னை மீறிச் சிரிப்பு குமிழியிட்டுக் கொண்டு வந்தது, அவளுக்கு.



''அதற்கெல்லாம் அவசியமே இல்லை, செல்வா!'' என்றாள் மஞ்சரி. ''ஏனென்றால், எனக்குமே, நம் திருமணம் சீக்கிரமே நடக்க வேண்டும் என்றுதான் ஆசை!'' என்று மஞ்சரி கூறவும் அவன் வாயைப் பிளந்தான்.

''ஆ... ஆனால், உன் கார்டியன்? அவர் இதற்குச் சம்மதிப்பாரா? அவர் சம்மதிக்கா விட்டால், வேறு விதமாய்ப் பிரச்சினைகள் ஏற்படக் கூடுமே!'' என்று வினவினான் அவன்.

''அதெல்லாம் ஒரு பிரச்சினையும் வராது. யோகன் முட்டாளோ, முகடோ கிடையாது. எனக்கு உங்களைப் பிடித்திருக்கிறது. உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறது. உங்கள் அன்பைப் பற்றி எடுத்துச் சொல்ல, நான் இருக்கிறேன். யோகனுக்கு வேறு என்ன வேண்டும்? அத்தோடு, எனக்கும் பதினெட்டு முடிந்து, மேலே பத்தொன்பதும் முடிந்து, பத்து நாட்களில் இருபதும் தொடங்கப் போகிறது. சட்டப்படி, நம் திருமணத்தைத் தடுக்க முடியாது என்று அவருக்குத் தெரியும்...''

''இல்லை, இல்லை!'' என்று, அவளது உற்சாகப் பேச்சில் செல்வேசன் குறுக்கிட்டான். ''யோகேந்திரன் சாரின் சம்மதத்தோடேயே காரியத்தைச் சாதிப்பதுதான் நல்லது. இல்லாவிட்டால், வேறு விதமான பிரச்சினைகளை அவர் உருவாக்கக் கூடும். அது நம் எதிர்காலத்துக்கு நல்லது அல்ல!'' என்றான் அவன் தொடர்ந்து.

''ம்ம்ம்... நீங்கள் சொல்வதும் சரிதான், செல்வா. யோகனின் சம்மதம் எனக்குமே ரொம்பவே முக்கியம் தான். ஆனால், அது பெரிய பிரச்சினையும் அல்ல. எப்போதுமே, நான் ஒன்று கேட்டு, யோகன் அதை

மறுத்தது கிடையாது. இப்போதும் மறுக்க மாட்டார் என்பது எனக்கு நிச்சயம். ஏனென்றால், அவரது சம்மதத்துக்கு, உங்கள் அன்பைப் பற்றி நான் எடுத்துச் சொன்னாலே போதுமே!'' என்றாள் அவள் உறுதியோடு.

''ஆனால்...'' என்று செல்வேசன் கவலை காட்டி இழுத்துப் பேசினான்.

''ஆனால் என்ன?'' என்று புரியாமல் கேட்டாள் அவள்.

''சொல்லச் சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனால், நான்... எனக்கு அதிக வசதி கிடையாதே... அதுதான் கவலையாக இருக்கிறது!'' என்றான் அவன் முகத்தில் வாட்டத்துடன்.

மஞ்சரியின் முகம் மலர்ந்தது. ''பூ! இதுதானா? நான் என்னவோ என்று பயந்து போனேனே! அதையெல்லாம் யோகண்ணன் பார்த்துக் கொள்வார். இதுபோல அனாவசியக் கவலைகளை, நீங்கள் விடுங்கள். இப்போது அவர் ஊரில் இல்லை. ஏதோ தொழில் விஷயமாக டெல்லிக்குப் போயிருக்கிறார். வந்ததும், முதல் வேலையாக நம் விஷயத்தைத் தெரிவித்து, அவரிடம் அனுமதி வாங்கி விடுகிறேன். சரிதானா?''

''எதற்கும் அவரிடம் சுமுகமாகவே பேசிச் சம்மதம் வாங்கு. அதுதான் நல்லது!'' என்றான் அவன்.

அப்புறமாகச் செல்வேசன் ஐஸ்கிரீம் வாங்கி வர, இருவருமே அதைத் தின்றபடி சற்று நேரம் பேசியிருந்து விட்டு, அவரவர் வீடுகளுக்குச் சென்றார்கள்.

இந்த விதமாக, மேலும் மூன்று தினங்கள் சென்று மறைந்தன.



வகுப்பு முடிந்து, வீட்டுக்குத் திரும்பி வரும் நேரம் தாமதமாகிக் கொண்டே போயிற்று.

படித்துக் கொண்டிருக்கும் சுந்தர காண்டத்திலிருந்து, திலகம் கண்களை உயர்த்திப் பார்ப்பதை உணர்ந்த போதும், அத்தையின் கண்களைச் சந்தியாமலே, மஞ்சரி மாடியேறிச் செல்வது வழக்கமாயிற்று.

இந்த யோகேந்திரன் எப்போது திரும்பி வந்து, தன் செய்தியை அவனிடம் எப்போது சொல்லி முடிக்கலாம் என்று, மஞ்சரிக்கு ஒரே பரபரப்பாக இருந்தது.

ஏனெனில், அவனுக்கு விஷயம் தெரிந்து விட்டால், மேற்கொண்டு ஆக வேண்டியதை, அவன் பார்த்துக் கொள்ளுவான்.

அத்தையிடம் சொல்வது, திருமண வேலைகள்... எல்லாமே!

ஆவலும் பரபரப்புமாக அவள் காத்திருப்பதை உணர்ந்தவன் போல, யோகேந்திரனும், சென்ற வேலையைச் சீக்கிரமாக முடித்துக் கொண்டு, அவன் சொன்ன பத்து நாட்களுக்கு இரு தினங்கள் முன்னதாகவே திரும்பி வந்தான்.

ஆனால், அவன் வருவது தெரிந்ததும், அவனுக்குப் பிடித்தமான பழ சாலடைச் செய்து, அதனுடன் கலந்து உண்ண ஐஸ்கிரீமையும் வாங்கி, ஃபிரிஜ்ஜில் வைத்துக் கொண்டு காத்திருந்த மஞ்சரிக்குத்தான், பேச்சு வர மறுத்தது.

உணவு முடிந்து, பழத் துண்டுகளை ஐஸ்கிரீமுடன் கலந்து யோகேந்திரனிடம் கொடுத்து விட்டுத் தானும்

ஒரு கிண்ணத்துடன் உட்கார்ந்து, பேச்சை எப்படித் தொடங்குவது என்று யோசித்தாள்.

செல்வேசனிடம், ரொம்பத் தைரியமாகப் பீற்றிக் கொண்ட பெண்ணுக்கு, இப்போது இல்லாத பொல்லாத சந்தேகங்கள் எல்லாம் வந்தன.

நிஜமாகவே, இந்த விஷயத்தில் அவளது விருப் பத்தை, யோகேந்திரன் நிறைவேற்றுவானா?

படிப்புக் கூட முடியவில்லை., அதற்குள் என்ன காதல் என்று விட்டால்...?

ஓரக் கண்ணால் அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, "என்ன மஞ்சரி, இந்த ஒரு வார காலமாக, நம் ஊரில் விலங்குகள், பறவைகள், செடிகொடிகள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்து விட்டனவா?" என்று வினவினான் யோகேந்திரன்.

அவனது பேச்சில் தலை வால் ஒன்றும் புரியாமல், "வேலை நிறுத்தமா? என்..ன வேலை நிறுத்தம்?" என்று தடுமாறினாள் அவள்.

"ஆமாம், நாலு நாள் வெளியூர் போய்த் திரும்பி னாலே, அடுத்த வீட்டு நாய் குட்டி போட்டது. தேன் சிட்டுக் குஞ்சுகள் பறக்க முயற்சித்தது. மெரூன் கலர் டேலியோ விரிந்தது என்று நிறையச் சொல்லுவாயே! இன்று ஒன்றையும் காணோமே! பூ பூக்கவில்லை, குருவி, பூனை... ஒரு வேளை எல்லாம் வேலை நிறுத்தம் செய்து விட்டனவோ என்று நினைத்தேன்!" என்றபோது, அவனது குரலில், கிண்டலோடு, வேறு எதுவுமோ இருந்தது.



சட்டென அவனைக் கூர்ந்து நோக்கியவள், உடனே புரிந்து, "உங்களுக்குத் தெரியும்!" என்றாள் குற்றம் சாட்டும் குரலில்.

செல்லோவில் இருந்து, இன்னும் கொஞ்சம் பழத் துண்டுகளை எடுத்துக் கிண்ணத்தில் போட்டுக் கொண்டு, அவன் நிதானமாகக் கேட்டான். "எனக்கு என்ன தெரியும் என்கிறாய்?"

"என்.. நான் சொல்ல வந்தது... என்னைப் பற்றி.. செல்வேசனைப் பற்றி எல்லாம் தெரியும்தானே?"

"அவன் பெயர் செல்வேசனா?"

அவன் குரலில் என்ன இருந்தது? கோபம்.. எரிச்சல்... ஒன்றும் இல்லைதான். ஆனால், என்னவோ அவளை உறுத்தியது.

சட்டென நிமிர்ந்து, "என் தோழி ப்ரீதியுடைய அண்ணன். சுனாமி முகாமில் பார்த்தேன்... யோகன், செல்வா எவ்வளவு நல்லவர் தெரியுமா? என் மேல் அவருக்கு ரொம்ப ரொம்ப அன்பு! சின்னச் சின்ன விஷயத்திலும், செல்வா மாதிரி அன்பைக் காட்ட யாராலுமே முடியாது, தெரியுமா? அவ்வளவு காதல்! எனக்கும் அப்படித்தான். கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிவு செய்திருக்கிறோம்!" என்று ஒரு சவால் போல அறிவித்தாள் அவள்.

"அப்படியா?" என்று அதிராமல் கேட்டு விட்டு, மேலே உண்பதில் முனைந்தான், யோகேந்திரன்.

சிறு அமைதிக்குப் பின் பொறுக்க மாட்டாமல், "நீங்கள் ஒன்றும் மறுக்க மாட்டீர்களே, யோகன்?" என்று மஞ்சரி தழைந்து கேட்டாள்.

''மறுப்பதா? நானா? மறுப்பதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது, மஞ்சரி? சட்டப்படி, சொந்த வாழ்வில் முடிவெடுக்கும் உரிமை உனக்குக் கிடைத்துக் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் முடியப் போகின்றன. முடிவெடுத்தும் ஆயிற்று! அப்புறம் என்ன?''

விழி விரித்து நோக்கிவிட்டு, ''உங்களிடம் கேட்காமல் முடிவு செய்தேன் என்று கோபம்தான், இல்லையா? ஆனால், நான் ஆசைப்பட்ட பிறகு, நீங்கள் தடுக்க மாட்டீர்கள் என்று நிச்சயமாக நினைத்துத்தான்... உண்மையில், உங்களுக்குச் சம்மதம் இல்லாவிட்டால், எனக்குத் தாங்க முடியாது, யோகன்! வந்து... செல்வா மிகவும் நல்லவர், யோகன்...'' என்று அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள் அவள்.

''இருக்கலாம்! சுமார் பதினைந்து ஆண்டுகளாக, உன் நன்மை தீமைகளுக்குப் பொறுப்பேற்று இருக்கிறோம்! சும்மா, வீட்டுக்குக் கூட்டி வந்து காட்டி, ஒப்புக்கேனும் எங்கள் அபிப்பிராயம் கேட்க வேண்டாமா? என்னை விடு. அம்மாவுக்கு எப்படி இருக்கும்?''

''ஓகோ...!'' என்று திகைத்தாள் மஞ்சரி. ''ஆனால், அத்தைக்கு இன்னும் ஒன்றுமே தெரியாது. நா..ன்... நாளைக்குச் செல்வாவை வரச் சொல்லட்டுமா? அப்புறமாக அத்தையிடம் சொல்லலாம். அதுவரை விஷயத்தை நமக்குள்ளேயே வைத்துக் கொள்வோம். என்ன யோகன்? நம் இருவருக்கும் பிடித்துப் போய் விட்டது என்றால், அப்புறம் அத்தை தட்டிப் பேசவே மாட்டார்கள்!'' என்று குரலைத் தணித்து, அவனையும் தன்னோடு கூட்டுச் சேர்த்து ரகசியத் திட்டம் போட்டாள்.



''ஓ, உன் அத்தையிடம் என் சிபாரிசா? ஆனால், எனக்குப் பிடிக்க வேண்டுமே!''

''கட்டாயம் பிடிக்கும். நாளைக்குத்தான், செல்வாவைப் பார்க்கப் போகிறீர்களே!''

'நாளை வரச் சொல்லட்டுமா?' என்று கேட்டவள், அவன் பதில் சொல்லு முன்னரே, 'நாளை பார்க்கப் போகிறீர்களே!' என்று முடித்தது, யோகனின் முகத்தில் சிரிப்பை வரவழைத்தது.

மெல்லச் சிரித்துவிட்டு, இன்னும் கொஞ்சம் சாலடுக்காகக் கிண்ணத்தை நீட்டினான்.

முன்னரே சொல்லியிருந்தபடி, மறுநாள் மாலையில், சரியாக ஐந்தரை மணிக்கு வந்து சேர்ந்த செல்வேசனைப் பார்க்க, மஞ்சரிக்கு வியப்பாக இருந்தது.

எப்போதுமே, அவன் தோற்றத்தில் கவனம் செலுத்துகிறவன்தான்! ஆனால், இப்போது, உச்சி முதல், உள்ளங் கால் வரை, ஒரு மாடல் மாதிரி, பளிச்சென்று இருந்தான்.

ஷாம்பூவும் கண்டிஷனருமாகத் தலையில் சிகை பளபளத்தது என்றால், கால் ஷூவில் முகம் பார்க்கலாம் போல இருந்தது. அணிந்திருந்தது, புதிய உடை என்று நன்றாகத் தெரிந்தது.

பாவம்! யோகேந்திரனின் ஒப்புதலுக்காக, நிறையச் செலவு செய்திருப்பான் போல இருக்கிறதே என்று எண்ணினாள் மஞ்சரி.

ஆனால், அவளுக்குப் பிடித்த பிறகு, யோகேந்திரன் மறுக்க மாட்டான் என்று சொல்லியும் புரியவில்லையே என்று எண்ணியபோதும், செல்வேசனைப் பார்க்கையில், அவளுக்குப் பெருமிதமாகத்தான் இருந்தது.

பொதுவாகச் சிவநேசனைத் தவிர, வேறு யார் வந்தாலும், திலகம் அவர்களோடு உட்கார்ந்து உரையாடுவது இல்லை.

இப்போதும், செல்வேசனை வரவேற்றுச் சாப்பிடச் சொன்னதோடு, அங்கிருந்து அகன்று சென்று விட்டாள்.

செல்வேசன் கவலையோடு நோக்கவும், மஞ்சரி அவனுக்குத் தெம்பூட்டும் விதமாக முறுவலித்தாள்.

அத்தை எப்போதும் இப்படித்தான். இங்கே முக்கியம், யோகேந்திரனின் கருத்துதானே! அதுவும், அவளது கருத்தாகத்தான் இருக்கப் போகிறது. பிறகென்ன பயம்?

சிற்றுண்டி முடிந்து, காபியைக் கையில் எடுத்ததும், ''இனி நாங்கள் சற்றுத் தனியே பேச வேண்டும். நீ வேறு வேலை ஏதாவது இருந்தால், அதைப் பார்!'' என்று யோகேந்திரன் கூறியது, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பெண் பார்க்கும் படலம் போல, இது மாப்பிள்ளை பார்க்கும் படலம் போலும்! இப்போது, பெண்ணுக்குப் பதிலாக, மாப்பிள்ளை மதிப்பீடு நடக்கப் போகிறதாக்கும்!

நடக்கட்டுமே. செல்வேசன் எதிலும் ஜெயிப்பான்.

திலகம் பூஜையறையில் இருப்பதைப் பார்த்துவிட்டு, மஞ்சரி முன் வராண்டாவில் சென்று அமர்ந்தாள்.

எப்போதுமே, அது அவளுக்குப் பிடித்தமான இடம்.

முன்புறத் தோட்டத்துப் பூக்களின் வாசனையோடு காற்று சுகமாக வீசும். அவ்வப்போது, யோகேந்திரனும், அவளும் அங்கே உட்கார்ந்து, ஏதாவது பேசிக் கொண்டிருப்பார்கள். இனி...




என்னென்னவோ எண்ணங்கள் தோன்றி, அவளது மனதை உருட்டியடித்தன.

மனது ஒரேயடியாகக் குழம்பிப் போகுமுன், நல்ல வேளையாக, யோகேந்திரனும், செல்வேசனும் வெளியே வந்தனர்.

மஞ்சரி சிறு கலக்கத்துடன் நோக்கவும், ''ஞாயிறன்று உன் பிறந்த நாள் விழாவின்போது, இந்தத் திருமணத்தைப் பற்றி அறிவிக்கலாம் என்று முடிவாகி யிருக்கிறது. சந்தோஷம்தானே?'' என்று யோகேந்திரன் கேட்க, அவள் முகம் பளீரென்று மலர்ந்தது.

யோகேந்திரனுக்குச் செல்வேசனைப் பிடித்து விட்டது. திருமணத்துக்குச் சம்மதித்து விட்டான். இன்னும், அவள் விரும்பியதை எல்லாம்கூடச் செய்து தருவான்.

ஏதோ வேலை இருப்பதாகச் செல்வேசன் நில்லாமல் கிளம்பிச் சென்றதுகூட, மஞ்சரியின் உற்சாகத்தைப் பாதிக்கவில்லை.




செல்வேசன் கிளம்பியதும், தனது அறைக்குள் சென்ற யோகேந்திரனும் சற்று நேரத்திலேயே, வெளியே செல்லத் தயாராகி வரவும், மஞ்சரிக்கு ஏமாற்றமாக இருந்தது.

செல்வேசனைப் பற்றி, வர இருக்கும் திருமணம் பற்றியெல்லாம், அவனோடு நிறையப் பேச, அவளுக்கு ஆசையாக இருந்தது.

முக்கியமாக, அவளது பிறந்த நாளின்போது, திருமண அறிவிப்புச் செய்வது என்றால், அதை எப்படி நடத்துவது என்றெல்லாம் திட்டமிட வேண்டாமா?

அறிவிப்பைக் கேட்க ஆட்களை அழைக்க வேண்டும். யார் யாரை அழைப்பது?

அழைக்கப் பட்டவர்களுக்கு உண்ண, அருந்த ஏதாவது கொடுக்க வேண்டும். என்ன கொடுப்பது?

இதை எப்போது செய்வது? மதியமா? மாலையா? இரவா?

பேசி முடிவெடுக்க எத்தனை இருக்கிறது!

இவை தவிர, அவள் யோகனிடம் கேட்க, இன்னொரு முக்கியமான விஷயமும் இருந்தது.

அவனானால், எல்லாவற்றையும் விட்டுவிட்டு, வெளியே போய்விட்டானே.

வழக்கமாக, அவளது பிறந்த நாளின்போது, காலையில் கார்த்திகேயனும், திலகமும் அவளைக் கோயிலுக்குக் கூட்டிப் போவார்கள்.

யோகேந்திரன் ஏதாவது பரிசு வாங்கி வைத்திருப்பான்! அன்னம்மா ஏதாவது விருந்து சமைத்து வைத்திருப்பாள். மாலையில், சிவநேசன் வந்து ஆசீர்வதித்து விட்டு, ஒரு பரிசையும் கொடுத்துவிட்டுப் போவார்.

புண்ணியத்துக்கு, அன்று மட்டும் பாடம், அது இதென்று போரடிக்க மாட்டார்.



வந்தனா மருத்துவம் பயிலச் செல்லும்வரை, அவளோடு இன்னும் சில தோழிகள் விருந்துண்ண வருவார்கள். கேக் வெட்டி, 'ஹாப்பி பர்த்டே' சொல்லிச் சற்றுச் சளசளப்பார்கள். எல்லோருமாக சினிமா, பீச் என்று போவதும் உண்டு.

கார்த்திகேயன் இறந்து, வந்தனாவும் வெளியூர் சென்ற பிறகு, இவற்றுள் நிறைய நின்று போயின.

ஆனாலும், அவளது மகிழ்ச்சிக்குக் குறைவிருந்தது இல்லை. புத்தாடையும், விருந்தும், பரிசுமாக, அவளது பிறந்த நாள் தடபுடலாகத்தான் இருக்கும்.

ஆனால், இந்தப் பிறந்தநாள், மற்ற அனைத்தையும் விடத் தனிப்பட்டதாக இருக்கப் போகிறது.

எப்படியெப்படி என்ற கற்பனையும், எதிர்பார்ப்பும், இரண்டும் தந்த பரபரப்புமாக, மஞ்சரி உட்கார முடியாமல் வளைய வந்தாள்.

திலகத்திடம் சென்று பேசிப் பார்த்தாள்.

அவளுக்குப் பேச்சுக் குறைவுதான் என்றாலும், கல்யாணம் மிக மிக முக்கியமான விஷயம் ஆயிற்றே.

ஆனால், "எனக்கு மனது சரியில்லை, அம்மா. என்னைத் தனியே இருக்க விடு!" என்று திலகம் ஒதுங்கிக் கொள்ளவும், ஊசி குத்திய பலூனாய், அவளது உற்சாகமே வடிந்து விடும்போல ஆகிவிட்டது.

ஆனால், மாமா இறந்த பிறகு, அத்தை பெரும்பாலும் இப்படித்தானே இருக்கிறார்கள் என்று தனக்குத் தானே சொல்லிச் சிரமப்பட்டு மனதைத் தேற்றிக் கொண்டு, யோகேந்திரனுக்காகக் காத்திருந்தாள்.

யோகேந்திரன் திரும்பி வரும்போது, இரவு மணி பத்தைத் தாண்டியிருந்தது.

காலணியைக் கழற்றும்போது விழுந்த மணலைப் பார்த்துவிட்டு ''கடற்கரைக்கா போயிருந்தீர்கள்? நான், ஏதோ தொழில் விஷயமாக என்று எண்ணினேனே!'' என்றாள் மஞ்சரி.

''ஏன்? கடற்கரையில் பிசினஸ் பேசக் கூடாதா?'' என்றான் அவன் பதிலுக்கு.

அவனது தொனியில், அவள் திகைத்து நோக்குமுன், ''அப்படிப்பட்ட சட்டம் ஒன்றும் இன்னமும் இயற்றப் படவில்லை, தாயே!'' என்றான் விளையாட்டாக.

புன்னகை மலர, ''யோகன், உங்களுக்குக் களைப்பாக இல்லை என்றால், கொஞ்ச நேரம் இங்கே உட்கார்ந்து பேசலாமா?'' என்று கெஞ்சலாகக் கேட்டாள், அவள்.

கீழ்க் கண்ணால் அவளை நோக்கிவிட்டு, லேசாகத் தோளைக் குலுக்கினான் யோகேந்திரன். ''இப்போதில்லா விட்டால், நாளை! நாளைவரை நீ ஏன் சஸ்பென்சில் இருக்க வேண்டும்? சொல்லு!'' என்றபடி, வராண்டாவில் கிடந்த கூடை நாற்காலி ஒன்றில் அமர்ந்தான்.

''செல்வேசன் எப்படி? நான் சொன்ன மாதிரி, அவரை உங்களுக்குப் பிடித்து விட்டதுதானே?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள் அவள்.

''பிடித்து விட்டதா? எப்படிச் சொல்லுகிறாய்?''

''இல்லா விட்டால், திருமணத்துக்குச் சம்மதம் தருவீர் களாக்கும்?''

''திருமணம் உன் முடிவு, மஞ்சரி. அதைத் தடுக்கும் உரிமை எனக்கு ஏது?''



புரியாமல் தலையசைத்து, ''பி... பின்னே, பிறந்த நாளன்று திருமணத்தை அறிவிக்கலாம் என்றீர்களே?'' என்று கேட்டாள் மஞ்சரி.

''செல்வேசன் உன் தேர்வு. கல்யாணத்தை விரைவில் நடத்த வேண்டும் என்பது, அவனது விருப்பம். பிறந்த நாள் வசதியாகப் பக்கத்தில் இருக்கிறது. இதில், என் அபிப்பிராயத்துக்கு எங்கே இடமிருக்கிறது?''

''இடம் இல்லாமலா கேட்கிறேன்? தனியாக வேறு, நீங்களே கேட்டு, அவருடன் பேசினீர்களே! ப்ளீஸ் யோகன், சொல்லுங்கள். செல்வேசனைப் பிடித்திருக்கிறது தானே?'' என்று மீண்டும் கேட்டாள் மஞ்சரி.

''பத்து நிமிஷங்களில் ஒருவரைக் கணித்துவிட முடியுமா? சில விவரங்களைத் தெரிந்து கொள்வது நல்லது என்று நினைத்தேன்! ஆனால்.. எனக்கு ஒரு... ஒரு கவலை! இனிச் சென்னையில்தான் இருக்கப் போவதாகச் சொன்னான். வேலையை விட்டு விட்ட தாகத் தெரிகிறது! அப்புறம் குடும்பத்தை எப்படி நடத்துவான்?''

செல்வேசன் வேலையை விட்டுவிட்டானா? அவளை விட்டுப் பிரிந்து போக முடியாமல் விட்டிருப்பான். பாவம்! அவளிடம் சொல்லியிருக்கலாம். ஆனால், இப்போது, இதை வைத்தே பேச்சைத் தொடங்கிவிட எண்ணினாள் அவள்.

''இதைப் பற்றித்தான் உங்களிடம் முக்கியமாகப் பேச நினைத்தேன், யோகன்!'' என்று தொடங்கினாள்.

'சொல்லு, சொல்லு,' என்று யோகன் ஆர்வமாகக் கேட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். ஆனால்,

அவன் தடுக்கவும் இல்லை என்பதையே பெரிதாகக் கொண்டு, அவள் பேசலானாள்.

''யோகன், நான் கம்ப்யூட்டர் கோர்ஸ் பண்ணுவது பற்றி, நாம் அவ்வப்போது பேசியிருக்கிறோம், நினைவிருக்கிறதா? செலவைப் பற்றிக் கவலைப்படாமல், என்ன வேண்டுமானாலும் படி, மேல் படிப்புக்கு, வெளிநாட்டுக்கு அனுப்பவும் தயார் என்று சொன்னீர்கள்.''

அவளைக் கூர்ந்து நோக்கியவாறு, ''ம்ம். நினைவிருக்கிறது...'' என்றான் யோகேந்திரன்.

''இங்கே படிப்புக்கு ஒரு நாலு லட்சம்... வெளிநாட்டுப் படிப்புக்கு ஒரு பதினைந்து லட்சம், மற்றச் செலவுகள்... எப்படியும் இருபதுக்கு மேல் ஆகிவிடும்...''

''கணக்குச் சரிதான்!''

''இருபது லட்சம் பெரிய தொகைதான், இல்லையா?''

''அப்படியா?''

''என்ன அப்படியா? பெரிய தொகைதான். ஆனால், அவ்வளவு பணம் செலவழிக்க வேண்டாம். அதற்குப் பதிலாக, ஒரு பத்துப் பதினைந்து லட்ச ரூபாயைச் செல்வேசனிடம் கொடுத்தால், அவர் ஏதாவது தொழில் செய்து, நிறையச் சம்பாதிக்க வசதியாக இருக்கும். கொடுக்கிறீர்களா, யோகன்?''

''முடியாது.''

யோசிப்பதற்காக ஒரு கணம் கூட எடுத்துக் கொள்ளாமல், ஒற்றை வார்த்தையாக அவன் பதில் சொன்ன விதத்தில், அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.



சரியாகத்தான் காதில் விழுந்ததா என்ற சந்தேகம் கூட வந்துவிட, ''எ... என்ன சொன்னீர்கள்?'' என்று தடுமாற்றத்துடன் வினவினாள்.

''முடியாது என்றேன்,'' என்றான் அவன், மீண்டும் - பிசிரற்று.

''ஏ... ஏ... ஏன்? நான் படிப்பதாக இருந்தால், கொடுத்திருப்பீர்கள்தானே? இப்போது மட்டும் என்னவாம்?'' என்று படபடத்தாள் அவள்.

''இப்போதும், நீ வெறும் மஞ்சரியாக, இங்கிருந்து படிப்பதாக இருந்தால், கட்டாயம் கொடுப்பேன். அது, உன் எதிர்காலம் வலுவாக அமைவதற்காக நான் தருவதாக இருந்த பணம். வேறு எதற்காகவும் அதைச் செலவழிப்பதாக இல்லை!'' என்றான் அவன் உறுதியான குரலில்.

''செல்வேசன்தானே இனிமேல் என் எதிர்காலம்!''

''அப்படியெல்லாம், இந்தக் காலத்தில், அறுதியிட்டு உறுதியாகச் சொல்ல முடியாது. சொல்ல முடிந்தால், இத்தனை விவாகரத்துகள் நடக்க வாய்ப்பில்லை!'' என்றான் அவன்.

''எங்கள் திருமணம் ஒரு நாளும்.. நான் அப்படிப் பட்ட பெண்ணில்லை என்று உங்களுக்குத் தெரியாதா, யோகன்?''

''ஒரு திருமணத்தின் வெற்றிக்கு இரண்டு பேர் வேண்டும், மஞ்சரி. செல்வேசனைப் பற்றி, எனக்கு எந்த நிச்சயமும் இல்லை!... எனக்கு ஒரு சந்தேகம். இந்தப் பண விஷயம், நீயாகக் கேட்பதா, அல்லது...''

''செல்வாவைப் பற்றி எவ்வளவு மட்டமாகப் பேசு கிறீர்கள் என்று புரிந்துதான் இப்படிக் கேட்கிறீர்களா, யோகன்? சேச்சே, ரொம்ப அநியாயம்ப்பா! நான் இப்படி உங்களிடம் கேட்கக் கூடும் என்றே அவருக்குத் தெரியாது. உண்மையில், அவரிடம் பணம் இல்லை என்பதால், திருமணத்துக்குச் சம்மதிக்க மாட்டீர்களோ என்ற பயம் மட்டும்தான் அவருக்கு. நான்தான் என் விருப்பத்தை நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று தைரியம் சொன்னது. அப்போதும், உங்களிடம் சுமுகமாகப் பேசும்படிதான், செல்வா சொன்னார். என்ன யோகன், பணம் கொடுக்கிறீர்களா?'' என்று, யோகேந்திரன் ஐயத்தை நல்லபடியாகத் தீர்த்து விட்ட பாவனையில் மீண்டும் கேட்டாள் அவள்.

ஆனால், அப்போதும் மறுப்பாகவே தலையசைத் தான், யோகேந்திரன்.

அவள் புரியாமல் திகைத்து நோக்கவும், ''நீ, ஷண் முகம் அங்கிளுடைய மகள், மஞ்சரி. உன் எதிர்காலத் துக்கு அடிப்படையை அமைத்துக் கொடுப்பது எங்கள் பொறுப்பு. உன்னைப் படிக்க வைப்பது, அதில் அடங்கும். இப்போதும் உன்னைப் படிக்க வைக்க, நான் தயார். அதுவும், அங்கிளுக்காகத்தான். மற்றப்படி, திரு மணம் ஆன பின், நீ என் பொறுப்பில்லை. அத்தோடு, நீ சொல்வதற்காக, யாரோ ஒரு செல்வேசனுக்குப் பணத்தைக் கொடுக்க என்னால் முடியாது. மாட்டேன். ஒரு வேளை, அவன் சரியான தேர்வு இல்லை என்றால், அவனிடம் நீ பணத்தையும் இழந்துவிட்டுத் திகைத்து நிற்க நான் விட மாட்டேன்!'' என்றான் அவன் தெளிவாக.



அவனை வெறித்துப் பார்த்தாள், மஞ்சரி. ''எங்கள் கல்யாணம் உங்களுக்குப் பிடிக்கவில்லை. எங்களைப் பிரிக்க எண்ணுகிறீர்கள். நான் உயிரோடு இருக்கும் வரை, அது நடக்காது. எங்கள் திருமணம் நடக்கத்தான் போகிறது. அந்தச் சின்ன ஃப்ளாட்டில், நாங்கள் சந்தோஷமாக வாழ்வதை, நீங்களும் பார்க்கத்தான் போகிறீர்கள்!'' என்று, ஆத்திரத்துடன் பொரிந்து கொட்டினாள்.

சிறு அமைதியின் பின், ''ஞாயிறன்று யார் யாரை அழைப்பது என்று முடிவு செய்து விட்டாயா? அதற்குச் சரியாக, உணவு மெனுவைத் தயார்ப் பண்ணி, பொருத்த மான 'கேட்டர்'ரிடம் முன்னதாகச் சொல்லி விட்டால் நல்லது!'' என்று யோகேந்திரன் கூறவும், வியப்புடன் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் அவள்.

''என்ன?''

''அந்த விருந்தை நடத்துவதாகத்தான் இருக்கிறீர்கள், இல்லையா?''

''ஏன்? அதில் என்ன சந்தேகம்? திருமணம் ஆகும் வரை, உன் பொறுப்பு என்னது என்று சொன்னேனே! நல்ல விதமாக உன் திருமணத்தை நடத்தி வைப்பதும், அதில் அடங்கும். பிறந்த நாள் விருந்தை மட்டும் ஏன் நடத்த மாட்டேன்?''

இதற்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியாமல், மஞ்சரி பேசாதிருந்தாள். உள்ளூர யோசனை ஓடியது.

யோகேந்திரன், இந்தத் திருமணத்தை நிறுத்த நினைக்க வில்லை. செல்வேசனைப் பற்றி அவனுக்குச் சரியாகத் தெரியவில்லை. அதனால், அவனிடம் பணத்தைக்

கொடுக்க விரும்பவில்லை. அவ்வளவே. மற்றப்படி, திருமண நிச்சயத்தை அறிவிக்கும் விருந்தை நடத்தத் திட்டமிட மாட்டான்.

ஒருவேளை, செல்வேசனைப் பற்றி நன்றாக அறிந்த பின், அவனாகவே, செல்வேசனுக்கு ஏதாவது தொழில் வைத்துக் கொடுப்பான்.

இந்தக் கற்பனை இனிமையாக இருக்கவே, மஞ்சரி, யோகேந்திரனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

ஆனால், அவள் வாய் திறந்து பேசுமுன், "உன் சினேகிதி வந்தனா வந்திருக்கிறாள் என்று அம்மா சொன்னார்கள். அவளைக் கூப்பிட்டுக் கொள். இருவருமாக விருந்தைத் திட்டமிடுங்கள். திட்டம் போட்டு விட்டு, என்னிடம் சொல்லுங்கள். மேற்கொண்டு செய்ய வேண்டியதை நான் கவனித்துக் கொள்கிறேன். இப்போது பேச வேண்டியது அவ்வளவுதானே?" என்று எழுந்தவன், "கொஞ்சம் களைப்பாக இருப்பதால், தூங்கப் போகிறேன். குட்நைட்!" என்று சொல்லியவாறு, உள்ளே சென்று விட்டான்.

அவளது பதில் 'குட்நைட்'டுக்குக் கூடக் காத்திருக்கவில்லை.


மீண்டும், மஞ்சரியின் மனதில் ஏமாற்றம் போல ஏதோ பரவியது.

ஆனால், அவளது திருமணம், அவளுக்குத்தான் முக்கியம் இல்லையா? ஆர்வமும், பரபரப்பும், துடிப்பும் - அவளைப் போலவே - மற்றவர்களுக்கும் இருக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்? யோகேந்திரன் இவ்வளவு செய்வதே பெரிது.



என்னென்னவோ சொல்லித் தன்னைத் தானே தேற்றிக் கொண்ட போதும், யோகேந்திரனின் அக்கறையோடு கூடிய கலகலப்பான பேச்சுக்காக, அவள் மனம் ஏங்கத்தான் செய்தது.

அத்தோடு, மனதில் இருப்பதை எல்லாம், யோகேந்திரனிடம் பகிர்வது போல, அவளால் வேறு யாரிடம் சொல்ல முடியும்?




மறுநாள், தன் அழைப்புக்கிணங்கி வந்த வந்தனாவோடு சென்று, செல்வேசனைச் சந்தித்தாள் மஞ்சரி.

ப்ரீதியுடைய அண்ணன் என்று ஏற்கெனவே வந்தனாவுக்கும் தெரியும் என்பதால், பெரிதாக அறிமுகம் ஒன்றும் தேவையிருக்கவில்லை.

"மஞ்சரி மாதிரி ஓர் இனிய பெண் கிடைப்பதற்கு, நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்! ஜாக்பாட் அடித்து விட்டாயே!" என்ற சிறு கேலியோடு, மூவரும் ஞாயிறன்று விருந்தைப் பற்றித் திட்டமிடலானார்கள்.

பூ அலங்காரம், விருந்து அயிட்டங்கள் பற்றி, வந்தனாவும் அவளுமாகப் பேசுகையில், அவ்வப்போது செல்வேசனின் பார்வை தன் மீது படிவதை, மஞ்சரி சிறு வெட்கத்துடன் உணர்ந்தாள்.

பிறகுதான் வாழ்நாள் எல்லாம் பார்த்துக் கொண் டிருக்கப் போகிறானே, இப்போது முக்கியமான விஷயம் பேசுகையில், அதைக் கவனிக்காமல், என்ன பார்வை என்று அவளுக்குச் சங்கடமாகவும் இருந்தது.

எனவே, ''உங்கள் பக்கத்தில் எத்தனை பேர் வருவார் கள், செல்வா?'' என்று அவனைக் குறிப்பாகப் பார்த்த படி, சற்று உரக்கக் கேட்டாள் அவள்.

''அது... வீட்டில், அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, பிள்ளைகள் நாங்கள் நாலுபேர்... மொத்தம் எட்டுப் பேர்! மற்றப்படி, சென்னையில் நெருங்கிய சொந்தம் என்று யாரும் கிடையாது. எல்லோரும் தூரத்துச் சொந்தம்தான் என்பதால், அவர்களைக் கல்யாணத்துக்குக் கூப்பிட்டால் போதும் என்று அப்பா சொன்னார்!'' என்று ஒப்பித்தான் அவன்.

''நண்பர்கள்?''

''என்ன பெரிய நண்பர்கள்! எல்லாம் பிறகு அழைத்தால் போதுமாம். அத்தோடு இப்போதே எல்லோரையும் கூப்பிட்டு, வீண் செலவு செய்வானேன் என்கிறார் அப்பா.''

''ஆகா! பெண் வீட்டாருக்கு வீண் செலவு வேண்டாம் என்று நினைக்கிற மாமனார் கிடைத்திருக்கிறாரே, நீயும் லக்கிதான், மஞ்சம்மா!'' என்று வந்தனா ஒரு சிரிப் பலையை எழுப்பி விட்டது, மஞ்சரிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால், அவன் வகை ஆட்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கவும், அவளும் அதிகம் பேரைக் கூப்பிட விரும்பவில்லை.



வகுப்புத் தோழிகள் எல்லோரையும் அழைக்க எண்ணியிருந்தவள் அதை நிறுத்தி விட்டாள்.

வந்தனா, வந்தனாவுடைய பெற்றோர், தங்கை, திலகத் துடைய அண்ணன் குடும்பம் என்று சில பேரோடு, மஞ்சரியின் பட்டியல் நின்று போயிற்று. சிவநேசன் எப்படியும் வருவார். அலுவலகத்தில் முக்கியப் பொறுப் பில் இருந்தவர்களையும் வரச் சொல்லி இருப்பதாக, யோகேந்திரன் சொன்னான். மஞ்சரியைப் பார்த்துப் பழகியவர்கள்.

மொத்தம் முப்பது பேருக்குள்ளேயே இருப்பதால், வீட்டிலேயே விழாவை வைத்துக் கொள்வதாக முடிவாயிற்று.

பல்வேறு உதவிகளுக்காக வீட்டுக்கு அடிக்கடி வந்த வந்தனா, ஒருதரம் யோகனைப் பார்த்து, ''காய கல்பம் சாப்பிட்டீர்களா? நான் மருத்துவக் கல்லூரியில் சேரு முன் பார்த்தது போல, அப்படியே இருக்கிறீர்களே!'' என்று ஆச்சரியப்பட்டாள்.

''பின்னே? என் முன்னூறு வயதை, முப்பதுக்குள் காட்ட வேண்டும் என்றால், காயகல்பத்தை விட்டால், வேறு வழி?'' என்று சிரித்துவிட்டு, அவன் செல்ல, ஆச்சரியத்துடன் பார்த்திருந்துவிட்டு, மஞ்சரியிடம் திரும்பினாள், வந்தனா.

''வீட்டிலேயே இப்படி ஒருவர் இருக்கும்போது, செல்வேசனிடம் உன் மனது எப்படிப்பா போயிற்று?'' என்று வியப்புடன் வினவினாள்.

கண்கள் விரிய, ''யார்? யோகனையா கேட்கிறாய்? அவர் எவ்வளவு பெரியவர்!'' என்றாள் மஞ்சரி.

''என்ன வயதாம்? முப்பது முடியவில்லையே! உன் செல்வேசனையும், யோகனையும் பக்கத்தில் நிறுத்தி வைத்துப் பார்த்தால், ஒரு நாள் கூடுதலாகத் தெரிய மாட்டார். உடல் பயிற்சியெல்லாம் செய்து, உடம்பைக் கச்சிதமாக வைத்திருக்கிறாரே, யோகன். செல்வேசனைக் கொஞ்சமேனும் உடல் பயிற்சி பண்ணச் சொல்லு. இப்போதே, வயிறு லேசாகச் சரியத் தொடங்கியிருக்கிறது!'' என்று டாக்டராக அவள் அபிப்பிராயம் சொன்னது, மஞ்சரியின் மனதுக்குப் பிடிக்காவிட்டாலும், ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

அடுத்து, செல்வேசனைத் தனியாகச் சந்திக்கும் போது, உடல் பயிற்சி பற்றிச் சொல்ல வேண்டும் என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தபோது, அவளது பிறந்த நாளன்று காலையில், அவனே அவளைத் தேடி வந்தான்.

ஒற்றையாய் ஒரு சிவப்பு ரோஜாவைக் கையில் கொடுத்து, அவன் பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னபோது, மகிழ்ச்சியின் உச்சிக்கே மஞ்சரி போய்விட்டாள்.

மனம் நெகிழ்ந்து அவள் நின்ற அந்த நேரத்தில், ''மஞ்சு டார்லிங், உன்னிடம் ஒன்று சொன்னால், தட்டாமல் செய்கிறாயாம்மா?'' என்று கெஞ்சலாக வினவினான் செல்வேசன்.

''உங்களுக்குச் செய்யக் கூடாதது என்று என்ன இருக்கிறது, செல்வா? சொல்லுங்கள்!'' என்றாள் அவள்.

''ஒன்றுமில்லை! இந்த ஒற்றைப் படுக்கையறை ஃப்ளாட்டில், மற்ற ஏழு பேரோடு சேர்ந்து, நம்மால் வாழ முடியாது, கண்ணம்மா. அதனால், நமக்கு என்று



ஒரு வீடு பார்த்து வைத்துவிட்டேன். அதற்குப் பணம் கொடுக்க வேண்டும். அப்புறமாக, வீட்டுப் பொருட்கள்... எல்லாமாக, ஒரு நாற்பதேனும் தேவைப்படும் என்று நினைக்கிறேன். யோகேந்திரன் சாரிடம் சொல்லி, அந்தப் பணத்தை இப்போதே வாங்கிக் கொடுத்தாயானால்...''

''யோகனிடம் பணம் கேட்பதா? என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று, அவனது பேச்சுப் புரியாத திகைப்புடன் மஞ்சரி வினவினாள்.

''என்ன சொல்லுகிறேனா? யோகேந்திரன் சார்தானே, உன் கார்டியன்? உன் சொத்தெல்லாம் அவரது பொறுப்புத்தானே? பின்னே, அவரிடம்தான் கேட்டாக வேண்டும்!'' என்று எரிச்சலை அடக்கிய குரலில் செல்வேசன் விளக்கினான்.

''அவரது பொறுப்பு என்பது சரிதான். ஆனால், அதற்காக, அவரிடம் இப்போது பணம் கேட்பது சரி வராது, செல்வா.''

''ஏன்? இருபது வயதில் கிடைக்காதா? இந்தப் பிறந்த நாளில் அறிவிப்பு என்றதும் நான் வேறு நினைத்தேனே! ஒரு வேளை, கல்யாணத்துக்கு அப்புறம்தான் கிடைக்குமா? அப்படியானால், முன் பணமாகக் கொஞ்சம் கடன் வாங்கிக் கொடுத்துவிட்டு, அந்தப் பணம் கிடைத்ததும், மீதியைக் கொடுத்து முடிப்பதாக ஏற்பாடு பண்ணிக் கொள்ளலாம். அந்த முன் பணத்தையாவது, உன் கார்டியனைத் தரச் சொல்லு!'' என்றான் செல்வேசன்.

என்ன பேசுகிறான் இவன்? ஒரு தரம் யோகேந்திரனிடம் பணம் கேட்டுக் குன்றியது போதாதா? மீண்டும் எப்படிக் கேட்பது?

''யோகனிடம் பணம் கேட்க முடியாது, செல்வா. அவர் தர மாட்டார்!'' என்றாள் இறங்கிய குரலில்.

செல்வேசனின் பேச்சும் பாவனையும் சட்டென மாற, ''என்னது? தர மாட்டானா? அந்தப் பணத்தைத் தரமாட்டேன் என்று சொல்ல, அவன் யார்? இவ்வளவு காலம் போல, உனக்காகக் கேட்பார் யாரும் இல்லை என்று நினைத்தானா? ராஸ்கல்! வரட்டும். சட்டையைப் பிடித்துக் கேட்டு வாங்குகிறேன், பார்!'' என்றான் வீரமாக அவன்.

இவன் என்ன பேசுகிறான்?

யோகனின் சொந்தப் பணத்தை, அவனது சட்டையைப் பிடித்துக் கேட்டு வாங்க, யாருக்கு என்ன உரிமை உண்டு?

அத்தோடு, அவனது சட்டையைப் பிடித்து, இவனால் கேட்க முடியுமா?

யோகேந்திரனின் உறுதியான உடல் கட்டும், வந்தனாவின் பேச்சும் நினைவு வர, ''சும்மா என்ன பேச்சுப் பேசுகிறீர்கள், செல்வா? யோகனிடம் நெருங்கினால், உங்களை ஊதித் தள்ளி விடுவார். அத்தோடு, சட்டையைப் பிடித்துக் கேட்கிற அளவுக்கு, யோகனின் பணத்தில் நமக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்தப் பேச்சை விடுங்கள்!'' என்றாள் மஞ்சரி.

''யோகனின் பணமா? நான் உன் பணத்தை அல்லவா சொன்னேன்!'' என்றான் செல்வேசன்.

''என் பணமா? என்ன என்... பணம்?''



''என்ன 'என் பணமா?' நீ இவ்வளவு முட்டாளாக இருப்பாய் என்று நான் நினைத்ததே இல்லை, மஞ்சரி. ஒர பெண் குழந்தையின் பொறுப்பை, பண விஷயமாக வலுவான தூண்டுதல் இல்லாமல், யாராவது ஏற்றுக் கொள்வார்களா? உன்னோடு, உருப்படியாக ஒரு தொகையை என் மாமனார் இவன் தகப்பனிடம் கொடுத் திருப்பாரே. அந்தப் பணத்தைச் சொல்லுகிறேன்! அதை இப்போது என்னி... உன்னிடமேனும் யோகேந்திரன் கொடுத்துத்தானே ஆக வேண்டும்?'' என்று, பொறுமை யிழநத குரலில் விளக்கினான் செல்வேசன்.

சட்டென விஷயம் புரிய, மஞ்சரி முறுவலித்தாள்.

அவளுடைய தந்தை, ஏதோ நிறையப் பணத்தை யோகனுடைய தந்தையிடம் கொடுத்து வைத்திருப்ப தாக, இவனிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணத்தை யோகன் ஏமாற்ற முயற்சிப்பதாக எண்ணி விட்டான்.

யாரும் நம்மை ஏமாற்ற விடுவது தப்புதானே! அதுதான் செல்வாவுக்குக் கோபம் வந்து விட்டது. அதனால், அவனுக்குக் கோபம் வந்ததில் தப்பு இல்லை.

ஆனால், என்னதான் கோபம் என்றாலும், சகட்டு மேனிக்கு, எல்லோரையும் அவன், இவன் என்று ஏக வசனத்தில் பேசுவது நாகரிகம் இல்லையே! அதிலும், முதலில் 'சார், மோர்' எல்லாம் போட்டு விட்டு.

ஆனால், முதலில் அவனது சந்தேகத்தைத் தீர்க்க எண்ணி, ''அங்கிள் என் பொறுப்பை ஏற்றது, வெறும் நட்புக்காக மட்டும்தான், செல்வா! பொருளாதார நிலையில், என் அப்பா ஜெயித்தவர் அல்ல. படு

தோல்விக் கேஸ்! அதனால், என் பணம் என்று எதுவும் கிடையாது!'' என்றாள் தெளிவாக.

''எ... என்னது?! பணமே கிடையாதா? நீ நிஜமாகத் தான் சொல்லுகிறாயா?'' என்று, செல்வேசன் திகைப்புடன் கேட்கவும், ''ஆமாம், செல்வா! என் அப்பா எந்தப் பணத்தையும், யோகன் அப்பாவிடம் கொடுத்து வைக்கவும் இல்லை... யோகன் அதைத் தராமல், நம்மை ஏமாற்றவும் இல்லை. ஆனால், அதற்காக நீங்கள் கவலைப் படாதீர்கள். எனக்கு இது போலப் பெரிய வீடெல்லாம் தேவையே இல்லை. உங்கள் சின்ன ஃப்ளாட்டிலேயே என்னால் சந்தோஷமாக வாழ முடியும்...'' என்ற -

அவளது பேச்சில் குறுக்கிட்டு, ''என்னால் முடியாது!'' என்றான் செல்வேசன் கோபமாக.

''தனியாகத்தான் இருக்க வேண்டுமா? ஒரு சின்னக் குடிசையில்கூட, நாம் மகிழ்ச்சியோடு வாழ முடியும். செலவைச் சுருக்கிச் சிக்கனமாக...''

''அப்படியெல்லாம் செலவைச் சுருக்கி, நீ வாழ்ந்தது இல்லை என்று நினைக்கிறேன். அதனால்தான், அதைப் பற்றி, இவ்வளவு சாதாரணமாகப் பேசுகிறாய். சே! அந்த ராஸ்கல் சொல்லியும் நம்பாமல், என்னமாய் ஏமாந்து விட்டேன். பொய் சொல்லி, விரட்டப் பார்க்கிறான் என்று எண்ணினேனே! சே! சே!'' என்று நெற்றியில் அறைந்து கொண்டான் அவன்.

உள்ளூர வயிறு காலியாவது போல ஓர் உணர்வு, மஞ்சரிக்கு உண்டாயிற்று.



''ஏமாந்து விட்டீர்களா? நீங்கள் என்ன சொல்லு கிறீர்கள், செல்வா?'' என்று உள்ளூரக் கலக்கத்துடன் கேட்டாள் அவள்.

''ஏன்? தமிழில்தானே சொன்னேன்? லத்தீன் பாஷை யிலா பேசினேன், உனக்குப் புரியாமல் போவதற்கு?'' என்றான் அவன் எகத்தாளமாக.

என்னவோ பெரிய தப்பு நேர்ந்து விட்டது என்று மஞ்சரி உணர்ந்தாள். என்ன தப்பு என்ற ஊகமும் ஓரளவு தோன்றிவிட, படபடப்பையும், தவிப்பையும் பெரும் பிரயாசையுடன் மறைத்துக்கொண்டு, ''யாரிடம், எதில் ஏமாந்துவிட்டீர்கள் என்று தெளிவாகச் சொல் லுங்கள்!'' என்று முடிந்தவரை நிதானமாகக் கேட்டாள்.

''யாரிடம் என்றா கேட்டாய்? உன்னிடம்தானடி, என் அருமை 'கில்ட் தங்கமே, உன்னிடமேதான்! அப்புறம் எதிலா? இதோ, இதில்! குறைந்தாலும், ஆயிரம் ரூபாயாவது இருக்குமே!'' என்று அவள் அணிந்திருந்த சல்வாரைக் காட்டினான் செல்வேசன். ''அப்புறம் இதில், இதில்!'' என்று அவள் காதில் அணிந்திருந்த சிறு மூன்று கல் வைரத் தோட்டை, மெல்லிய தங்கச் சங்கிலியைக் காட்டினான். ''என் தங்கைகள் அணிந்திருப்பவை, போலிகள்! நீ அன்றாடப் புழக்கத்துக்கே, இவற்றை அணிந்தால், நீயும் எங்களைப் போல அன்னக் காவடி என்று எப்படி எண்ணுவது? சொல்லு. நீ பணக்காரி வேஷம்தான் போட்டாய். உண்மையில் பணக்காரி அல்ல என்று, எங்களுக்கு எப்படித் தெரியும்? சொல்லு, எப்படித் தெரியும்?'' என்று ஆத்திரத்தில் சுதி ஏற, அதட்டிக் கேட்டான் அவன்.

செல்வேசனின் பேச்சில் மறைபொருளாக இருந்து அவளை மலைக்க வைத்ததை யோசிப்பதைவிட, அவனது வெளிப்படையான குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்வது, மஞ்சரிக்கு இலகுவாக இருந்தது.

''யோசித்துப் பாருங்கள், செல்வா! இந்த வீட்டில் இருந்துகொண்டு, நான் வேறு எதை அணிய முடியும்? வீட்டுப் பெண்ணாக நடத்தும்போது, அத்தையும், யோகனும் தான், வேறு எதை எனக்கு வாங்கித் தர முடியும்?'' என்று அவனுக்கு எடுத்துச் சொல்ல முயன்றாள் அவள்.

ஆனால், ''அது எனக்கு எப்படித் தெரியும்?'' என்று கத்தினான் செல்வேசன். ''பணக்காரி., அழகாகவும் இருக்கிறாய் என்று வேலையை விட்டுவிட்டு உன் பின்னேயே சுற்றினேனே! கையில் இருந்த பணத்தை எல்லாம் செலவழித்தேனே! எவ்வளவு பெரிய விரயம்! எல்லாம், அந்தப் ப்ரீதிக் கழுதையைச் சொல்ல வேண்டும். உன் வீட்டைப் பற்றி, அப்படி அளந்தாள்! இருந்திருந்து, அவள் பேச்சை நம்பி, உன்னைப் பணக்காரி என்று எண்ணி, எப்படியெப்படியோ சேமித்து வைத்திருந்த இரண்டாயிரம் ரூபாயையும், வீணாகக் கோட்டை விட்டு விட்டேனே!'' என்று புலம்பினான் செல்வேசன்.

நடந்த உண்மை புரிந்த விதத்தில், மஞ்சரி உள்ளம் குன்றிக் கூசிப் போனாள்.

அன்பு என்று எண்ணினாளே! அத்தனையும் நடிப்பு!

ஒன்றுமே தெரியாமல், முட்டாளாக இருந்திருக்கிறாளே!

ஆனால், அவள் மட்டும்தான் முட்டாள்.

ஏனென்றால், பார்த்த வுடனேயே, முதல் சந்திப்பி லேயே, யோகனுக்குத் தெரிந்திருக்கிறது.



செல்வேசனைப் பற்றி, எந்த நிச்சயமும் இல்லை என்றானே! அவனை நம்பவில்லை என்று குறிப்பாகச் சொல்லியிருக்கிறான். நேரடியாகச் சொன்னால் ஆத்திரப்படுவாள் என்று மாற்றிச் சொல்லியிருக்கிறான். அதையும் புரிந்து கொள்ளாத அடிமுட்டாள் அவள்தான்.

இந்த அழகில், ஏமாந்து போனேன் என்று, செல்வேசன் புலம்புவதா?

உண்மையில், இவனுடைய தங்கையும், இவனுமாகப் போட்ட நாடகத்தை நம்பி, மனதைப் பறிகொடுத்து ஏமாந்தவள் அவளே அல்லவா?

முட்டாள்! ஏமாளி!

திடுமென, ''வீட்டுப் பெண்ணாக நடத்தினார்கள் அல்லவா? அதே மாதிரிச் சொத்திலும் பங்கு தரச் சொல்லு. அல்லது, அதற்கான பணத்தைத் தரச் சொல்லு. கேட்டு வாங்கிக் கொடு!'' என்று கத்தினான் செல்வேசன்.

பேசுவது சிரமமாகத் தோன்ற, மறுப்பாகத் தலை யசைத்தாள் மஞ்சரி.

''என்ன பெருமாள் மாடு மாதிரித் தலையை ஆட்டு கிறாய்? முடியாதா? அறைந்து கொன்று விடுவேன். இங்கே பார், நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நீ கூறுகிற மாதிரிக் குடிசை வீட்டில் கஞ்சி குடித்துக் கொண்டு, உன் முகத்தைப் பார்த்து இளித்துக் கொண்டு கிடக்க என்னால் ஆகாது. பணம் இல்லாமல் நம் இருவருக்கும் இடையே ஒன்றும் கிடையாது. நினை விருக்கட்டும். அதனால், ஒரு பத்து லட்சத்துக்காவது...''

மீண்டும் மறுப்பாகத் தலையசைத்தாள் அவள்.

''ஏய்... அப்படியானால், இன்றைய விழா நடக்காது!'' என்றான் அவன் மிரட்டலாக.

''நடக்குமடா, முட்டாள்!'' என்று, யோகேந்திரனின் குரல் திடுமெனக் கேட்டது. ''எல்லாம், வெகு சிறப்பாக நடக்கும். தகுதியற்ற உனக்குத்தான், அதில் கலந்து கொள்ளும் அதிர்ஷ்டம் இல்லை. கை கால் முழுசாக வீடு போய்ச் சேர வேண்டுமானால், வினாடி கூட நில்லாமல் வெளியே போ!'' என்று கடுமையான குரலில் உத்தரவிட்டவாறு, யோகேந்திரன் அறைக்குள் வந்தான்.

''யோகன்!'' என்ற கதறலுடன் அவனை நோக்கி மஞ்சரி ஓட, ஆத்திரமாக முறைத்தான், செல்வேசன்.

தோளில் முகம் புதைத்து நின்றவளை ஒரு கையால் ஆதரவாக அணைத்தவன், மறு முனையை முஷ்டியாகத் தூக்கிக் காட்ட, அவனது வலிய கரத்தை வெறித்துப் பார்த்துவிட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியேறினான் மற்றவன்.



## 8

சற்று நேரம், மஞ்சரியை அவள் போக்கில் அழ விட்டான், யோகேந்திரன்.

அதன் பின், ''போதும், மஞ்சரி. இதற்கு மேல் அழுதால், கண் வீங்கி, மாலை விருந்துக்கு வருகிறவர்கள், 'என்ன... என்ன...' என்று கேட்குமாறு ஆகிவிடும்!'' என்று அவன் கூறவும், அவள் விலுக்கென நிமிர்ந்தாள்.



''வி... விருந்து! யோகன், அதை வேறு ரத்து பண்ண வேண்டுமே!'' என்றாள் தவிப்புடன்.

''ஏன்?''

சற்றுத் திகைத்து, ''ஏன் என்றால்? என்ன கேள்வி இது, யோகன்? விழாவில் அறிவிக்கத்தான் இப்போது ஒ... ஒன்றும் இல்லையே! அப்புறம் எதற்கு விழா?'' என்றாள் அவள், வேதனையால் முகம் சுருங்க.

''எதையும் அறிவிப்பதற்காகத்தான் பிறந்த நாள் கொண்டாடுவார்களா, என்ன? விழாவும் விருந்தும், உன் பிறந்த நாளைக்காக, மஞ்சு. இருபது ஆண்டுகளுக்கு முன்பு, நீ பிறந்தது இன்றையத் தேதியில்தான் என்கையில், அதற்கான விழாவை ரத்து பண்ணுவானேன்? போய், இந்தக் கண்ணீர்க் கறையைக் கழுவிவிட்டு, முகத்துக்கு ஏதோ மாவு பூசி ஊற வைக்க வேண்டும் என்று, நீயும் வந்தனாவும் பேசிக் கொண்டீர்களே, அதைத் தயார் பண்ணு, போ! சீக்கிரமே வந்தனாவும் வந்து விடுவாள்,'' என்றான் யோகன்.

இவனுக்குக் கொஞ்சமாவது உணர்ச்சி இருக்கிறதா? இங்கே இதயம் விண்டு வெடித்து விடும் போல வலிக்கையில், முகத்தில் பூச மாவாம்., மண்ணாங்கட்டியாம் என்று எண்ணமிடும்போதே, சட்டென ஒரு கணம் சிரிப்பும் வந்தது, மஞ்சரிக்கு.

வந்தனாவும், அவளும் முகத்தில் பூசிக் கொள்ள நினைத்தது, மூல்தானிமிட்டிக் கலவைதான். மூல்தானி மிட்டியே, ஒரு வகைக் களிமண்தானே! ஆக மண்ணாங்கட்டி என்று எண்ணியது சரிதான்.

ஆனால், இப்போது, அது மட்டும்தான் சரி! மற்றப்படி...

''ஏய்... ... ன்மை, வினாடிக்குள் காது!'' என்ற ... வேதனை அரிக்கத்

''நடக்கு... குரல் திடு... பு விவரம் தெரியும். நடக்கும் ... ரிடம் சொல்லியிருப் கொள்... ங்கையிடம்? அவர்கள், வீடு ... க்கில் இன்று இந்த விழா நில்... ன்கிற மாதிரிச் சொல்லி இதற்குள் உத்... இது விஷயம் தெரிந்திருக்கும்?

... செல்வேசனின் வீட்டிலிருந்து எத்தனை ... பரப்பியிருக்கிறார்களோ?

...வோ, ஊரில் முக்கால்வாசிப் பேர், செல் ...னையும் தன்னையும் பற்றியே கிசுகிசுப்பாய்ப் பசிக் கொண்டிருப்பது போல ஒரு கற்பனை தோன்ற, மஞ்சரிக்கு உடம்பு எரிந்தது.

நாளைக்குத் திருமண நிச்சயம் ஆகவில்லை என்று தெரியும்போது, இத்தனை பேரும் இன்னும் என்னென்ன பேசுவார்களோ?

விருந்துக்கு வருகிறவர்களிலும் எத்தனை பேர், அறிவிப்பை எதிர்பார்த்து வருகிறார்களோ? எப்படி யெப்படிப் பார்ப்பார்களோ, என்னென்ன கேட்பார்களோ?

எல்லோர்க்கும் போன் பண்ணி விருந்து இல்லை என்று தெரிவித்து விட்டால், இவர்களைப் பார்ப்பதில் இருந்து, பேசுவதில் இருந்து தப்பித்து விடலாமே!

ஆனால், இதை யோகேந்திரன் ஒப்புக் கொள்ள மறுத்தான்.



விருந்து இல்லை என்று சொன்னால்தான், ஏன் என்ன என்று, எத்தனையோ விதமான கதைகள் பரவ ஏதுவாகும். பார்க்கும் போதெல்லாம், எத்தனை பேருக்கு, எத்தனை காலத்துக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க நேருமோ!

அதை விடுத்துப் பல்லைக் கடித்து இன்றைய விருந்தைச் சமாளித்து நடத்தி விட்டால், பிற்பாடு பிரச்சினை கிளம்பவே வழியிராது என்றான் அவன்.

மஞ்சரி நம்பாது நோக்கவும், அவன் விளக்கம் சொன்னான்.

''பார் மஞ்சரி, இன்றைய அளவில், உன் திருமண அறிவிப்பு என்பது, மற்றவர்களுக்கு வெறும் ஊகம்தான். யாரும் கேட்டால்கூட, ஏதோ பேச்சு வந்தது, பிடிக்கவில்லை, விட்டு விட்டோம் என்று இலகுவாக முடித்து விடலாம். செல்வேசனுடைய குடும்பத்தைப் பற்றி அறிந்த எல்லோருமே, நம் பேச்சைத்தான் நம்புவார்கள்...''

''ஆனால், செல்வா வீட்டில்...''

''முதலில், இந்தச் 'செல்வா'வை விடு. இப்போது செல்வேசன் வீட்டைப் பற்றிப் பார்க்கலாம். இந்தத் தொடர்பின் மூலம் எவ்வளவு தேறும் என்று தெரியுமுன், செல்வேசனுடைய குடும்பம், இதைப் பற்றி ஒரு வார்த்தைகூட வெளியே விட்டிருக்க வழியில்லை. வாயை விட்டு விட்டால், ஒன்றும் கிடைக்காவிட்டாலும், இந்தப் பந்தத்திலிருந்து தானாக வெளியேற, அந்தக் கோழைகளுக்குத் தைரியம் இராது. அவன் ஓடியதைப் பார்த்தாயல்லவா? சமூகத்தில் அவர்கள் நிலையும் அப்படி. பின்புலம் எதுவும் கிடையாது.''

"ஓ! அதனால்தான், பணக்காரி, பெரிய இடம் என்று, செல்வா... தேடியிருப்பாரோ?"

முகம் கடுக்க, "சற்றுத் தாமதம் ஆனாலும், தன் சொந்த உழைப்பின் மூலம் அந்தப் பின்புலத்தைச் சம்பாதித்துக் கொள்வதுதான் பெருமை என்பது என் கருத்து. ஒரு பெண்ணை ஏமாற்றி மணந்து, பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வது கேவலம் என்று, இன்னுமா உனக்குப் புரியவில்லை?" என்று சுள்ளெனக் கேட்டான் யோகேந்திரன்.

வலித்துவிட, "நான் ஒன்றும் அவர் செய்தது சரி என்று சொல்லவில்லையே! பணத்தை ரொம்பப் பெரிதாகக் கருதச் செல்வேசனுக்குக் காரணம் இருக்கிறதா என்று யோசித்தேன்!" என்று மெதுவான குரலில் கூறினாள் அவள்.

"என்ன காரணம் இருந்தாலும், மனிதர்களுக்குக் கொள்கை கோட்பாடுகளும் இருக்க வேண்டும். தப்புகளை நியாயப்படுத்த முயற்சிக்காதே. அதுவும், அடுத்தவர் தப்புகளை!" என்றான் அவன் அதட்டலாகவே.

"சா..ரி!" என்று, மஞ்சரி முகம் வாடி முணுமுணுக்கவும், உடனே மாறி, "விடு விடு. இப்போது, நம் பிரச்சினைக்கு வருவோம். சிவநேசன் அங்கிளிடம் கூட, நான் விருந்துக்கான காரணத்தைப் பிறந்த நாள் என்றுதான் சொல்லியிருக்கிறேன். மற்றவர்களிடமும், அப்படியே. வந்தனாவிடமும், திருமண அறிவிப்பு பற்றி வீட்டில் கூட யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். அதனால் இந்த அறிவிப்பு விஷயம் பற்றி, நீ கவலையே படத் தேவையில்லை!" என்றான் அவன்.



மூச்சு கொஞ்சம் இலகுவாக வரத் தொடங்கும்போதே, ஒன்று தோன்றிவிட, "இந்தப் பிரச்சினையை நீங்கள் எதிர்பார்த்திருக்கிறீர்கள். அதனால்தான், யாரிடமும் திருமணம் பற்றிச் சொல்லவில்லை. அப்படித்தானே? ஆனால், ஏன்?" என்று அவனை நேரே பார்த்துக் கேட்டாள் மஞ்சரி.

யோகனின் முகத்தில் தோன்றிய சலனம், அவள் ஊன்றிக் கவனிக்கும் முன்பே மறைந்தது. "அன்று, தனியே பேசியபோது செல்வேசன் கேட்ட சில கேள்விகளால், இந்த மாதிரியான ஒரு பிரச்சினை எழக்கூடும் என்று எனக்குத் தோன்றியது," என்றான் அவன்.

மேலும் யோசித்துவிட்டு, "ப.. பணம் பற்றி.. பணம் இல்லை என்று, ஏதோ அவரிடம் சொல்லியிருக்கிறீர்கள். அதனால்தான்... தெளிவாகத் தெரிந்து போக வந்திருக்கிறார்!" என்று குற்றம் சாட்டும் குரலில் கூறினாள் அவள்.

"செல்வேசன் கேட்ட சில கேள்விகளுக்கு உண்மையான பதிலைச் சொன்னேன். அதைச் சரியாகக் கேட்கக்கூட அவனுக்கு விருப்பம் இல்லை என்று நன்றாகத் தெரிந்தது. எனவே, அதைப் பற்றித் தெளிவு படுத்திக் கொள்ள ஒரு நாள் செல்வேசன் உன்னிடம் வருவான் என்று எதிர்பார்த்தேன். பிடிக்காத விஷயம் என்றதும், கடைசி நாளைக்குத் தள்ளியிருக்கிறான்."

இந்த நாலைந்து நாட்களாக, யோகேந்திரன் பெரும்பாலும் வீட்டில் இருந்த காரணம் மஞ்சரிக்கு இப்போது புரிந்தது.

இன்றும், கடைசி நாளான இன்றும் வீட்டை விட்டு அசைவதாகவே இல்லை.

திட்டமிட்டு, அவளைப் பாதுகாத்திருக்கிறான்.

ஆனால் நன்றி உணர்ச்சி தோன்றுவதற்குப் பதிலாக, வேதனைதான் தெரிந்தது.

அப்படிக் காப்பாற்றப் பட வேண்டிய நிலையை இழுத்துக் கொண்ட முட்டாள் அவள்.

உள்ளே ரணகாயப்பட்டுத் தவிக்கும்போது, முகத்தில் எப்படிச் சிரிப்பைக் கொண்டு வருவது? விழாவிலும் விருந்திலும் கலந்து, விருந்தாளிகளோடு எப்படிக் கலகலப்பாக உரையாடுவது?

''என்னால் முடியாது, யோகன்! இனிமேல், என்னால் சிரிக்கவே முடியாது போல் இருக்கிறதே! எப்படி நாலு பேரோடு இனிமையாகக் கலந்து பேசுவேன்?'' எனுமுன் மஞ்சரியின் கண்கள் மறுபடியும் நீரைப் பொழியலாயின.

அருகில் அமர்ந்து, அவளது கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தான் யோகேந்திரன். ''என்னவோ, புலிகள் நிறைந்த கூண்டுக்குள், உன்னைத் தனியே அடைத்து விட்டு, நாங்கள் எல்லாம் வெளியே நின்று வேடிக்கை பார்க்கப் போவது போலப் பேசுகிறாயே! விழாவின் கடைசி விருந்தாளி விடை பெற்றுச் செல்லும்வரை, உனக்கு ஆதரவாக நான் இருப்பேன். அம்மா இருப்பார்கள். வந்தனா இருப்பாள். என்னவோ, வெளிநாடு போவேன், வேலை பார்ப்பேன் என்றெல்லாம் சொல்லுவாயே! உலகத்தில், இந்தச் செல்வேசனைப் போல எத்தனை பேர் இருப்பார்கள்! இந்த ஒருவனுக்கே மனம் ஒடிந்து, மூலையில் சுருட்டிக் கொண்டால்,



அப்புறம் எதைச் சாதிப்பாய்? உன்னை அவ்வளவு கோழை என்று நான் எண்ணியதில்லையே!''

கோழை!

கையை உருவிக்கொண்டு 'உச்'சுக் கொட்டினாள் மஞ்சரி. ''என்ன தைரியசாலி என்றாலும், கைகால் ஒடிந்து கிடக்கிறபோதும், இளித்துக் கொண்டா இருக்க முடியும்? என் வலி எனக்கு அல்லவா தெரியும்!'' என்றாள் எரிச்சலோடு.

''நிச்சயமாக. ஆனால், அதை ஊரறியப் பறைசாற்ற வேண்டாம் என்றுதான் நானும் சொல்லுகிறேன்.''

''நான்.. நானா? நான் எ... எங்கே...'' என்று அவள் விழியகலக் கோபமாகத் தடுமாற, அவன் சொன்னான். ''யோசி, மஞ்சரி! இன்றைய விழாவை ரத்து செய்தால், அது செல்வேசனுக்குத் தெரியாமல் போகுமா? தன்னை விட்டால், உனக்கு ஒன்றுமே இல்லை என்று கெக்கலிக்க மாட்டானா? அதுவா உனக்கு ஆசை?''

''இ... இல்லை...'' என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, வந்தனாவின் அழைப்புக் குரல், ஹாலில் கேட்டது.

இருந்த இடத்திலேயே மஞ்சரி சோர்வுடன் அமர்ந்திருக்க, யோகேந்திரன் எழுந்து சென்று, வீட்டின் ஓர் ஓரமாக அமைக்கப் பட்டிருந்த அந்த அறைக்கு வந்தனாவை அழைத்து வந்தான்.

எப்போதும், அந்த அறை மஞ்சரிக்குப் பிடிக்கும். முன்புறமும், பக்கவாட்டிலும் ஜன்னல்களின் வழியே, தோட்டம் அழகாகத் தெரியும். அங்கிருந்தே தோட்டத்

துக்குள் செல்ல ஒரு கதவும் உண்டு. வீட்டின் புழங்கும் பகுதியில் இருந்து ஒதுங்கி இருப்பதால், ஆள் நடமாட்டம் இல்லாமல், அமைதியாக இருக்கும்.

வீட்டுக்குள் வருகிறவர்கள், போகிறவர்களால் கவனம் கலையாமல் இருப்பதற்காக, மஞ்சரி தேர்வுச் சமயங்களில், இங்கிருந்துதான் படிப்பாள்.

இப்போது, பிறரின் கண் காணாமல் படாமல் கண்ணீர் விடவும் இங்கேதான் வந்து உட்கார்ந்திருந்தாள்.

வரும்போதே, யோகன் சுருக்கமாக வந்தனாவிடம் நடந்ததைத் தெரிவித்து விட்டிருக்க, அவளும் அவனது கருத்தையே ஆதரித்தாள்!

''அவனுக்குக் காட்ட வேண்டும், மஞ்சரி. அவன் இல்லாததால், உன் உலகம் இருண்டு போகாது என்று, அவனுக்குக் காட்டியே ஆக வேண்டும். இல்லாவிட்டால், அவனிடம் நீ தோற்றுப் போனதாக ஆகிவிடும். அவனைப் போல ஓர் ஏமாற்றுக்காரனை நீ ஜெயிக்க விடலாமா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

''நீயும் யோகன் மாதிரியே பேசுகிறாயே! எனக்கு இவ்வளவு வேதனையாக இருக்கிறதே. என்னால் சமாளிக்க முடியுமா என்றுதான்...''

''நிச்சயமாக முடியும். நீ என்ன, தனியாகவா நிற்கப் போகிறாய்? நான், யோகன் சார், அவருடைய அம்மா.. எல்லோரும் உன் பக்கம் இருக்கும்போது, என்ன பயம்?'' என்று அவள் அழுத்தமான குரலில் கேட்கவும், மஞ்சரி ஆச்சரியமாக அவளைப் பார்த்தாள்.

''மீண்டும், அதே போலப் பேசுகிறாயே!''



''ஆமாம், வந்தனா என் கட்சி. எனவே, நம் மூவரில், அறுதிப் பெரும்பான்மை எங்களுக்குத்தான் இருப்பதால், விழா நல்லபடியாக நடக்கப் போகிறது. சரிதானா? இரண்டு பேரும் உங்கள் அலங்கார வேலைகளைப் பாருங்கள்! வந்து.. ஏதோ முகத்திற்குப் பூச்சு என்றெல்லாம் காதில் விழுந்ததே! அதையெல்லாம் நன்றாகக் கழுவிவிட்ட பிறகு, கதவைத் திறவுங்கள். இல்லாவிட்டால் வீட்டுக்குள் என்னவோ வந்து விட்டதாக வேலைக்காரர்கள் பயந்து போவார்கள், பாவம்!'' என்று விட்டு அவன் செல்ல, வந்தனா சிரித்தாள்.

''சே, இவரை மாதிரி ஒரு துணை கிடைத்தால், வாழ்க்கை பூராவும் சிரித்துக்கொண்டே இருக்கலாம்!''

வியப்புடன் நோக்கி, ''அப்படியா சொல்லுகிறாய்? இந்த நேரத்தில் போய், என்ன ஜோக் என்று நினைத்தேனே!'' என்றாள் மஞ்சரி.

ஆனால், ''இந்த நேரத்தில்தான் ஜோக் அடிக்க வேண்டும். அதுவும், நோகடிக்காத, இதமான ஜோக். ஒரோருவர், பெண்களின் அலங்காரத்தை எவ்வளவு மட்டமாகக் கிண்டல் செய்வார்கள், தெரியுமா? இதையே, கண்டதையும் பூசிக் கொண்டு, பேய் மாதிரி நிற்பதாகச் சொல்வார்கள். ஆனால், யோகன் எவ்வளவு அழகாகச் சொன்னார், பார்! சீக்கிரமாக இந்த வேலையெல்லாம் முடித்துக் கொண்டு, அழகாக நிற்க வேண்டும் என்று தூண்டுவதுபோல, இல்லை? வா, வா... உன் அறைக்குப் போய் வேலையைத் தொடங்குவோம்!'' என்று, வந்தனா இழுத்துச் செல்ல, இப்போது மஞ்சரிக்கும் மறுக்கத் தோன்றவில்லை.

தாயிடம் யோகேந்திரன் என்ன சொன்னானோ? மஞ்சரியின் கண் பார்க்கும் இடத்திலேயே இருந்தாள் அந்தப் பெண்மணி.

கொஞ்சம் மூத்த தலைமுறையினர் வரும்போது, அருகில் வந்து, அவர்களை அன்பாகக் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்று, உட்கார வைத்தாள்.

மற்றப்படி, வந்தனா மஞ்சரியின் பக்கத்திலேயே நின்றாள்.

யோகேந்திரனும், அடிக்கடி அவள் பக்கம் வந்து போனான்.

இத்தனைக்கும் இடையிலும், ஒரு தரம் மஞ்சரி பேந்த விழிக்கும்படி நேர்ந்து விட்டது.

திலகத்துடைய அண்ணியோடு வந்த ஒரு பெண்மணி - 'காரில் ஏறப் போகும்போது வந்து விட்டார்கள். உட்கார்ந்து பேசவோ, விட்டுவிட்டு வரவோ முடியாமல், கூட்டி வருமாறு ஆயிற்று, அண்ணி,' என்று, ஏற்கெனவே திலகத்திடம் ரகசியமாக விளக்கம் சொல்லப் பட்டிருந்தது. - அந்த அம்மாள், என்ன விழா என்ன விசேஷம் என்றெல்லாம் மற்றவர்களிடம் நோண்டிவிட்டு, மஞ்சரியிடம் வந்து நின்றாள்.


"அது என்னடியம்மா விசித்திரமாக இருக்கிறது! எல்லோரும், ஒன்று பதினாறாம் பிறந்த நாளை, 'ஸ்வீட் சிக்ஸ்டீன்' என்று பெரிசாகக் கொண்டாடுவார்கள். அல்லது, அறிவு வளர்ந்து விட்டதைக் காட்ட, இருபத்தொன்றைக் கொண்டாடுவார்கள். நீ என்னத்துக்கு மூன்று வருஷங்களாக விட்டுவிட்டு, இந்த இருபதாம் பிறந்த நாளைத் திடீரென்று கொண்டாடுகிறாய்?' என்று அவளிடம் விளக்கம் கேட்டாள்.



அதுவும் கணீர் என்ற குரலில்.

பல தலைகள் திரும்பிப் பார்த்தன.

# 9



விழாவைக் கொண்டாடாமல் விட்டுவிட்டால், அது தகுதியற்ற செல்வேசனிடம் தோற்ற மாதிரி என்று எண்ணியதால், இந்தப் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதாக, இந்த அம்மாளிடம் வெளிப்படையாகச் சொல்ல முடியுமா?

சொன்னால், இவ்வளவு வேதனையையும் உள்ளடக்கிக் கொண்டு, விழாக் கொண்டாடுவதன் நோக்கமே அடிபட்டுப் போகும்.

ஆனால், இப்போது, இந்த அம்மாளிடம், அவள் நம்பும்படியாகச் சொல்வதற்கு ஏற்ற விளக்கம் எதுவும் மஞ்சரியிடம் இருந்தால்தானே?

ஆண்டுதோறும் கொண்டாடுவதாகக் கூடச் சொல்ல முடியாமல், மூன்று வருஷங்களாகக் கொண்டாடாததைத் தெரிந்துகொண்டு வந்து கேட்கிறவளிடம், என்னத்தைச் சொல்ல?

ஏதோ வளவளக்கிற பாவனையில், மஞ்சரியின் அருகிலேயே நின்று கொண்டிருந்த வந்தனாவும், இப்போது வாயடைத்து விழிக்கத்தான் செய்தாள்.

''ஆமாம். அங்கே போனால், தானாகத் தெரியும் என்றாயே? என்னம்மா அது?'' என்று அவளுடைய தாயார் வேறு ஆர்வத்துடன் விசாரித்தாள்.

எல்லோரின் முழுக் கவனமும், இந்தப் பக்கம் திரும்பியது.

உண்மையைச் சொன்னால் அவமானம். பொய்யாக ஒரு காரணத்தை இட்டுக் கட்டப் போதிய புத்தியில்லை.

புத்தி இருந்திருந்தால்தான், செல்வேசனை முதலிலேயே இனம் கண்டிருப்பாளே!

வேதனையும் அவமானமுமாகக் கன்னங்கள் சூடேற, முகத்தை மூடிக்கொண்டு ஓடிவிட வேண்டியதுதான் என்று மஞ்சரி முடிவு செய்தபோது. ''இந்த இருபதாவது பிறந்த நாளைத் தனிச் சிறப்புடன் கொண்டாடுவதற்கு, ஒரு முக்கிய காரணம் இருக்கிறது!'' என்றவாறு அருகில் வந்தான் யோகேந்திரன்.

மற்றவர்களைப் போலவே, தங்களுக்கும் இது செய்திதான் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் இருக்க முயன்றபடி, மஞ்சரியும் வந்தனாவும் கூடக் கவனிக்க, அவன் சொன்னான்.

''ஸ்வீட் சிக்ஸ்டீன் எல்லாம் தெரிந்து பேசுகிற கெட்டிக்கார ஆன்ட்டி, கொஞ்சம் முயன்றிருந்தால், அவர்களே கண்டு பிடித்திருப்பார்கள். போனால் போகிறது என்று, இப்போது அதைச் சொல்ல, எனக்கு வாய்ப்பளித்து இருக்கிறார்கள். ஓடுகிற பாம்பைக் கையால் பிடிக்கிற வயசு என்பார்களே, அலட்சியமும், ஆர்வமும் விடலைப் பருவம்! பதின்மூன்றிலிருந்து, பத்தொன்பது வரையிலான 'டீன் ஏஜ்' என்று ஆங்கிலத்தில்



சொல்லப்படுகிற அந்தப் பருவம் முடிந்து, இன்று மஞ்சரி இருபதில் அடியெடுத்து வைக்கிறாள். அதைத்தான் இன்று கொண்டாடுகிறோம். அப்பாவுக்குப் பிறகு, வீட்டில் கொண்டாட்டங்களே இல்லாமல், வீடு இருளடைந்து கிடப்பது போல, எங்களுக்கு ஓர் எண்ணம். மெல்லிசாக ஒரு சாக்குக் கிடைத்ததும் கொண்டாடி விட்டோம். கொண்டாடலாம்தானே? இதில் எந்த விதத் தப்பும் இல்லையே?'' என்று சற்றுப் பயந்தவன் போல, யோகன் கேட்ட விதத்தில், எல்லோரும் சிரிக்கத் தொடங்கிவிட, சற்று முன் இருந்த நிலை அடியோடு மாறிப் போயிற்று.

ஓரிருவருக்கு ஏதேனும் சந்தேகம் இருந்திருக்கலாம். ஆனால், பெரும்பாலும், எல்லோரும் இங்கிதம் அறிந்தவர்கள் என்பதால், சும்மா பேசிச் சிரித்து, சந்தோஷமாக இருந்துவிட்டுப் போனார்கள்.

மஞ்சரிக்கும் தன் இழப்பை முழுசாக நினைக்க நேரம் இல்லாது போனது, ஒரு மாதிரி நன்றாகத்தான் இருந்தது. ஆனால், அவ்வப்போது, இது என்ன விழாவாக இருந்திருக்க வேண்டியது என்று தோன்றுவதை அவளால் தடுக்க முடியவில்லை. அதன் விளைவான வலியையும் தவிர்க்க முடியவில்லை.

ஒரு வழியாக, வந்தனா உட்பட எல்லா விருந்தினரும் கிளம்பிச் சென்ற பிறகு, சோபாவில் அமர்ந்திருந்த திலகத்தின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சற்று நேரம் படுத்துக் கிடந்தாள்.

வாய் வார்த்தைகளால் ஆறுதல் எதுவும் கூறாவிடினும், அந்தப் பெண்மணி அவள் தலையைக் கையால்

மென்மையாக வருடிவிட்டது, பெருமளவு இதமாக இருந்தது.

ஆனால், எவ்வளவு நேரம் இப்படிப் படுத்துக் கிடக்க இயலும்?

''தூக்கம் வந்து விட்டது, அத்தை!'' என்று எழுந்து சென்று படுக்கையில் விழுந்தாள்.

ஆனால், அவ்வளவு அயர்விலும், தூங்க முடியாமல், நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது. மூச்சு விடுவதே சிரமமாகத் தோன்றியது.

இனி என்ன ஆகும், இனி என்ன ஆகும் என்று அதே தவிப்பு.

விடுமுறை முடியும் வரையிலேனும் வீட்டுக்குள்ளேயே சுருட்டிக் கொண்டு இருந்து விடலாம்.

அதன் பிறகு?

இன்னும் ஒரு செமஸ்டர் இருக்கிறதே! கல்லூரிக்குப் போக வேண்டுமே!

போய், அந்தப் ப்ரீதியின் முகத்தில் எப்படி விழிப்பது?

சுனாமி பற்றி அவள் பேசினால் என்ன செய்வது?

தப்பு செய்தது, அவளுடைய அண்ணன்தான். அந்தப் ப்ரீதியும் உடந்தைதான் என்பதும், இப்போது யோசித்துப் பார்க்கையில், தெள்ளத் தெரிந்தது.

ஆனால், அதற்காகத் தன் மேல் தப்பில்லை என்று நிமிர்ந்து நிற்க அவளால் முடியவில்லை. தயக்கமும் கலக்கமுமாக, ஒரே தவிப்பாக உணர்ந்தாள்.

ஒரு மூச்சு அழுதால், கொஞ்சம் லேசாகுமா என்று பார்த்தால், கண்களில் பொட்டுக் கண்ணீர்கூட வரவில்லை.



ஒருவேளை, கண்ணீருக்கு மிஞ்சிய வேதனையா?

சற்று நேரம் உருண்டு பார்த்துவிட்டு, எழுந்து மொட்டை மாடிக்குச் சென்றாள்.

அங்கே, மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு, வானத்தை வெறித்தவாறு, கல்லில் வடித்த சிலை போல அசையாமல் நின்று கொண்டிருந்தான் யோகேந்திரன்.

அவன் நின்ற விதம் எதையோ உணர்த்த, 'ஐயோ, இவனுக்கு என்ன வலி?' என்று, மனம் உருகச் சற்று நேரம் அவனையே பார்த்தபடி நின்றாள் மஞ்சரி.

யோகேந்திரன் அசைவதாக இல்லை.

காதல் தோல்வியில் கசங்கிப் போயிருந்த மனம் அவனையும் அதிலேயே சம்பந்தப்படுத்தி யோசித்தது.

அவனது இந்த நிலைக்குக் காரணம், அந்த அனிதா.

அவளை எண்ணித்தான் யோகன் வருந்திக் கொண்டிருக்கிறான்.

அவளது காதல் களேபரம், அவனையும், ஐந்து ஆண்டுகளாக முயன்று மறந்திருந்த சொந்தப் பிரச்சினை பற்றி எண்ண வைத்து விட்டது போல!

பாவம்! அவளது மூடத்தனத்தால் இப்போது அவனுக்குத் துன்பம்.

யோகேந்திரனைப் பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, உள்ளூர வியப்புத் தோன்றிற்று.

அடுத்த ஆண்டு, இவனுக்கு முப்பது வயதாகி விடும். இப்போதும், ஆண்மைக்கே எடுத்துக் காட்டாய்ப்

பார்த்துப் பார்த்துச் செதுக்கிய சிலை போல இருக்கும் இவனை, இளம் இருபத்தைந்து வயதில் எப்படித்தான் ஒருத்தி வெறுத்துப் போயிருப்பாள்?

இத்தனைக்கும், மஞ்சரி விஷயம் போலப் பணப் பிரச்சினை கூடக் கிடையாது. எப்போதுமே, அந்த வீட்டில் வளத்துக்குக் குறைவு கிடையாதே! ஏக வாரிசு.

நல்ல குணம் வேறு.

எல்லாச் சிறப்புகளும் இருக்கும் இவனுக்கே இந்த நிலை என்றால், தலை விதியைத்தான் நொந்துகொள்ள வேண்டும்.

உறுதியான மனம் படைத்த யோகேந்திரனாலேயே, ஐந்து ஆண்டுகள் கழித்தும் மறக்க முடியவில்லை என்றால், தன் கதி என்ன என்று யோசித்தபோது, மஞ்சரிக்குக் கதி கலங்கியது.

நிச்சயமாக ஆயுள் தண்டனைதான். மெய்யாகவே, ஆயுள் முழுதுக்குமே.

இந்த உயிர் உள்ளவரை, அவள் செல்வேசனை மறக்கப் போவது இல்லை.

பெருமூச்சுடன் திரும்பி, உள்ளே செல்ல இரண்டு எட்டு எடுத்து வைத்தபோது, ''மஞ்சு!'' என்று யோகேந்திரன் அழைத்தான். ''இங்கே வந்து, இந்தக் காற்றில் சற்று நேரம் நின்று பார். ஆறுதலாக இருக்கும்.''

ஆறுதலாக இருக்குமா?

அப்படியானால், இவன் இப்படி அடிக்கடி வந்து நின்று வருத்தத்தைக் குறைத்திருக்கிறான் என்று அர்த்தமா?



இருக்கும். நெஞ்சுக்குள்ளே ஏதோ புழு இருந்து அரிக்கிற மாதிரி, அவளுக்கு இருக்கிறதே, அதே போலத்தானே யோகனும் உணர்ந்திருப்பான். இப்போதும்...

''அனிதா பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா, யோகன்?'' என்று தன்னை யறியாமல் கேட்டுவிட்டு, அவன் திடுக்கிட்டாற் போல நிமிரவும், நாக்கைக் கடித்துக் கொண்டாள் மஞ்சரி.

சிறு மௌனத்தின் பின், ''ஏன் கேட்கிறாய்?'' என்று வினவினான் அவன்.

''அ... அதில்லை, யோகன்... வ... வந்து, நீங்களும் வருத்தமாக நிற்கிற மாதிரி இருந்தது. எ... என்... னைப் போலவே, கஷ்டப்படுவது என்றால்... அந்த அனிதாவும் நீ... ங்களும் உங்கள் இருவருக்கும் கல்யாணம் நடக்கப் போவதாக, அப்போது பேச்சாக இருந்ததே. அத்தை சொல்லி, நானே கேட்டிருக்கிறேன். நீங்கள் இருவரும் ஒன்றாக வெளியே போவீர்கள், வருவீர்கள்... அப்புறம் பார்த்தால், திடீரென்று அனிதா, அவள் ஊருக்கே போய் விட்டாள். திரும்பி வரவே இல்லை. அதனால் உ... உங்களுக்குள்... முன்பு இதை நான் பெரிதாக நினைத்தது இல்லை, யோகன். ஆனால், இன்றைக்கு எனக்கு எல்லாமே... இந்த வலி நன்றாகப் புரிகிறது.''

தயக்கத்துடன் தொடங்கியவளுக்கு, முடிக்கும்போது குரல் நடுங்கியது.

தனக்காக மட்டுமின்றி, யோகேந்திரனுக்காகவும், அப்போது அவளுக்கு அழுகை வந்தது.

அவளது கையைப் பற்றி அழுத்தி, ''ஷ்! அழக்கூடாது, மஞ்சரி. உன்னைப் போன்ற ஓர் அருமையான பெண்ணின் கண்ணீருக்குச் செல்வேசன் கொஞ்சமும் தகுதி உள்ளவன் அல்ல! அத்தோடு, முடிந்து விட்டதை நினைத்து அழுவது முட்டாள் தனம்! முதலில் கண்ணைத் துடை!'' என்றான் குரலில் சிறு கண்டிப்புடன்.

யோகேந்திரனைத் திரும்பிப் பார்த்த மஞ்சரிக்குக் கண்ணீரை மீறிக்கொண்டு, லேசாகச் சிரிப்பு வந்தது.

''ஆங்கிலத்தில், 'பாட் காலிங் த கெட்டில், பிளாக்' என்று ஒரு பழமொழி உண்டு தெரியுமா? இவ்வளவு நேரம், உலகையே பறிகொடுத்த மாதிரி நின்று விட்டு, முடிந்து விட்டதை நினைத்து வருத்தப்படக் கூடாது என்று எனக்குப் புத்தி சொல்கிறீர்களே!'' என்று, மனம் நினைத்ததைச் சட்டெனக் கேட்டு விட்டாள்.

அவன் சற்றுத் திகைத்தாற்போல நிற்கவும், அவளுக்கு மனம் இரங்கிப் போயிற்று.

''என்ன செய்வது, யோகன்? இல்லாததை நினைத்து ஏங்கக் கூடாது என்று இந்த முட்டாள் மனதுக்குப் புரிய மாட்டேன் என்கிறதே! அந்த வகையில், உலக அனுபவம் மிகுந்த யோகேந்திரனும், உலகமே தெரியாத மஞ்சரியும் ஒரே வார்ப்புதான்!'' என்று ஒரு பெருமூச்சுடன் உரைத்தாள்.

மீண்டும் தொடர்ந்த மௌனத்தில், யோகனின் ஓரக் கண் பார்வையை அவளால் உணர முடிந்தது.

''என்ன?''

''நீ சொல்வது சரிதான். முதல் காதலை மறப்பது கடினம்தான். ஆனால், முடியாதது அல்ல. முடியாமல் போனால், உலகத்தில் முக்கால் வாசிப்பேர், இப்போது கண்ணீரில்தான் நீச்சலடித்துக் கொண்டிருப்பார்கள். நாமும் மறக்க முயற்சிப்போம். மறப்பதற்கு, ஒருவருக்கொருவர் உதவி செய்வோம். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான் அவன்.



செல்வேசனை மறக்க முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு இல்லைதான். ஆனாலும், யோகேந்திரனுக்காகச் ''சரி'' என்று தலையாட்டினாள் அவள்.

அன்றிலிருந்து, யோகேந்திரன் மாலையில் சற்று விரைவாகவே வேலையை முடித்துவிட்டு வீடு திரும்பி வந்தான். மஞ்சரியோடு உட்கார்ந்து கதை பேசினான், செஸ், கேரம், ஸ்கிராபிள் விளையாடினான். அல்லது ஏதாவது பொருட்காட்சி, விற்பனை, ஷோ என்று கூட்டிப் போனான்.

பகலில் தையல், பின்னல் என்று திலகம் எதையேனும் செய்யச் சொன்னாள்.

செல்வேசனை நினைத்து வருந்தவில்லை என்று சொல்ல முடியாது. அதிலும், இரவின் தனிமையில், அவன் மட்டும்தான் நினைவு வந்தான். இப்படிப் பொய்த்துப் போனானே என்று, அழ வைத்தான். ஆனால், எப்போதும் அவனையே நினைத்து மருகிக் கொண்டிருக்க, அவளுக்கு அவகாசம் இருக்கவில்லை.

ஒரு சில தினங்கள் இப்படிக் கழிந்தன.

இந்நிலையில், ஒரு நாள் சிவநேசன் வீட்டுக்கு வந்தார்.

அந்தப் பக்கமாக ஒரு வேலையாக வந்தவர், வீட்டில் எட்டிப் பார்த்துவிட்டுப் போகலாமே என்று வந்ததாகக் கூறினார்.

ஆனால், அவருக்கு அருந்தப் பானத்துக்கு ஏற்பாடு பண்ணவென்று திலகம் எழுந்து சென்றதும், கைக் குட்டையில் பூவேலை செய்து கொண்டிருந்த மஞ்சரியைப் பார்த்து, ''உன்னிடம் பேசத்தான் வந்தேன்!'' என்று தொடங்கி, ''இப்படியே எவ்வளவு காலத்தை வீணாக்கப் போகிறாய்?'' என்று வினவினார்.

மஞ்சரி திகைத்துப் போனாள்.

இது அவளுக்கு விடுமுறைக் காலம். அப்போதும், தையல் வேலை வேறு செய்து கொண்டிருக்கிறாள், அதனால், அவளது பொழுதை வீணாக்குவதாகச் சொல்ல முடியாது. பின்னே?

சிறு கவலையும் பயமுமாக நோக்கி, ''என்ன சொல்லுகிறீர்கள், அங்கிள்? எனக்குப் புரியவில்லையே!'' என்று கேட்டாள்.

ஓர் அலுத்த மூச்சுடன், ''என்னம்மா நீ? யோகனைப் பற்றி நீ யோசித்ததே இல்லையா? உனக்கென்று ஒரு வாழ்வு அமையும் வரை, அவன் தன் வாழ்வைப் பற்றி நினைக்கப் போவது இல்லை. அவன் பொறுப்புள்ள பையன். அப்படித்தான் இருப்பான். ஆனால், அவனுக்கும் வயது முப்பது ஆகப் போகிறதே. அவன் வாழ்வு வீணாகிறதே என்று நீ யோசிக்க வேண்டாமா? நீதான் என்ன, ஒன்றும் புரியாத சின்னப் பெண்ணா? இருபது வயது ஆகவில்லை?'' என்றார் குரலில் கண்டனம் தொனிக்க.

''நா..ன்.. இதில், நான் என்ன செய்யட்டும், அங்கிள்?'' என்றாள் அவள் குழப்பத்துடன்.



சட்டென ஏதோ சொல்ல வாயெடுத்து விட்டுத் தலையசைத்து, அதை மாற்றி, ''அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லு. அதற்கு என்ன தடை என்று கண்டுபிடித்து, அதை நீக்கு. எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது!'' என்று முடித்தார் சிவநேசன்.

''என் கையிலா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அவள்.

மீண்டும் ஒரு கணம் தயங்கிவிட்டு, ''ஆமாம்மா, பல ஆண்டுகளாகவே, உன் பொறுப்புதானே அவனுக்கு மிக முக்கியமாகத் தெரிகிறது!'' என்றார் அவர், ஒரு மாதிரிக் குரலில்.

அவரது குரலில் இருந்த குற்றம் சாட்டும் தொனி, மஞ்சரிக்கு எரிச்சலூட்டியது.

யோகன் அவளுடைய கார்டியன் எனும்போது, பொறுப்பும் அவனதுதானே! இதில் போய், இவர் என்ன பிழை கண்டார்?

வழக்கம் போலச் சிவநேசனுக்குத் தன்னைப் பிடிக்காததால், காரணமற்றுக் குற்றம் கூறுகிறார் என்று நினைத்த போதும், அவரது பேச்சை மஞ்சரியால் அலட்சியப்படுத்த முடியவில்லை.

இதுவரை அவள் அறியாதது எதுவும் இருக்குமோ?

இன்னும் என்னென்ன சொல்லப் போகிறாரோ என்று அவள் எண்ணுகையில், நல்ல வேளையாகக் கையில் பழச்சாறுடன் திலகம் வந்து சேர்ந்தாள்.

''உங்களுக்குப் பிடித்த தர்ப்பூசணிச் சாறு, அண்ணா. இந்தாருங்கள். இந்தாம்மா, நீயும் குடி!'' என்று கொடுத்து விட்டுத் தானும் ஒரு டம்ளருடன் அமர்ந்தாள்.

ஏறி வந்து வெய்யிலுக்கு, ஐஸ் போட்ட சாறு அமுதமாக இருந்தது.

ஆனால், அதை ரசிக்க முடியாமல், சிவநேசன் போட்ட புதிர் உறுத்தியது. கூடவே, அப்போது காதில் கேட்டதும் சேர்ந்து கொண்டது.

''நாளைக்கு மும்பைக்குப் போகிறேன், அம்மா. திரும்பி வர, ஒரு வாரம், பத்து நாட்கள் ஆகக் கூடும். அதையும் சொல்லி, விடை பெற்றுப் போகலாம் என்று வந்தேன். வரட்டுமா?'' என்று விடைபெற்றுக் கிளம்பினார் சிவநேசன்.

அவர் கிளம்பிச் சென்ற பிறகு, ''அத்தை, யோகன் ஏன் முன்பு திருமணம் செய்து கொள்ளவில்லை?'' என்று திலகத்திடம் விசாரித்தாள்.

அதிர்ந்து நோக்கிவிட்டு, ''எ... எப்போது?'' என்று கேட்டாள் அந்தப் பெண்மணி.

''அதுதான், அத்தை! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால். அந்த அனிதாவை, அப்போது யோகன் ஏன் மணந்து கொள்ளவில்லை?'' என்று மீண்டும் கேட்டாள் சின்னவள்.

''அது.. ஏன் சிவாண்ணன் ஏதாவது சொன்னாரா?'' என்று பதில் கேள்வி கேட்டாள் திலகம்.

''இம். என்னவோ, நான்தான் தடை மாதிரி... எனக்குச் சங்கடமாக இருக்கிறது, அத்தை.''

''சீச்சீ! அதெல்லாம் இல்லை, செல்லம்!'' என்று பெண்ணின் கன்னத்தை வருடித் தட்டிக் கொடுத்தாள் அவளை வளர்த்தவள். ''அவருடைய தங்கை மகள்



என்பதால், அண்ணனுக்கு ரொம்ப ஆசை. நின்று போனதில் வருத்தம்!''

அனிதா சிவநேசனுடைய தங்கை மகள்.


அதுவரை புரியாமல் இருந்த பல விஷயங்கள், மஞ்சரிக்கு அப்போது தெளிவாயின. அந்தப் பதினைந்து வயதில், சிவநேசன் அவளைத் தன் வீட்டுக்கு அழைத்தது, அவ்வப்போது குற்றம் சாட்டும் தொனியில் பேசியது... அப்படியானால் மஞ்சரி அந்த வீட்டில் இருந்ததுதான், யோகன் - அனிதா பிளவுக்கு முழுக் காரணமா? ஆனால், இப்போதுதானே அத்தை அதை மறுத்தாள்?

பின்னே?

''ஆனால், திருமணம் ஏன் நின்றது, அத்தை?''

சற்று யோசித்துவிட்டு, ''நீ யோகனிடமே கேட்டுக் கொள்!'' என்று முடித்துவிட்டாள் அந்த அன்னை.

இதற்கு மேல், திலகம் ஒன்றும் சொல்லப் போவது இல்லை.




பொதுவாகத் திலகம் இந்த அளவு பேசியதே அதிசயம்தான்.

அன்பாக வளர்த்த பெண் வருந்துகிறாளே என்று, ஆறுதலாகப் பேசியதுதான். அதுவே பெரிது.

அப்போதைக்குச் சும்மா இருந்துவிட்டு, மாலையில் யோகேந்திரன் வந்து, காபி டிபன் முடித்துப் பேசிக் கொண்டிருக்கையில் அவனிடமே விவரம் கேட்டாள் மஞ்சரி.

''ம்ம்ம்... எத்தனையோ காரணங்கள். இப்போது, செல்வேசனோடு உன்னது ஏன் நின்றது? அதைப் போல, அனிதாவுக்கும் எத்தனையோ பைத்தியக்காரத் தனமான பேராசைகள்! ஆனால், இப்போது எதற்கு இந்தக் கேள்வி?''

''நான் காரணமோ என்று...''

''அவளது குணக் கோளாறுக்கு, நீ எப்படிக் காரணம் ஆவாய்? ஐந்து ஆண்டுகள் ஆனபின் அனாவசியமாய் இந்தப் பேச்சு எதற்கு?'' என்றான், விட்டுத் தள்ளு என்பது போன்ற கையசைப்புடன்.

''இல்லை.. அவளும் மணந்து கொள்ளாமல், தனியாகவே இருந்தால், அவளை வரவழைத்து, மனம் விட்டுப் பேசி...''

''அது முடிந்து போன விஷயம்!'' என்றான் அவன் அழுத்தமான குரலில்.

''பின்னே, அன்றைக்கு மொட்டை மாடியில், அவ்வளவு வருத்தப்பட்டுக் கொண்டு நின்றீர்களே! அவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு...''

கை உயர்த்தி, ''நிறுத்து! நிறுத்து!'' என்று மஞ்சரியின் பேச்சை நிறுத்தினான் அவன். ''அன்றைக்கு நான்... அன்றைக்கு நான் தவறாகிப் போன சில சம்பவங்கள் குறித்து நினைத்தது உண்மைதான். ஆனால், அதற்காக,



அனிதாவுக்காக ஏங்கிக் கொண்டு நிற்கவில்லை. 'சுட்ட மண் ஒட்டாது' என்கிற மாதிரி, எங்களிடையே எல்லாம் முடிந்து விட்டது. இனி, ஒன்றுபட இயலாது!'' என்றான் அவன்.

நம்ப முடியாமல், அவனைக் கூர்ந்து பார்த்தாள் அவள்.

தளராமல், அவளது பார்வையைத் தாங்கி நின்றான் அவன்.

ஒன்று, இவன் உண்மை சொல்ல வேண்டும். அல்லது, நன்றாக நடிக்கத் தெரிந்திருக்க வேண்டும். எது சரி?

ஒன்று தோன்ற, ''பின்னே இவ்வளவு நாளில், வேறு யாரையேனும் மணந்திருக்கலாமே! ஏன் செய்யவில்லை?'' என்று கேட்டாள் அவள்.

அவன் தயங்காமல் பதில் சொன்னான். ''ஒன்று, நீயே அனுபவத்தில் அறிந்து கொண்டிருக்கும், முதல் காதலின் பாதிப்பு! காலப் போக்கில், அது குறைந்த போதும், ஏற்றவளாய், இன்னொருத்தி கிடைக்க வேண்டும் அல்லவா? சூடு பட்ட பூனை போல் சற்று அதிகப்படியாகவே எச்சரிக்கையோடு இருக்கத் தோன்றி விடுகிறது.''

காலப் போக்கில், அவளும் செல்வேசனை மறக்கக் கூடும் என்ற யோகனது குறிப்பில், மஞ்சரிக்குச் சந்தேகம்தான். நம்பிக்கையே கிடையாது.

ஆனால், யோகேந்திரன், அனிதாவைப் பழைய தீவிரத்தோடு நினைப்பதில்லை என்ற உண்மை, அவளுக்குப் பெரும் ஆறுதலைத் தந்ததுதான் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

என்னவோ, அவளால்தான் யோகனுக்குத் திருமணமே நடக்கவில்லை என்பது போலச் சிவநேசன் பேசியது தவறாகி விட்டதாலா?

தடையைக் கண்டுபிடித்து நீக்கு என்றார். இப்போது தடையே கிடையாது என்கிறான் யோகன்.

இனித் திருமணம் செய்துகொள்ள வைப்பது, பாக்கி.

வந்தனா யோகனை எப்படிப் பாராட்டிப் பேசினாள்! இவனை விட்டுச் செல்வேசனை எப்படி விரும்ப முடிந்தது என்று கூடக் கேட்டாளே...

கண் முன்னே சொடக்குப் போட்டது, யோகேந்திரனின் கை.

''என்ன யோசனை?''

''இல்லை... ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேனா? நம் வந்தனாவின் நினைவு வந்தது. நன்றாகப் படிக்கிறவள் என்று, அவள் வீட்டில் எல்லோருக்கும், அவள் மீது அதிகப் பிரியம் உண்டு... உங்களுக்கு அவளைப் பற்றி என்ன தோன்றுகிறது, யோகன்?'' என்று, மனது படபடவென்று அடித்துக் கொள்ள, சாதாரணமாகக் காட்டிக் கொண்டு கேட்டாள் மஞ்சரி.

''வந்தனாவா...? அவளைப் பற்றி நான் என்ன நினைப்பது?''

''சும்மா சொல்லுங்களேன். அவளைப் பற்றி என் கணிப்பு சரியா, இல்லையா என்று பார்க்க வேண்டும்!'' என்று சமாளித்து, மீண்டும் தோழியைப் பற்றிய அவனது அபிப்பிராயம் கேட்டாள் அவள்.

''நல்ல பெண்தான். உன்னைப் போலச் சட்டென உணர்ச்சி வசப்படுகிறவள் அல்ல. பிற்காலத்தில்,



மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு நல்ல டாக்டராக இருப்பாள் என்று தோன்றுகிறது. கணவரும், அவளைப் போலவே, ஒரு மருத்துவராக அமைந்தால், சிறப்பாக இருக்கும். என்ன? நீ நினைத்ததும் இதுவேதானா? முகம் பளிச்சென்று மலர்கிறதே!''

மஞ்சரி நினைத்தது அதுவல்ல. ஆனால், சற்று முன் இருந்த படபடப்பு மாறி, மனம் லேசானது, அவளுக்கே ஆச்சரியம்தான்.

இப்போது, இவனுக்குப் பொருத்தமாக, இன்னொரு பெண் வேறு தேட வேண்டும்.

''அதிருக்கட்டும். இன்று, அந்த நட்சத்திர ஹோட்டலில் நடக்கும் நகைக் கண்காட்சிக்குப் போகலாம் என்று திட்டமிட்டோமே. சீக்கிரம் கிளம்பு, இன்றைய தினத்தை விட்டால்,! அங்கிள் திரும்பி வரும்வரை, நாம் மாலையில் வெளியே செல்வது கடினம். நான் வேலை முடிந்து வரத் தாமதமாகும். கிளம்பு!'' என்று யோகேந்திரன் விரட்ட, அவசரமாகச் சென்று, வேகமாக உடை மாற்றிக் கொண்டு, ''தயார்!'' என்று ஓடி வந்தாள் மஞ்சரி.

நட்சத்திர ஹோட்டலில், இதமான ஏசி குளிரில், சுற்றிலுமிருந்த அலங்கார அமைப்புகளை ரசித்தபடி நடப்பதே சுகம்தான்.

வகை வகையான நகைகளைப் பார்க்கையில், முதலில் மஞ்சரிக்குப் பிடித்தமாகத்தான் இருந்தது. ஒன்றிரண்டைக் கழுத்தில், காதில் வைத்துக் கூடப் பார்த்தாள்.

ஆனால், சற்று நேரத்திலேயே, நகைகளின் பளபளப்பும், அதைப் பன்மடங்காகப் பெருக்கிக் காட்டும்

விதமாக அமைக்கப்பட்டிருந்த விளக்குகளின் ஒளியு மாக, அவளுக்குத் தலை வலிக்கத் தொடங்கி விட்டது.

உள்ளூரச் சிவநேசன் கிளப்பி விட்டிருந்த குழப்பம் வேறு.

நீச்சல் குளத்தைப் பார்த்தபடி, காற்றாட நின்று, இருவருமாகக் காபியை அருந்தியபோது, அந்தக் குரல் கேட்டது.

"பார்த்தீர்கள் அல்லவா? நாம் நினைத்து வந்த மாதிரியான போலி நகைகள் இங்கே இல்லா விட் டாலும், கேள்விப்பட்டதை உறுதிப்படுத்துகிற மாதிரி, கண் கொள்ளாக் காட்சி கிடைத்திருக்கிறதே! இரண்டு பேரும் என்னமாய், மேலே இடித்துக் கொண்டு நிற்கிறார்கள்! பொது இடம் என்பதுகூட இல்லையே! இங்கேயே, இப்படி என்றால், இதுகள் வீட்டில் எப்படி இருக்கும்? அம்மா என்று பெயருக்கு ஒரு வாயில்லாப் பூச்சி. அது மனம் வெறுத்துப் போய், வாயே திறப்பது இல்லை. என் பையன் செல்வேசுக்கு, அந்தப் பெண் கிட்டத்தட்ட முடிவாகிற நேரம்! உண்மை தெரிந்ததால், வேண்டாம் என்று, கழன்று கொண்டு விட்டோம்!" என்றது ஒரு மத்திய வயதுப் பெண் குரல்.

செல்வேசு! செல்வேசனுடைய தாயார்! என்னமாகப் பொய் சொல்லுகிறாள்!

அநியாயமாய்ப் பழி சுமத்துகிறோம் என்கிற தயக்கமே இல்லையே!

செல்வாவைப் பெற்றவள் என்று நிருபிக்கிறாள் போலும்.



ஆனால், பாவம்! அவளோடு சேர்ந்து, யோகனையும் அல்லவா கேவலப்படுத்த முயற்சிக்கிறாள்!

முன்பின் அறியாதவர்கள் கூட்டமாய் நெரிக்கையில், குடும்பத்து மனிதர்கள் ஒட்டி நில்லாமல், யார் யாரோ உரசட்டும் என்று விலகியா நிற்பார்கள்? இதைப் போய்த் தப்பாகப் பேசினால், யார் நம்புவார்கள்?

நம்புவதற்கு ஆள் இருக்கிறது என்று, அடுத்துப் பேசிய அம்மாள் நிருபித்தாள். "ஆமாம், செல்வாம்மா! நான் கூடப் பார்த்தேன். அவர்கள் வீட்டிலேயும், இதே கூத்துதான். யார் இருக்கிறார்கள், இல்லை என்று பாராமல் ஓடி ஓடிப்போய், அவளை ஒட்டிக் கொண்டு நிற்கிறான். அவளிடம் ஒன்று கேட்டால், இவன்தான் பதில் சொல்லுகிறான். அந்தப் பையனுடைய அம்மா என் ஒன்றுவிட்ட அக்காவுக்கு நாத்தனார்தானே! ஒரு நாள் அக்காவோடு சேர்ந்து, அங்கே போகும்படி ஆகிவிட்டது. ஏன்டா போனோம் என்று எனக்குத்தான் அசிங்கமாகப் போயிற்று. ஆனால், எப்பவுமே இப் படித்தான் என்பது போல, யாரும் பெரிதாகக் கண்டு கொள்ளவே இல்லை."

அன்று பிறந்த நாளின்போது, நோண்டி நோண்டிப் பேசியவள்! கூட்டு நன்றாகத்தான் சேர்ந்திருக்கிறார்கள்!

"அண்டி வாழுகிற பெண்தானே என்று அவனும், வசதி, வயிற்றுப்பாடு என்று இவளும்..."

அதற்கு மேல் நின்று கேட்டுக் கொண்டிருக்கவில்லை, மஞ்சரியும் - யோகேந்திரனும்!

மீதமிருந்த பாதிக் காபியோடு, முயல் வடிவக் குப்பைக் கூடையினுள் கப்புகளை வீசிவிட்டு, இருவரும் வெளியேறி விட்டிருந்தனர்.

ஓர் ஆறுதலை நாடிப்போய், அமிலத்தைப் பூசிக் கொண்டு வந்ததுபோல, மஞ்சரியின் உடம்பு முழுவதும் எரிந்தது.

இவ்வளவு கேவலமாகக் கூட, மனிதர்கள் பேசுவார்களா?

செல்வேசன் பணத்துக்காக அவளைத் துரத்தி, அப்புறமாகக் கை கழுவினான் என்றால், அது வேறு விஷயம்.

பணம் பத்தும் செய்யும் என்று, அன்றே எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஆனால், இது முழுக்க வெறும் வக்கிரம்! சேசேசே...

அதிலும், யோகனைப் பற்றியா இப்படியொரு கீழ்த்தரமான பேச்சு!

''இறங்கு மஞ்சரி!'' என்று யோகேந்திரன் சொன்ன பிறகுதான், கார் நிறுத்தப்பட்டிருப்பதையே மஞ்சரி கவனித்தாள்.

கடற்கரை.

நட்சத்திர ஹோட்டலில் இருந்த நேரத்தில், இருட்டத் தொடங்கியிருக்கிறது.

சுனாமியின் கைங்கர்யம்! கூட்டம் அலை மோத வேண்டிய நேரத்தில், அங்கங்கே ஒரு சிலர் மட்டுமே இருந்தார்கள்.

''வா, கடலோரமாகச் சற்று நேரம் நின்று விட்டு வருவோம்!''

கடல் காற்று, வேமாக முகத்தில் மோதும்போது, கொஞ்சம் நன்றாக இருக்கக் கூடும் என்று சென்றால்,



உசுப்பி விட்டது போல, அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள்தான் பொங்கி எழுந்தன.

இன்றைக்குத்தான், யோகனின் திருமணம் பற்றிப் பேச்சு எழுந்தது. அதற்குள், அவன் பெயரை அசிங்கப்படுத்தி விட்டார்களே!

''மனச் சாட்சியே இல்லாமல், இப்படிப் புளுகு கிறார்களே!'' என்றாள் கொதிப்புடன்.

''ஆமாம், நம் இருவர் பெயர்களுமே கெட்டு விட்டன!'' என்றான், யோகேந்திரனும்.

''இப்போது என்ன செய்வது, யோகன்? இவர்கள் பேசுவதைப் பார்த்தால், வீடு வீடாகப் போய்ப் பரப்புவார்கள் போல இருக்கிறதே!''

''சாக்கடையைக் கிளறிச் சந்தோஷப்படுகிற கூட்டம். நாறடிக்காமல் விட மாட்டார்கள்!'' என்று மீண்டும் ஒத்துப் பாடினான் யோகன்.

''இதைத் தடுக்க, நாம் என்ன செய்வது?''

''ம்ம்ம்... அவர்கள் போகிற இடத்துக்கெல்லாம், நாமும் போய் உண்மையை விளம்பிவிட்டு வரலாம். ஆனால், அது விரும்புகிற பலனைத் தருமா என்பது தான் சந்தேகமாக இருக்கிறது. 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்கிற மாதிரி, எல்லோரும் எண்ணி விட்டால்?''

இருளில் அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் அவள், ''உங்களுக்குக் கிண்டலாகவா இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''ஐயோ...! இல்லைம்மா! ஆனால், இதில் நாம் செய்வ தற்கு எதுவும் இல்லையே!'' என்றான் அவன், தணிவாக.

சற்று நேரம் யோசித்துவிட்டு, "அதாவது, எல்லோரும் நம்மைப் பற்றித் தப்பாகப் பேசுவார்கள், நினைப்பார்கள். ஆனால், நாம் அதைத் தடுக்காமல், வெறுமனே கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க வேண்டும். அப்படியா?" என்று கேட்டாள் மஞ்சரி.

"கிட்டத்தட்ட அப்படித்தான். ஆனால்..."

வருத்தம் தாளாமல், "அப்புறம், உங்களுக்குத் திருமணம் எப்படி நடக்கும்?" என்று வாயை விட்டாள் அவள்.

"என் திருமணமா?!" என்று ஆச்சரியத்துடன் அவளை நோக்கினான் அவன். "திடீரென்று என் திருமணத்துக்கு என்ன அவசியம் வந்தது?" என்று வினவினான்.

மஞ்சரி பேசாதிருக்கவும், "வா, சற்று நேரம் உட்கார்ந்து பேசுவோம். இன்று, சிவநேசன் அங்கிள் வீட்டுக்கு வந்ததாக அம்மா சொன்னார்கள். என்ன சொன்னார்?" என்று விசாரித்தான்.

விவரம் அறிந்ததும், அவனது கண்கள், அந்த அரைகுறை விளக்கொளியிலும் பளபளத்தன. "ஓகே! எல்லாம் அவர் வேலையேதானா? அதனால்தான் வந்தனா பற்றிய அபிப்பிராயம் கேட்டது எல்லாமா? ஆனால், நீ வந்தனாவைப் பற்றிக் கேட்டது மட்டும் தெரிந்தால் அதிர்ச்சியில் அவருக்கு நெஞ்சு வலியே வந்து விடும்!" என்று சிரித்தான் அவன்.

என்ன சிரிப்பு என்று எரிச்சல் வந்தது, அவளுக்கு.

"ஏன்? வந்தனாவின் படிப்பு முடிய நாளாகும் என்பதாலா? அப்படியானால், வேறு பெண் பார்க்க வேண்டியதுதான். நீங்களும்தான் அனிதாவை மறக்கத் தொடங்கிவிட்டதாகச் சொன்னீர்களே! அப்புறம் திரு



மணத்துக்கு என்ன தடை?" என்று அவனை மடக்கினாள் அவள்.

"ஆனால், நீ ஒன்றை மறந்து விட்டாயே! என் பெயர் மிகவும் அசிங்கமாகக் கெட்டுவிட்ட இப்போது, என்னை யார் மணப்பார்கள்?" என்று பதிலுக்குக் கேட்டான் யோகன்.

"அது..." என்று மஞ்சரி திகைத்தாள். "உங்களிடம் பணம் இருப்பதால்... யாராவது.."

"பணத்துக்காக வருகிற ஒருத்தியை நான் மணப்பதா? அப்படி நீ சொல்லலாமா?"

மஞ்சரியின் தலை தானாகக் குனிந்தது.

அவன் கேட்டது சரிதான். இருந்திருந்து, அவள் அப்படிச் சொல்லலாமா? அதே பிரச்சினையில், மரண அடி பட்டுப்போன அவள்!

"அல்லது, நான் வீட்டை விட்டுப் போய்விடட்டுமா..." என்று அவள் முடிக்கு முன்னரே, "உளறாதே!" என்று அதட்டினான் யோகேந்திரன். "உன்னை வீட்டை விட்டு விரட்டி விட்டாவது, நான் மணம் புரிவேனா? இல்லை, அம்மாதான் அப்படி உன்னை அனுப்பிவிட்டு இருப் பார்களா?" என்றான் கோபமாகவே.

"பின்னே, இதற்கு என்னதான் தீர்வு?" என்று சின்னக் குரலில் கேட்டாள் அவள்.


"இருக்கிறது, இந்தப் பிரச்சினை தீர, ஒரே ஒரு தீர்வு இருக்கிறது. ஆனால், உனக்கு அது ஒப்புதலாக இருக்குமோ, என்னவோ?"

"சொல்லுங்கள், யோகன். எப்படியாவது, இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட்டு, உங்களுக்குத் திரு

மணம் நடந்தால், எனக்கு அது போதும். சொல்லுங்கள்!'' என்று ஆவலுடன் கேட்டாள் மஞ்சரி.

''நான் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுவிட்டு, அதன் பிறகும் அவசரப்படாமல் யோசித்துப் பேச வேண்டும். என்ன?'' என்று, அவள் ஒப்புதலாகத் தலையாட்டியதும், யோகேந்திரன் தொடர்ந்தான். ''பார் மஞ்சு, இந்தப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டிருப்பது நாம் இருவரும். பாதிக்கப்பட்டிருக்கும் நாம் இருவருமே மணந்து கொண்டால், பிரச்சினையே இல்லாது போய்விடுமே! அப்புறம், நாம் என்ன செய்தாலும், பேசினாலும், பேசாவிட்டாலும், ஒட்டி நின்றாலும், தள்ளி நின்றாலும், அதைப் பற்றி யாரும், எதுவும் சொல்லப் போவது இல்லை. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல, இந்த வம்புப் பேச்சும் நிற்கும். எனக்குத் திருமணமும் நடக்கும். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான் அவன்.

தன் காதுகளையே நம்ப மாட்டாதவள் போன்று, செவி மடல்களைத் தேய்த்து விட்டபடி, பிரமிப்புடன் அவனைப் பார்த்தாள் மஞ்சரி.



11

மஞ்சரி காது மடல்களைத் தேய்த்து விடவும், யோகேந்திரனின் முகத்தில் புன்னகை அரும்பியது.



முறுவலித்தவாறே, ''உன் கேட்கும் திறன் சரியாகத்தான் இருக்கிறது, மஞ்சரி. 'நாம் இருவரும் திருமணம் செய்து கொள்வோமா?' என்றுதான் நான் கேட்டேன்!'' என்றான் அவன்.

அப்போதும் மஞ்சரிக்குப் பேச்சே வரவில்லை.

அவளது காதுகளின் மேல் வந்த சந்தேகம், இப்போது அவனது புத்திசாலித்தனத்தின் மீது ஏற்பட்டது.

அவளுக்காவது, என்றேனும் திருமணம் நடப்பதாவது! ஒரு முறை காதல் மலர்ந்த மனம்!

''மஞ்சு!'' என்று, சற்று அழுத்தமான குரலில் அழைத்தான் யோகன், ''காதுகளில் பிரச்சினையில்லை.. வாயில்தான் தகராறு என்கிறாயா? நான் ஒன்றும் இப்போதே நீ பதில் சொல்லியாக வேண்டும் எனவில்லையே! இதைச் செய்தே ஆக வேண்டும் என்றும் சொல்லவில்லை. இப்போதைய நம் பிரச்சினை தீர்வதற்கு இது ஒரு யோசனைதான், சாதக பாதகங்களை அலசி ஆராய, அதன் பின் விருப்பப்படி முடிவெடுக்க, உனக்கு முழு உரிமை உண்டு. அதனால், நீ தைரியமாகப் பேசலாம்!'' என்றான் அவன் தெளிவாக.''

தைரியமாகவா?

''நான் ஒன்றும் பயந்து கொண்டு பேசாமல் இருக்கவில்லை!'' என்றாள் வெடுக்கென.

''பின்னே, விஷயம் என்னவென்று சொல்லு.''

''தெரிந்து கொண்டே கேட்டால், என்னவென்று சொல்வது?''

''மனதில் இருப்பதைச் சொல்வது. ஆசிரியர்கள் சொல்வார்களே, நினைவு இருக்கிறதா? தேர்வு எழுதும்

போது, இதைத் திருத்தப் போகிறவன் முட்டாள்.. அதனால் அவனுக்கு ஐயமே இல்லாது புரியும்படியாக, இந்தப் பதிலை நான் எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டே விடைகளை எழுத வேண்டும் என்பார்களே! அதைப் போல, இப்போது என்னை ஒரு முட்டாளாகக் கருதி, எனக்குப் புரியும் விதமாகச் சொல்லு. ஏனென்றால், நம் திருமணத்துக்குப் பெரிதாக எந்தத் தடையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.''

''வெளிப்படையாக இல்லை. ஆனால் என் மனம்? நான் செல்வேசனைக் காதலிப்பவள்.''

''ஒரு சின்னத் திருத்தம்! அவனைக் காதலித்துத் தோல்வியுற்றவள்!'' என்று காயத்திலேயே கத்தியை வைத்துத் திருகினான் யோகேந்திரன்.

வலி தந்த ஆத்திரத்துடன் அவள் நிமிரும்போதே, ''அதே போலத்தானே நானும்!'' என்று தன் காயத்தை அவன் வெளிப்படையாக ஒத்துக்கொள்ளவும், அவளது கோபம் சட்டென ஆறிற்று.

''அந்த வகையில், பெயர் கெட்டுவிட்ட பிரச்சினை போலவே, இதிலும் நாம் இருவருக்குமே ஒரே நிலைதான். இரண்டு வகையில் முழுப் பொருத்தம்!''

சட்டென, அவள் அவனை உற்றுப் பார்க்கவும், ''வேடிக்கை இல்லை, மஞ்சரி. சொல்லப் போனால், இதைவிட சீரியசாக, நான் எதையுமே பேசியது இல்லை எனலாம்!'' என்றான் அவன் ஆழ்ந்த குரலில்.

''அப்புறம்...'' என்று சற்றுத் தயங்கி விட்டு, அலை கடலைப் பார்த்தபடி அவள் தொடங்கினாள். ''நான் உங்களைக் காதலிக்கவில்லை, யோகன். அ... அதனால், இந்த.. இந்த.. வேறு மாதிரி யெல்லாம், என்னால் நடந்து கொள்ள முடியாது. அதனால்...''



''இந்தத் திருமணத்தால், நம் வாழ்வில், நீ விரும்பாத எந்த வித மாற்றமும் நேரப் போவது இல்லை என்றால்?'' என்று யோகேந்திரன் கேட்கவும், மஞ்சரி திகைத்துத் திரும்பினாள்.

''ஆனால், உங்களுக்குக் குழந்தை... வா... வாரிசு என்று வே... வேண்டாமா?''

''குழந்தை வேண்டாம் என்று யாராலும் சொல்ல முடியுமா? பொறு. நான் சொல்லி முடித்து விடுகிறேன். குழந்தை என்றால், எனக்குப் பிரியம்தான். ஆனால், அது கட்டாயம் வேண்டும் என்று கிடையாது. உன் நிம்மதியை விட, அது எனக்கு முக்கியம் இல்லை.''

தொண்டை அடைத்தது அவளுக்கு.

லேசாகச் செருமிக் கொண்டு, ''அத்தைக்கு ஆசை இராதா? அவர்களை மட்டும் வருத்தப்படுத்தலாமா?'' என்று கேட்டாள் மஞ்சரி.

''அம்மாவுக்கு மட்டும் உன் மகிழ்ச்சி முக்கியம் இல்லை என்றா எண்ணினாய்? இவ்வளவு நாள் பழகி, உனக்கு அம்மாவைத் தெரியவில்லையா?''

''தெரியும். அதனால்தான், அவர்கள் வருத்தப்படும் படி ஆகிவிடக் கூடாதே என்பதுதான் என் கவலையும்!'' என்றாள் அவள்.

''அப்படியானால், உடனே நீ என்னை மணப்பதுதான் சரி.''

''அதெப்படி? வேறு யாரையாவது மணந்தால்..''

''நீ தனியாக இருப்பதை எண்ணியே உடம்பைக் கெடுத்துக் கொள்வார்கள். அன்றைக்கு இரவில் எத்தனை முறை உன் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள், தெரியுமா? அம்மாவுக்கு இந்த உலகத்திலேயே நம் இருவர் மீதுதான் மிகுந்த பிரியம் என்பது, உனக்குத் தெரியும்தானே? நாம் இருவரும் கணவன் மனைவி ஆவதைவிட, அவர்களுக்கு மகிழ்ச்சி தருவது வேறு எதுவும் இராது!''

ஒரு பேரன், பேத்தியை விடவா என்ற எண்ணம், அவளது தொண்டைக்குள்ளேயே நின்று போயிற்று.

திலகத்தின் பாசம் அவள் அறியாதது அல்ல. ஆனால்..

அவள் யோசிப்பதைக் கண்டதும், அவன் வலியுறுத்தினான். ''அம்மாவுக்கு நம் இருவரின் நிலையும் தெரியும், மஞ்சரி. மனம் என்பது மாறுவது. நாளை நடப்பது, நமக்குத் தெரியாது. ஒரு வேளை, உன் மனம் மாறி...''

''மாறாது!''

அவள் பேசாதது போலப் பாவித்து, ''மாறி, வேறு யாரையேனும் விரும்பினால், அந்தக் கணமே உனக்கு விடுதலை கொடுக்க, நான் தயார்!'' என்றான் யோகேந்திரன்.

''அது போல, உங்களுக்கு நான் தர வேண்டும். அப்படித்தானே? ஆனால், நான் வேறு யாரையும் விரும்ப மாட்டேன்.''

''பின்னே, வேறு என்ன பிரச்சினை?''



''ஒன்றும் இல்லை!'' என்றாள் அவள் எரிச்சலோடு.

''ஆனாலும், யோசி. நாளை மாலைவரை யோசி. அப்புறமாக, எனக்குப் பதில் சொல்லு. ஆனால், அது வரை, இது பற்றி, வேறு யாரிடமும் தெரிவிக்க வேண்டாம். அம்மாவிடம்கூட.''

மஞ்சரி விழியை விரிக்கவும், ''தானாக எடுத்துப் பேசாவிட்டாலும், அம்மாவுக்குக் கேட்டால் மறைக்கத் தெரியாது. சில சமயங்களில், சில பேருக்கு, எல்லாம் தெரிவது நல்லது அல்ல!'' என்றான் அவன்.

''புரியவில்லையே!''

''நல்லது.''

நிமிர்ந்து பார்க்கையில், அவனது முகமும் தோளும் மென் சிரிப்பில் குலுங்குவது தெரிய, இருந்த மன நிலையையும் மீறி, அவளையும் அது தொற்றிக் கொண்டது.

முறுவலித்தவாறே, ''எனக்கே தெரிய வேண்டாமா? உங்களைப் போய் மணந்து கொள்ளச் சொல்லுகிறீர்களே!'' என்றாள் அவள், கிண்டலாக.

''மணந்து கொள்! அப்புறம், மூச்சு விட்டதுவரை, அத்தனையையும், மனைவி மகாராணியிடம் ஒப்பு வித்து விடுகிறேன்!'' என்று அவன் இலகுவாகக் கூற, இருவருக்குமே சிரிப்பு வந்தது.

திருமண விவரம் தெரிவித்ததும், திலகத்துக்கும் ஒரே சந்தோஷம்.

இருவரையும் அவளது பூஜையறைக்கு அழைத்துச் சென்று திருநீறு பூசி விட்டாள். மகனை ஆவலாகப் பார்த்தாள்.

லேசாக முறுவலித்துவிட்டு, அவன் சொன்னான். ''திருமணத்தை ஏதாவது கோயிலில் அடுத்த நல்ல நாளிலேயே வைத்துக் கொள்ளலாம், அம்மா. யாருக்காகவும் காத்திருக்க வேண்டாம். அப்புறமாக, ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் வரவேற்பு ஒன்றைத் தடபுடலாக, அங்கிள் திரும்பி வந்ததுமே, நடக்கிற மாதிரி ஏற்பாடு செய்வோம்.''

விழியசையாமல் கேட்டிருந்துவிட்டுத் திலகம் தலை யாட்டினாள்.

அந்தத் தாயின் கண்களில் நீர்த் திரையைப் பார்க்கை யில், மஞ்சரிக்கு உள்ளே வருத்தமாக இருந்தது.

மகனின் திருமணத்துக்காக, ரொம்பவே ஏங்கியிருக் கிறாள். ஆனால், அதுவும் முழுமையான திருமணம் இல்லை என்பது தெரியும்போது... முன்னிலும் அதிக ஏக்கமாகிவிடுமோ?

ஆனால், திலகம் வேறெதுவும் பற்றிப் பேசவே இல்லை.

மஞ்சரி மிகவும் அஞ்சியிருந்த பேரன் பேத்தி பற்றிக்கூட, ஒரு வார்த்தை சொல்லவில்லை. மகன் தனி மரமாக நின்று போவானோ என்று அவ்வளவு அச்சம் போலும்.

மற்ற வகையில், புதுத் துணிமணி, நகை, தாலி, மாலை எல்லா வேலைகளும் சூறாவளி வேகத்தில் நடந்து, நாலே நாட்களில், ஒரு கோயிலில் திருமணம் நல்லபடியாக நடந்து முடிந்தது.

உடனேயே, திருமணத்தைப் பதிவு பண்ணவும், யோகேந்திரன் ஏற்பாடு செய்தான்.



அதே போல, ரிசெப்ஷனுக்கான ஏற்பாடும் சிறப்பாக நடந்தது. அதற்கான அழைப்புகள் கூரியர் மூலம் அனுப்பப்பட்டன.

திருமணம் பற்றிப் பத்திரிகைகளில் பெரிய விளம்பரம் வந்தது.

மணமக்கள் இருவரின் படங்களையும் போட்டு, 'இவர்களின் திருமணம், இன்ன தேதியில் நடை பெற்றது!' என்று மட்டும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பலன், அரை மணி நேரத்துக்குள்ளாகத் தெரிந்தது.

டெலிபோன் செய்து, ''அந்த யோகேந்திரனிடம் இருந்து, கொஞ்சம் பணத்தை வாங்கிக் கொடு என்றால், மொத்தப் பணத்துக்கும் சொந்தக்காரி ஆகி விட்டாயே! நீ இவ்வளவு கெட்டிக்காரி என்று தெரியாமல் போயிற்றே! மோசக்காரி! துரோகி! என்னைக் காதலித்து விட்டு, இன்னொருத்தனை மணந்து கொண்டிருக் கிறாயே! உனக்கு வெட்கமாக இல்லையா?'' என்று கேட்டான் செல்வேசன்.

யார், யாரை, எதற்காகக் குற்றம் சாட்டுவது? அதற்கும் ஒரு தகுதி வேண்டாம்?

எதிர்பாராமல் செல்வேசனின் குரலைக் கேட்டதில் வந்த தவிப்பு, அவனது நியாயமற்ற பேச்சினால் மறைய, ''கொஞ்சம் நிதானித்துப் பேசுங்கள், செல்வேசன். நான் ஒன்றும் பணத்துக்காக இந்தத் திருமணத்தைச் செய்யவில்லை!'' என்றாள் மஞ்சரி கோபத்தோடு.

''பின்னே? நான் நினைத்தது சரிதான் போல. இவ்வளவு அழகான பெண்ணைப் பக்கத்திலேயே இருந்து கொண்டு, எப்படி விட்டு வைத்திருப்பான் என்று...''

மேலே அவன் என்ன பேசியிருக்கக் கூடுமோ? ஆத்திரமும், அருவருப்புமாக மஞ்சரி ரிசீவரை வைத்து விட்டிருந்தாள்.

அத்தோடன்றி, வீட்டில் வேலை பார்க்கும் ஒருவனை அழைத்து, "போன் வந்தால், யார் என்று கேட்டு வந்து கூப்பிடு, சீனி!" என்று பணித்து விட்டுப் போனாள்.

வேலையாள் மூலமாகக் கூப்பிடும் அளவு, செல் வேசனுக்குத் துணிவிராது என்பது, அவளது கணிப்பு. சரியாகத்தான் இருந்தது.

ஆனால், "என்ன, கண்ணில் மின்னல் பாய்கிறதே! யார் போனில்?" என்று அறைக்குள் வந்து கொண்டிருந்த யோகேந்திரன் கேட்டபோது, செல்வேசனைக் காட்டிக் கொடுக்கவும் அவளுக்கு மனம் வரவில்லை.

"சும்மா, ஏதோ குறும்பு வேலை. எடுத்ததும், கடபுடா என்று, கண்டபடி கத்துகிறார்கள். அதுதான் சீனியை எடுக்கச் சொன்னேன்!" என்றாள்.

யோகன் யோசனையாகப் பார்ப்பதைக் கவனியாதவள் போல, ஏதோ வேலையைப் பற்றி முணுமுணுத்தவாறு, அங்கிருந்து சென்றும் விட்டாள்.

ஆனால், அவளைப் பின் தொடர்ந்து வந்து, "உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்!" என்று அவளைத் தனியே, தோட்ட அறைக்கு அழைத்துச் சென்றான் அவன்.

பேசியது செல்வேசன் என்று தெரிந்திருக்குமோ? ஏன் பேசினாய் என்று கேட்கப் போகிறானோ என்று ஒரு கணம் மஞ்சரியின் மனம் தவித்தது. ஆனால், அவள் ஒன்றும் மறைக்க வேண்டும் என்று சொல்லாதிருக்க வில்லையே! அருவருப்பினால்தானே சொல்லவில்லை.



மேலும், யோகன் அவளது பேச்சுரிமையில் எல்லாம் தலையிட மாட்டான் என்று தனக்குள்ளேயே அவள் சொல்லிக் கொண்டபோது, தோட்ட அறைக்குள் அழைத்துச் சென்று கதவைச் சாத்தினான் அவன்.

கலக்கத்துடன் அவள் நோக்குகையில், "விஷயம் உனக்கு முன்னதாகவே தெரிந்திருப்பது நல்லது, திடு மென யாரேனும் சொல்லி, அடுத்தவர் முன்னிலையில் அதிர்ச்சியாகி விடக் கூடாது என்று நினைத்தேன். செல்வேசன் திருமணம் செய்யப் போகிறான். நிச்சய மாகி விட்டது!" என்றான் யோகேந்திரன்.

விஷயம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

ஆனால், இன்னொரு பெண்ணை மணக்கப் போகிறவன், அவளைத் துரோகி என்றானே, அதுதானே புரியாத விசித்திரமாக இருந்தது.

அது அநியாயம், அல்லவா?

ஆனால், செல்வேசனின் நியாயமே வேறுதானே.

அவன் பணத்துக்காகக் காதல் வேஷம் போட்டதை அடியோடு ஒதுக்கி, அவள் பணக்காரி போல நடித்து ஏமாற்றியதாகச் சொன்னான். இப்போது, இன்னொருத்தி யோடு தன் திருமணத்தை நிச்சயம் செய்துவிட்டு, அவளைத் துரோகி என்கிறான்.

அவனைப் பொறுத்த வரையில், அவனது சொந்த நலத்துக்காக அவன் என்ன செய்தாலும், அது சரி யானதே. அதற்கு உதவாத மற்றவர் செய்வதெல்லாம் தப்பு. பாவம், அவனை மணக்கப் போகிறவள்!

"பெண் யார்?"

"என் கணிப்பில் பரிதாபத்துக்குரிய, ஆனால் உனக்குப் பாக்கியசாலியாகத் தோன்றும், அவளும் இந்தப் பக்கம் உள்ளவள்தான். பெயர் ரதி. எம் எம் சூப்பர் மார்க்கெட்காரருடைய ஒரே மகள். வாரிசும்கூட. வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கப் போகிறாராம்."

ரதியும், சிறு வயதில், மஞ்சரியோடு சேர்ந்து படித்தவள்தான். அவளுக்கு அலங்காரத்தில் இருந்த கவனம் படிப்பில் கிடையாது. ஒன்பதாம் வகுப்பில் ஃபெயில் ஆனதும், ஊரில், அவளுடைய தாத்தா பாட்டியிடம் இருந்து படிக்கப் போனாள். நல்ல பெண்தான். அதனாலேயே, பாவம்தான்.

அவளைப் பற்றி யோகன் அடைமொழி கொடுத்து விளக்கியது சட்டென உறைக்க, "நான் அவளைப் பாக்கியசாலியாக நினைப்பதாக உங்களுக்கு என்ன நிச்சயம்? எனக்கும் ரதி பாவம் என்றுதான் தோன்றுகிறது!" என்று எரிந்து விழுந்தாள் அவள்.

தோளைக் குலுக்கிவிட்டுத் தோட்டத்துக்குள் இறங்கிப் போனான் யோகன்.

அவளது பேச்சை அவன் நம்பவில்லையாம்!

போகட்டுமே, நம்பச் சொல்லி, இவனை யாரும் கெஞ்சவில்லை என்று தலையைச் சிலுப்பியபோதும், மஞ்சரிக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது. மனைவி சொன்னால், கணவன் நம்ப வேண்டாமோ?

ஆனால், அதே போல ரதியால் செல்வேசனை நம்ப முடியுமா? ஒரு நாளும் முடியாதே! அது மட்டுமல்ல. அவனை நம்பக் கூடாதும் கூட.



யோசிக்க யோசிக்க, அந்த ரதி மிகவும் பாவம் என்றே மஞ்சரிக்குத் தோன்றியது.

ரதி கொஞ்சம் வெகுளி!

கூடைச் செங்கல்லும் பிடாரிகள் என்பது போல, செல்வேசனுடைய குடும்பத்தில், மஞ்சரி அறிந்த மூன்று பேரும் மோசமானவர்களே. செல்வேசன் தன்னைத் தானே வெகு தெளிவாகக் காட்டிக் கொண்டவன். அவனுடைய தாய், அவனுக்கும் மேல் என்பது, அவளது ஒரே பேச்சிலேயே, தெரிந்து போயிற்று ப்ரீதி அண்ணனுடைய ஏமாற்று வேலையில் பங்கேற்பவள் என்பதும் தெளிவாகிப் போன ஒன்று.

இன்னும் மற்றவர்கள் மட்டும் மாறாகவா இருக்கப் போகிறவர்கள்?

இந்தக் குடும்பத்தில் தன்னை இணைத்துக் கொள் கிறவள் எப்படி நன்றாக இருக்க முடியும்? பாவம்தான்.

அவர்கள் எல்லோரையும் பற்றி, ரதிக்குத் தெரியுமோ, என்னவோ?

தெரிந்திராது. தெரிந்திருந்தால், செல்வேசனை எப்படி மணப்பாள்?

செல்வேசனின் மோசமான புத்தி, முதலிலேயே தெரிந்திருந்தால், மஞ்சரி அவனை நேசித்திருக்கவே மாட்டாளே!

இந்த ரதி, ஒன்றுமே தெரியாமல், குழிக்குள் விழப் போகிறாளே!

இதை எப்படி அவளுக்குத் தெரிய வைப்பது?

மாலை வரவேற்புக்கு அவளும் வருவாளா?

இந்தப் பகுதியில் முக்கியமான எல்லோரையும் அழைத்திருப்பதாக, யோகேந்திரன் கூறியிருந்தான். ரதியுடைய தந்தைக்கும் அழைப்புப் போயிருக்கும். தந்தையோடு ரதி வந்தாலும் வரலாம்.

ரதியைப் பற்றிய இத்தனை எண்ணங்களுள், ஊடுபாவு போல, என்னவென்று புரிந்துகொள்ள முடியாத ஏதோ ஒன்று அவளைக் குழப்பியது.

ஆனால், அது என்னவென்று, இடையிடையே யோசித்துப் பார்த்தும், அப்போது அவளுக்கு, அது புரியவில்லை!



## 12

வரவேற்பன்று முதல் சந்தோஷமாக, வந்தனாவின் வாழ்த்துக் கடிதம் வந்தது.

ஆந்திராவில், ஒரு மருத்துவ முகாமில் உதவிப் பணிக்காகச் சென்றிருந்த அவள், சென்ற வேலையை இடையில் விட்டு வர முடியாதபோதும், "யோகனை மணந்தது, தோழியின் மகிழ்ச்சிக்கு உத்தரவாதம்!" என்று எழுதி, மஞ்சரிக்கு ஆறுதலைத் தந்தாள்.

ஐந்து வயதில் இருந்து, கார்த்திகேயன் வீட்டுப் பெண்ணாக வளர்ந்ததால், வரவேற்புக்கு வந்தவர்களில் பெரும்பான்மையோர், மஞ்சரிக்கு அறிமுகமானவர்களாகவே இருந்தார்கள்.



ஆனால், அவர்களில் பலர், இந்தத் திருமணத்தை எதிர்பார்த்திருந்தது போலப் பேசியதுதான் அவளுக்கு வியப்பாக இருந்தது.

''மஞ்சரி படித்து முடிக்கட்டும் என்று காத்திருக்கிறீர்கள் என்று நினைத்தோம்!'' என்று கூடச் சொன்னார்கள்.

இருவரும் பொருத்தமான ஜோடி என்றும் நிறையப் பேர் சொன்னார்கள்.

யோகேந்திரனை ரொம்பவும் மூத்தவனாக எண்ணியது தவறோ என்று, மஞ்சரிக்குத் தோன்றத் தொடங்கிற்று.

ஆனால், கூடவே இன்னொன்றும் தோன்றியது. திருமணம் என்று ஆகி விட்ட பின், மாறாக யார் பேசுவார்கள்? அநாகரிகமாக இராதா? அதனால், மனதில் என்ன நினைத்தாலும், வெளியே ஒத்துப் பேசுவதுதான் இயல்பு. அதைத்தான் எல்லோரும் கடைப்பிடிக்கிறார்களோ, என்னவோ?

அவர்களது நிறுவனத்து ஆடிட்டர் குடும்பத்தோடு வந்தார்.

அவருடைய மனைவியும், மகளும் மஞ்சரியோடு பேசிக் கொண்டிருக்கையில், ''பரவாயில்லை, யோகன். எல்லாவற்றையும், உங்களுக்குள்ளேயே வைத்துக் கொண்டு விட்டீர்கள். அதுதான் புத்திசாலித்தனம் என்பது!'' என்றர். அது மஞ்சரிக்குத் தெளிவாகக் கேட்டது.

எதை யோகன் குடும்பத்துக்குள் வைத்துக் கொண்டு விட்டான்?

அவளையா?

வீட்டில் யாரும் அவளை வெளி ஆளாக எண்ணிய தில்லை என்பதைக் குறிப்பிட்டாரா?

ஆனால், இங்கே யாருமேதான் அவளை வேற்று மனுசியாக எண்ணியதே இல்லையே! அவள் உள்பட.

கார்த்திகேயன், திலகம், யோகேந்திரன் யாருமே அவளை வேற்றாளாக நடத்தியது கிடையாது. யாரும் அப்படி நடத்த இடம் கொடுத்ததும் கிடையாது. ஐந்து வயதில் இங்கே வந்ததில் இருந்து, இதுதான் அவளது சொந்த வீடாக இருந்திருக்கிறது.

சிவநேசன் மட்டும்தான், இங்கிருந்து கிளம்பித் தன் வீட்டுக்கு வந்துவிடும்படி, அவளிடம் சொன்னது. என்னவோ, அவளைப் பொறுத்த வரையில், இரண்டும் ஒன்றுதான் என்கிற மாதிரிப் பேச்சு வேறு. அவளது மனதைப் பற்றி எண்ணிப் பாராத பேச்சு.

ஒருவரை நினைத்ததும் வந்து நின்றால், ஒரு மோசமான உதாரணம் சொல்லுவார்கள். 'சாத்தானை நினை., உடனே வந்து நிற்கும்!' என்பதுதான் அது.

நிஜத்தில் சிவநேசன் மோசமான மனிதர் அல்ல என்றாலும், அவரைப் பற்றி நினைத்ததுமே, அவர் உள்ளே வரவும், இந்தப் பழமொழி மஞ்சரிக்கு நினைவு வந்து சிரிப்பு மூட்டியது.''

சும்மாவே அவளிடம் குற்றம் கண்டு பிடிக்கிறவர். இப்போதும், கல்யாணப் பெண்ணாய் இலட்சணமாய் இராமல், 'ஈ' என்று என்ன இளிப்பு என்று கேட்டு விட்டால்...? அவசரமாக முக பாவனையை மாற்றி, சாதுப் பெண்ணாகக் காட்சியளிக்க முயன்றவளாய்த் தலை குனிந்து, தரையைப் பார்த்தபடி நின்றாள் அவள்.



''என்ன மஞ்சு, திடீர் வெட்கம்? உனக்கு அதெல்லாம் கூட உண்டா, என்ன?'' என்று யோகேந்திரன் வியந்து கேட்க, ''சிவநேசன் அங்கிள்!'' என்று முணுமுணுத்தாள், மஞ்சரி.

''ஓ!'' என்று திரும்பிப் பார்த்த யோகனின் உடலும், சற்றே விரைப்புறுவதைக் காணவும், மஞ்சரிக்கு ஆச்சரியமாக இருந்தது.

இவனுக்குமா அவரிடம் பயம்?

அதற்குள் அருகில் வந்து விட்டிருந்த சிவநேசன், ''வாழ்த்துக்கள்!'' என்று இருவரிடமும், ஆளுக்கொன் றாகப் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

போட்டோ, வீடியோ எடுப்பவர்கள் அகன்றதும், ''என்னப்பா, அவ்வளவு அவசரம்? என் தலை திரும் பியதும், திருமணத்தை முடித்திருக்கிறாயே! நொட்டு, நொசுக்கு என்று ஏதேனும் சொல்லித் தடுத்து விடுவேனோ என்ற பயமா?'' என்று அவர் கிண்டல் பாவனையில் கேட்டபோது, அவரது குரலில் ஏமாற்றம் போல ஒன்றை மஞ்சரியால் இனம் காண முடிந்தது.

அதே போல அவளிடமும், ''என்ன மஞ்சு, எங்கள் யோகு ஓர் அரிய ரத்தினம்! அருமை அறிந்து நடந்து கொள்!'' என்று சொன்ன போதும், அவரது குரல் பழைய மாதிரியேதான் இருந்தது.

அது என்ன ஏமாற்றம்?

யோகனைத் திருமணம் செய்து கொள்ளச் சொல் என்றது அவரேதான். அதை நிறைவேற்றி வைத்தால், அப்புறமும் என்ன ஏமாற்றம்?

ஒருவேளை, பெறாத பிள்ளையைப் போலப் பாவிக்கும் அவருடைய அருமை யோகனுக்கு, மஞ்சரி தகுதி யில்லை என்ற எண்ணமா?

அவளிடம் பணம் மட்டும்தானே கிடையாது? மற்றப்படி, எத்தனை பேர், ஜோடிப் பொருத்தம் பிரமாதம் என்று சொல்லி விட்டார்கள்!

போட்டோ எடுப்பவர் கூட, அதையே சொல்லி, எத்தனை போஸ்களில் படம் எடுத்தார்!

போகட்டும். இவர் என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும் என்று, லேசாகத் தலையைச் சிலுப்பிக் கொண்டு நிமிர்ந்து நின்றாள் அவள்.

''மெள்ள. சிலுப்புகிற வேகத்தில், தலை ஒடிந்து விடப் போகிறது! ஆனால் அப்படி ஒடிந்தாலும், யோகனுக்கு விடுதலைதானே?'' என்றது, காதருகே கிசுகிசுப்பாய் ஒரு குரல்.

பாம்பின் சீறலாகக் கேட்டது மஞ்சரிக்கு.

கவனத்தைச் சிவநேசனிடம் இருந்து வேகமாகத் திருப்பிப் பார்த்தால், ஒடிந்து விழுகிற மாதிரிக் கொடியுடலுடன், அருகே நின்றவள் அனி..தா.

இவள் இங்கே எங்கிருந்து வந்தாள்?

ஓகே! அங்கிளுடைய தங்கை மகள், அனிதா. இவளை அழைத்து வரத்தான் சிவநேசன் மும்பைக்குச் சென்றிருக்கிறார். அவளை அழைத்து வந்து, யோகனுக்கு மணமுடிக்கத் திட்டமிட்டிருப்பார் போலும். அதற்காகத் தான் மஞ்சரியிடம் யோகனின் திருமணம் பற்றிப் பேசச் சொன்னாரா?



மனிதனின் குரலில் இருந்த ஏமாற்றத்தின் காரணம் இப்போதல்லவா புரிகிறது!

ஆனால், அனிதா விஷயம் முடிந்த கதை, தொடராது என்று யோகன் அவ்வளவு திட்டவட்டமாகக் கூறிய பிறகு, அங்கிள் அவளை இங்கே அழைத்து வந்து என்ன பயன்?

எண்ணமிடும்போதே, மஞ்சரியின் மனம் குழம்பியது.

சற்றுமுன் திரும்பிப் பார்த்துவிட்டு, உடல் விரைத் தானே! அது அங்கிளைப் பார்த்து அல்லவோ? இந்த அனிதாவினால் ஏற்பட்ட பாதிப்போ?

அப்படி இருந்தால்..?

மஞ்சரியின் மனம் கலக்கமும் குழப்பமுமாக அலை பாய்கையில், ''இவர் மிஸ்டர் சீதாராமன், 'எம் எம்' சூப்பர் மார்க்கெட்டின் உரிமையாளர்!'' என்று ஒரு மத்திய வயது மனிதரை ஏதோ வகையில் அவளுக்கும் தெரிந்தவர் போல யோகேந்திரன் அறிமுகப்படுத்திய போது, அவர் யார் என்ன என்று, அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

பக்கத்திலே நிற்கும் அனிதா திரும்பி வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பு கொஞ்சமேனும் இருந்திருந்தால், யோகேந்திரன், தன் கழுத்தில் தாலியைக் கட்டியிருப் பானா என்பதிலேயே மனது உளையும்போது, மற்ற எது மஞ்சரியின் மனதில் எடுபட முடியும்?

அவளது நிலைமை தெரியாமல், வந்த விருந்தாளி தொடர்ந்து பேசினார்.

''எங்கள் பாப்பாவுக்குக் கூட, என் கூட, இங்கே வர வேண்டும் என்று ஆசை. ஆனால் துணிக்கடைக்குப்

போக வேண்டும் என்று, மாப்பிள்ளை கூட்டிப் போக வந்து விட்டதால், அவரோடு போய்விட்டாள். ஆனால், எப்போதாவது, உன்னை நேரில் பார்த்துப் பேச வேண்டும் என்று சொன்னாள். உன் துணி மணிகள் தேர்வு, நீ நடந்து கொள்கிற விதம் எல்லாம், பாப்பா வுக்கு மிகவும் பிடிக்கும். என்றைக்காவது, போன் பண்ணிக் கேட்டுக் கொண்டு வரச் சொல்லட்டுமா, அம்மா?'' என்று அவர் கேட்ட போதும், யார் அந்தப் பாப்பா என்று மஞ்சரிக்குத் திகைப்பாகத்தான் இருந்தது.

யார் என்று புரியாமலே, ''ச... சரி... வரச் சொல்லுங் களேன்!'' என்று சமாளித்து வைத்தாள் அவள்.

''சொல்கிறேம்மா! நீயும் புதுப் பொண்ணு. தொந்தரவு பண்ணக் கூடாதுதான். ஆனால், அவளுக்கும் சீக்கிரமே கல்யாணம் ஆகப் போவதால், உன்னிடம் பேசக் கொள்ள, நிறைய இருக்கிறதாம். சின்ன வயதில், சேர்ந்து படித்த சினேகிதம் வேறே இருக்கிறதல்லவா?'' என்று அவர் நிறையச் சொன்ன பிறகுதான், மனிதர் ரதியைப் பற்றிச் சொல்லுகிறார் என்று அவளுக்கு ஒருவாறு புரிந்தது.

அவள் சமாளித்துக் கொண்டு, உற்சாகம் காட்டிப் பேசுமுன், அவளை ஒரு தரம் பார்த்து விட்டு, ''கட்டாயம் ரதியை வரச் சொல்லுங்கள், சார். பழைய தோழியோடு அரட்டை அடிப்பது, என் மனைவிக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்!'' என்றான் யோகேந்திரன் உற்சாகக் குரலில்.

''ஆமாம், ஆமாம். எனக்கே ரதியிடம், உங்கள் சொந்த ஊர் பற்றிப் பேச ஆசை. நிறைய வயல்களோடு



பச்சைப் பசேல் என்று அழகாக இருக்கும் என்பாளே!'' என்று, சேர்ந்து பேசிய போதும், யோகனின் குறுக்கீடு அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவள்தான், அவன் பேசுமுன்பே, ரதியுடைய தந்தை என்று கண்டு பிடித்து விட்டாளே.

அப்புறம் அதென்ன பார்வை?

என்னவோ, விருந்தோம்பலில் அவள் பின் தங்கி விட்ட மாதிரியும், அதைக் கணவனாக அவன் சமா ளிப்பது போலவும்..! அவன் என்ன, இன்னொருவரை அவளுக்காக வரச் சொல்வது?

இனி, இந்த அனிதாவையும் இதே போல அழைப் பானா?

அவன் மட்டும் அப்படி அழைத்தால், இப்போது போல, அதை ஒத்துப் பின் பாட்டுப் பாடக் கூடாதென்று மனதிற்குள் முடிவெடுத்துக்கொண்டு, மஞ்சரி காத்திருந் தால், யோகேந்திரன் அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தவே இல்லை.

சும்மா அனிதா ஸ்டேட்சில் படித்த படிப்பு, பார்த்த வேலை பற்றிப் பேசிவிட்டு, அவளுடைய பெற்றோரின் நலம் விசாரித்ததோடு சரி.

யாரையோ கூப்பிட்டு, ''மேடத்தைச் சாப்பிட அழைத்துப் போய், கூடவே இருந்து கவனி!'' என்றதோடு, அடுத்து அருகில் வந்த விருந்தாளியோடு பேசத் தொடங்கி விட்டான்.

அப்படியானால், அனிதா பற்றி, அவளிடம் யோகேந்திரன் சொன்னது மெய்யேதானோ?

சற்று நேரம், எந்த விதப் பிரச்சினையும் இல்லாது பொழுது போயிற்று.

வரவேற்புக்கு வருகிறவர்களின் கூட்டம் மெல்லக் குறைந்து, கிட்டத்தட்ட நின்றுவிட, 'அப்பாடி' என்று மணக்கள் இருவரும் சற்று உட்கார்ந்திருந்தபோது, "சற்று நேரத்தில் உணவருந்திவிட்டு விடை பெற்றுச் செல்லுகிறவர்கள் வரத் தொடங்கி விடுவார்கள். சீதாராமனும் வருவார். பிடிக்கிறதோ இல்லையோ, ரதியின் வரவை எதிர்பார்ப்பதாக, மரியாதைக்கேனும் இன்னொரு தரம் சொல்லி அனுப்பு. இல்லாவிட்டால், நன்றாயிராது!" என்றான் யோகேந்திரன்.

சுள்ளென்று எழுந்த கோபத்துடன், "அதென்ன பிடிக்கிறதோ, இல்லையோ? அவள் வருவது எனக்குப் பிடிக்காமல் போவானேன்? நானே அவளுடன் பேச வேண்டும் என்றுதான் நினைத்து வைத்திருந்தேன்!" என்றாள் அவள் பதிலுக்கு.

"பிடித்தம் உள்ளவள் போல, நீ அப்போது நடந்து கொள்ளவில்லையே! சீதாராமன் அவ்வளவு சொன்ன பிறகும், ரதியின் பெயரைச் சொல்லக்கூட, உனக்குப் பிடிக்கவில்லையே!" என்றான் அவன்.

"நான் ஒன்றும் பிடிக்காமல் போனதால், சொல்லாமல் இருக்கவில்லை. அந்த நேரத்தில் மனதில் இருந்த குழப்பத்தில், அந்த 'எம் எம்'காரருடைய பெண் ரதி என்பதே எனக்கு நினைவுக்கு வரவில்லை. அவ்வளவு தானே!" என்று, எரிச்சலோடு உண்மையை வெடுவெடுத்தாள் மஞ்சரி.

"ஏன்? அப்படி என்ன திடீர்க் குழப்பம்?"



நம்பாதவன் போல, அவன் கேட்ட விதம் கடுப்படிக்க, "பின்னே? அனிதா விஷயம் முடிந்து போனது என்றீர்கள்! சுட்ட மண் ஒட்டாது என்பது போல என்று, பிரமாதமாய் உவமை வேறு கொடுத்தீர்கள். ஆனால் மந்திரத்தில் முளைத்த மாதிரி, அவள் வரவேற்புக்கு வந்து நிற்கிறாள். எனக்கு எப்படி இருக்கும்?" என்று சீறினாள் அவள்.

வியந்து நோக்கி, "காதல், திருமணம் என்பதெல்லாம் முடிந்து விட்ட விஷயம் என்றேன். ஆனால் அதற்கும், சிவநேசன் அங்கிளுடைய உறவினளாக அவள் இந்த வரவேற்பில் கலந்து கொள்வதற்கும், என்ன தொடர்பு இருக்கிறது, மஞ்சு மகாராணி?" என்று இலகுவாகக் கேட்டுச் சிரித்தான் அவன்.

மஞ்சு மகாராணி!

சின்ன வயதில், அவள் கோபப்படும்போது, அவன் அழைக்கிற வார்த்தை.

யோகனின் சிரிப்பு, இன்னமும் அவளைக் குழப்பியது.

தலையை உலுக்கி விட்டுக் கொண்டு, "அப்படி யென்றால்..." என்று இழுத்தாள் அவள்.

"அப்படியென்றால், சிவநேசன் அங்கிள் நம் தொழிலில் பங்குதாரர். வாழ்விலும், அவர் எனக்கு என் தந்தைக்கு நிகரானவரே. நம் வீட்டு விழாக்களுக்கு அவரை அழைக்கிறோம். அவர் தன்னோடு யாரையும் கூட்டி வருவதும், வராததும், அவரது விருப்பம். அப்படி யாரையும் அவர் உடனழைத்து வந்தால், அவர்களையும் விருந்தினராக ஏற்போம். அவ்வளவே."

கணவன் சொன்ன விளக்கம் கேட்டு, மஞ்சரியின் கலக்கம் தெளிந்தாற் போலத்தான் இருந்தது. சற்றுத் தொலைவில், குழைந்து, நெளிந்து திலகத்துடன் பேசிக் கொண்டு வந்த அனிதாவைப் பார்க்கும்வரை.

யோகன் அனிதாவை விருந்தாளியாக நினைக்கலாம். ஆனால் அவள் அப்படி நினைக்கவில்லையே.

மணப் பெண்ணின் கழுத்து ஒடியட்டும் என்று, எந்த விருந்தினராவது சொல்வார்களா? அப்புறம், அவளை விருந்தாளியாக எப்படி ஏற்பது?

விரோதியாகத்தானே எண்ண முடியும்?

அதைப்பற்றி, யோகேந்திரனிடம் சொல்ல வேண்டும் என்று மஞ்சரி அவன் பக்கம் திரும்பும்போது, முதல் பந்தி முடிந்து, நிறையப் பேர் விடைபெற்றுச் செல்வதற் காக, மணமக்களை நோக்கி வரத் தொடங்கி விட்டனர்.

முதல் ஆளாக, அவசரமாக வந்த சீதாராமன், "அப்போது, நான் கிளம்புகிறேன், யோகேந்திரன். சாப்பாடு அருமையாக இருந்தது. மெனு அம்மா போட்டதாமே! மாப்பிள்ளை கிளம்புமுன், நான் வீடு போய்ச் சேர்ந்து விட்டால் நன்றாக இருக்கும். வருகிறேன்!" என்று விடை பெற்றார் அவர்.

கணவனின் கண்டனம் நினைவில் இருக்க, "ரதியை வரச் சொல்லுங்கள், அங்கிள்!" என்று ஞாபகமாகக் கூறிவிட்டு, கணவரை ஒரு பார்வை பார்த்த மஞ்சரிக்கு, அவன் புன்னகை புதிராக இருந்தது.

செல்வேசனுடைய வருங்கால மனைவியை வீட்டுக்கு அழைப்பதில், இவனுக்கு என்ன ஆனந்தம்? விருந் தோம்பலைச் சரிவரச் செய்து விட்டாள் என்றா?





காரணம் என்னவாக இருந்தாலும், அவனது புன்னகை அவளுக்கு நிம்மதியைத் தந்தது உண்மை.

வெளி விருந்தினர் கூட்டம் கிளம்பிச் சென்ற பிறகு, நெருங்கிய வட்டம் உணவருந்தி முடிந்தது.

"உன் அப்பா உயில்படி, அந்தப் பணம்..." என்று யோகேந்திரனைத் தனியே கூட்டிப் போய், ஏதோ ரகசியம் பேசினார் சிவநேசன்.

திலகம் தன் அண்ணன் வீட்டாரோடு அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தாள்.

கனத்த தலையலங்காரம் போன்றவைகளை அகற்றி, அலங்காரம் செய்து விட்ட பெண்மணியிடம் கொடுத்துப் பத்திரப் படுத்தச் சொல்லிவிட்டுக் கூந்தலைத் தளரப் பின்னியவாறு வந்த மஞ்சரியிடம், அனிதா வந்து நின்றாள்.

"வெறும் தாலியை மட்டும் கட்டிக் கொள்வதால், எல்லாம் கிடைத்து விட்டதாக இறுமாந்து விடாதே, மஞ்சரி!" என்றாள் அவள் வெறுப்புடன்.

எதையும் எதிர்பார்த்து நடந்தது அல்ல இந்தத் திருமணம் என்பது, இவளுக்கு என்ன தெரியும்?

அத்தோடு, அனிதாவோடு காதல், திருமணம் எல்லாம் முடிந்துவிட்ட விஷயம் என்று யோகேந்திரன் சொன்னதும் நினைவு வரப் பதில் பேசாமல் விலகிச் செல்ல முயன்றாள் மஞ்சரி.

அவளை வழி மறித்து, "அவ்வளவு திமிரா? நான் சொன்னது புரியவில்லையா? யோகன் மனதில், உனக்கு இடம் கிடையாது. ஒரு நாளும் கிடைக்காது என்பதைக்

கொஞ்சம் தெளிவாகவே, தெரிந்து கொள்!'' என்றாள் அனிதா அதட்டலாக.

''அப்படியென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். காதில் விழுந்தது. சரி, விஷயம் அவ்வளவுதானே? வழியை விடுங்கள்!'' என்றாள் சின்னவள்.

அனிதாவின் முகம் சீற்றத்தில் தக்காளிப் பழம் போலச் சிவந்தது.

''அவ்வளவு அலட்சியமாடீ?'' என்று ஆத்திரத்துடன், 'டீ' போட்டாள் அவள். ''யோகன் என்ன உன்னைக் கரை காணாத காதலில் மணந்து கொண்டதாக எண்ணினாயா? முட்டாள், சரியாக ஐந்தே ஆண்டுகள். இதே யோகன் என் காலடியில் கிடந்தார், தெரியுமா? நான்தான் அவரை உதறிவிட்டுப் போனேன். கடமை, கண்ணராவி என்று, உன் பொறுப்பை அவர் விட மாட்டேன் என்றதற்காகத்தான், எங்கள் திருமணம் நின்றது...''

சுமை... அவள் சந்தேகப்பட்டது சரியேதானா?

அப்போதே, யோகனுக்கு அவளிடம் அவ்வளவு அன்பிருந்ததா?

ஆனால், அது அன்பா? அன்றிக் கடமை உணர்ச்சியா?

''அப்போது அவருக்கு, யாரோ ஒரு பெண்ணின் பொறுப்போடு, அவரை மணக்க, எந்தப் பெண்ணும் முன் வர மாட்டாள் என்று தெரியவில்லை. அவரது பணத்துக்கும், அழகுக்குமாகப் பெண்கள் க்யூவில் நிற்பார்கள் என்று அலட்சியமாக எண்ணினார். பாவம்! ஐந்து ஆண்டுகளாக, எத்தனையோ முயற்சிகள் பலனற்றுப் போய்க் கடைசியில், பொறுப்பை நிறை



வேற்றுவதோடு, மனைவியும் கிடைத்தாள் என்று உன்னையே மணப்பதற்கு மணந்து கொண்டிருக்கிறார். பரிதாபம்தான். போகட்டும். உன்னைப் போல ஓர் அனாதையை ஆள் பிடிப்பதும் கடினம்தானே?

''ஒரு வழியாய், எல்லாப் பிரச்சினைகளுக்கும், இப்படியொரு தீர்வு கண்டார் போல.

''பாவம்! தன் கஷ்டம் தீர்ந்தது என்று நினைத்திருப்பார். என்னை மறுபடியும் பார்த்த பிறகு, இப்போதுதானே, உண்மை புரியும்? ஐயோ, ஐயோ என்று தவிக்கப் போகிறார். உனக்கென்ன, என்றைக்குமே, ஒட்டுண்ணி வாழ்க்கை. இன்றைக்குக் கசக்கவா போகிறது? சரிசரி. போ!... ஏய், கொஞ்சம் நில்லு. இன்னும், உன்னை நான் வாழ்த்தவில்லையே! காதலற்ற, குறுகிய வெற்று மண வாழ்வுக்கு, என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!'' என்று, ஒரு வழியாக விஷத்தைக் கக்கிவிட்டு, வழியை விட்டு விலகினாள் அனிதா.




அனிதா சொன்ன அத்தனை கொடிய வார்த்தைகளுமே, மஞ்சரியைப் பெரிதும் பாதித்தன.

விஷத் தேள் கொட்டுவது போல, வலிக்க வைத்த வார்த்தைகள்.

அவற்றில் இருந்த உண்மை, மஞ்சரியை ரொம்பவே நோகடித்தது.

அந்த வீட்டில் இருந்து, உண்டு உடுத்தி, விளையாடி இருந்த இத்தனை காலத்தில், அவள் தன்னை ஓர் ஒட்டுண்ணியாகக் கருதியதே இல்லை.

உள்ளார்ந்த அன்பைக் கொடுத்தபோது, அதே அன்புடன் பராமரித்த அந்த வீட்டினரிடம் இருந்து எதைப் பெறவும், அவள் கூசியது இல்லை.

ஆனால் இப்போது அவளது அன்பு மட்டும் போது மானது அல்ல என்ற எண்ணம் தோன்றி விட்டது.

அதே அன்பைத்தான் அவர்களும் கொடுக்கிறார் களே! அதற்கு மேலுமாக, உண்ண உணவு, உடுக்க உடை, தலைக்கு மேல் கூரை... அதுவும் என்ன மாதிரியாக!

திருமணம் ஆன பிறகும், மஞ்சரியும் யோகனும் அவரவர் அறைகளிலேயே இருப்பது பற்றித் திலகம் எதுவும் சொன்னது இல்லை. எந்த அளவுக்கு மஞ்சரி மீது அன்பிருந்தால், அவளது மன நிலைக்காக, இதையெல்லாம் ஒரு தாய் பொறுப்பாள்?

அதிலும், ஒரே மகனைப் பெற்ற தாய். பேரன், பேத்தி என்று, எத்தனையோ ஆசைகள் கட்டாயம் இருந் திருக்கும். சிறு அறிகுறிகூடக் காட்டாமல் அவைகளை அடக்கிக் கொண்டது மட்டுமின்றி, எவ்வளவு அன்பாக இருக்கிறாள்!

அந்த விஷயத்தில் ஒன்றும் செய்வதற்கே இல்லை என்ற போதும், 'பொன் வைக்கிற இடத்தில் பூ' என்பார்களே, அதுபோல, மற்ற எல்லா வகையிலும், திலகத்தின் விருப்பப்படியே நடந்து கொள்ள வேண்டும் என்று, மஞ்சரி தீர்மானித்தாள்.



ஆனால், அனிதாவின் கொடுக்கு அவளுள் செலுத்திய விஷம், அது மட்டும் அல்ல.

யோகேந்திரனுக்கு இன்னமும் அவள் மீதுதான் காதல் என்றாளே! அது எந்த அளவுக்கு நிஜம்?

இல்லை என்று மறுத்தவன்தான். ஆனால், அவளது நன்மைக்காக என்று, பொய் சொல்லி இருக்கலாம், அல்லவா? 'புரை தீர்ந்த நன்மை பயக்கும்' என்று சொல்லியிருந்தால்...?

அப்படி இல்லாமலும் இருக்கலாம். ஆனால், ஒரு வேளை அப்படியிருந்தால்...?

அதனால்தான் குழந்தையைப் பற்றி, அப்படி விட்டேற்றியாகப் பேசினானா?

அதாவது, அனிதாவின் நினைவில், யோகனுக்குத் தான் இன்னொருத்தியோடு வாழப் பிடிக்கவில்லை. அதனால், குழந்தையும் வேண்டியிருக்கவில்லை.

இது தாங்க முடியாத துன்பமாக இருந்தது, மஞ்சரிக்கு.

அவனிடம் கேட்டுத்தான் ஆக வேண்டும்.

மஞ்சரியின் இரண்டு தீர்மானங்களையும், ஒரு சேர நிறைவேற்ற வாய்ப்பளிப்பது போலத் திலகம், மருமகளைக் கூப்பிட்டு, "வரவேற்பில், யோகன் சரிவரச் சாப்பிட்டானோ, என்னவோ? கொஞ்சம் பால் குடிக்கிறானா என்று கேட்டு வாம்மா! குடிப்பதாகச் சொன்னால், ஃப்ரிஜ்ஜில் அன்னம்மா பாதாம்கீர் செய்து வைத்திருக்கிறாள். எடுத்துப் போய், இரண்டு பேருமாகக் குடியுங்கள்!" என்று மகனிடம் அனுப்பி வைத்தாள்.

அத்தை சொல் தட்டாமல், யோகேந்திரனிடம் போய் நின்றாள் அவள்.

இன்றைக்கும், அவன் மொட்டை மாடியில்தான் நின்று கொண்டிருந்தான்.

இப்போதும் அனிதாவின் நினைவா?

அன்று போலச் சத்தமின்றித் திரும்பிச் செல்ல முயற்சியாமல், அருகில் சென்று லேசாகத் தொண்டையைக் கனைத்தாள், மஞ்சரி.

மெதுவாகத் திரும்பி, "என் பெயர்தான் உனக்குத் தெரியுமே! அப்புறம் என்ன கனைப்பு? கணவன் பெயர் சொல்லக் கூடாது என்று யாராவது புதிதாகக் கற்றுக் கொடுத்திருக்கிறார்களா? வேண்டாம்மா! எப்படிச் சுருக்கினாலும்கூட அழகாக இருக்கும் என் பெயரை, வெறும் தொண்டைக் கமறல் ஆக்கிவிடாதே, ப்ளீஸ்!" என்றான் அவன், அஞ்சிய குரலில் கெஞ்சுதலாக.

அவன் பேசிய விதத்தில் தோன்றிய முறுவலை, மஞ்சரி அவசரமாக அடக்கிக் கொண்டாள். அவள் அவனிடம் பேச வந்த விஷயம் வேறு. இப்படி, இலகுவாகத் திசை திருப்ப விடக்கூடாது.

திலகம் சொல்லியனுப்பியதை, முதலில் கேட்டு விடலாம் என்று, பால் விஷயம் கேட்க, அவன் வயிறு ஃபுல் என்று மறுத்து விட்டான்.

அதிலேயே தொடங்க எண்ணினாள் மஞ்சரி. 'பாருங்கள் யோகன், அத்தையின் மெனு எல்லாம் உங்களுக்குப் பிடித்தது. ஒரு வெட்டு வெட்டியிருப்பீர்கள் என்று தெரியாதா? ஆனாலும், பாதாம்கீர் வேண்டுமா



என்று கேட்கிறார்கள். இவ்வளவு அன்பு வைத்திருப்பவர்களுக்கு, உள்ளூர எவ்வளவு ஆசை இருக்கும்! அத்தையின் வருத்தம்தான் மனதை உறுத்துகிறது!"

"என்ன ஆசை? என்ன வருத்தம்? எனக்கென்னவோ, இன்று அம்மா சந்தோஷமாக இருந்தது போலத் தோன்றியதே!" என்றான் அவன், சாதாரணமாக.

புரியவில்லையா? நடிப்பா?

ஆனால், அனிதாவின் பெயரைச் சொல்ல வெறுப்பாக இருந்ததால், இந்த வழியிலேயே மஞ்சரி முயற்சிக்க வேண்டியிருந்தது.

எரிச்சலை அடக்கிக் கொண்டு, "பே... பேரக் குழந்தை ஆசையைச் சொன்னேன். அத்தை வருத்தப் படுகிறார்களோ என்று... வந்து, நீங்களும் அவசரப் பட்டுப் பொறுப்புக்காக என்னை மணந்து, அந்த வழியில்லாமல் ஆக்கிக் கொண்டு தவிக்கிறீர்களோ?" என்று, விளக்க முயன்றாள் அவள்.

புருவம் சுருக்கி அவளைப் பார்த்தான், யோகேந்திரன்.

"இப்போது, நீ என்ன சொல்ல வருகிறாய்? அதனால் அம்மாவின் ஆசை நிராசையாகி வருத்தப்படுவது, உனக்குத் தாங்கவில்லை என்றா? அதாவது, நம்முடைய இப்போதைய ஏற்பாடு சரியில்லை... அதனால், பிள்ளை பெற்றுக் கொள்ளத் தயார் என்கிறாயா?"

ஒரு கணம் திகைத்தவளுக்குக் கோபம் வந்தது. எதில்தான் வேடிக்கை செய்வது என்று இல்லையா?

ஆத்திரமாக முறைத்தாள் அவள். "இது நாம் முன்பே பேசி முடித்த விஷயம். நீங்கள் வேறு அந்த... வ... வந்து... வேறு பெண்ணைக் காதலித்தவர்."

''அதற்காக? இயல்பான குடும்ப வாழ்க்கைக்கு நான் தயாரில்லை என்று நான் சொன்னதே இல்லையே!''

சற்றுத் திகைத்துவிட்டு, ''எப்படியும் என்னைக் காதலிக்க வில்லை அல்லவா? அப்புறம் எப்படி, என்னிடம்... நானும் ஒருவனை நினைத்திருப்பவள். அதனால், இந்த மாதிரி வேடிக்கைப் பேச்சு எல்லாம் வேண்டாம்!'' என்றாள் அவள் சற்றுக் கடுமையான குரலில்.

''நினைத்தேன். ஹூம்...'' என்று நீளமாகப் பெருமூச்சு விட்டான் யோகேந்திரன்.

அவள் புரியாமல் நோக்குகையில், ''உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், மஞ்சு. தயவு பண்ணி, எதைப் பேசுமுன்னும், சற்று யோசித்துப் பேசு. இந்த மாதிரி ஆசை காட்டி, இனிமேல் என்னை ஏமாற்றாதே!'' என்றான் அவன் மிக வருத்தமாக.

''என்ன, என்ன ஏமாற்றம்?''

''என்ன... ஏமாற்றமா? கொஞ்ச நஞ்சமா? இந்த வீட்டில், உன்னைப் போல ஒரு சின்னக் குழந்தை தவழ்ந்து, தளர் நடை நடந்து, ஓடியாடி விளையாடுவது போல, மடமடவென்று ஆயிரம் கற்பனைகள் பண்ணி விட்டேனே! எல்லாம் வீண்!'' என்றான் அவன், பழைய குரலிலேயே.

''ச்சு, யோகன்!'' என்று சலித்துக் கொண்டபோதும், திரும்பிச் சென்று படுக்கையில் விழுந்தவளின் மன திலும், ஏதேதோ கற்பனைக் காட்சிகள் தோன்றலாயின.

எல்லாவற்றிலும், ஒவ்வொரு பருவத்தில் இருந்த குட்டி யோகன்தான் கதாநாயகன்.



இதன் பாதிப்பிலிருந்து மீள, மஞ்சரிக்கு இரண்டு மூன்று நாட்கள் ஆயின. அதன் பிறகே, அனிதாவைப் பற்றிக் கணவனிடம் எதையும் தெரிந்து கொள்ளவில்லை என்பது அவளுக்கு உறைத்தது.

ஒரு வேளை, அனிதா பற்றி அவள் கேட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான், யோகன் இப்படிக் குழந்தை, இதென்று பேசினானோ?

இந்தச் சந்தேகமும், அவளுக்குத் தீர்க்கப்படாமலே நின்று போயிற்று.

இதற்கிடையே, செல்வேசன் விஷயமாக, மஞ்சரி இன்னொரு குட்டுப் படும்படி ஆயிற்று.

ரதியின் நினைவு அவ்வப்போது, மஞ்சரிக்கு வந்து கொண்டேதான் இருந்தது. ஆனால், அவளாக ரதியின் வீடு தேடிப் போய் எச்சரிக்கவும், அவளுக்கு மனமில்லை.

ஒரு வேளை, இவள் போகிற நேரத்தில், அங்கே செல்வேசனோ, அவனுடைய குடும்பத்தவர் வேறு யாருமோ இருந்தால் ரசாபாசமாகி விடக் கூடும் என்று தயங்கினாள் அவள்.

ஆனால், 'பொன் முட்டையிடும் வாத்தாக' ரதி, அந்தக் குடும்பத்திடம் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று அதுவும் தவிப்பாக இருந்தது.

யோகனிடம் ஒளிவு மறைவற்று எல்லாவற்றையும் பேசுவது போல, இதையும் சொல்லி, மஞ்சரி யோசனை கேட்டாள்.

ஆனால், அவள் அளவுக்கு, அவனுக்கு இது முக்கியமாகத் தோன்றவில்லை போலும்.

''நீதான் ரதியை வரச் சொன்னாயே. அவளாக வந்து, அவனைப் பற்றிக் கேட்டால், அப்போது பார்க்கலாம். மற்றப்படி, அடுத்தவரின் வாழ்வு நம் பொறுப்பில்லை!'' என்று சற்று விட்டேற்றியாகவே சொல்லிவிட்டுப் போய் விட்டான், அவன்.

கணவனின் பேச்சு, மஞ்சரிக்கு அவ்வளவாக ஒப்புதலாக இல்லை. நமக்குத் தெரிந்தே ஒருவர் குழியில் விழப் போனால், தடுக்காமல் இருப்பது தப்பல்லவா? ஆனாலும், அதற்கு மேல் என்ன செய்வது என்றும் ஒன்றும் தோன்றாமல், அவளுக்குக் குழப்பமாக இருந்தது.

இந்நிலையில் திலகத்துடைய அண்ணன் மகளின் திருமண நாள் வந்தது. திருமணமாகிப் பத்து ஆண்டுகள் நிறைவுறுவதைப் பெரிதாகக் கொண்டாட விரும்பி எல்லோரையும் அழைத்தார்கள்.

அதற்கு ஏற்றதாக ஒரு பரிசு வாங்கி வருமாறு, திலகம் மருமகளை அனுப்பியிருந்தாள்.

அந்தப் பரிசுக்காகப் பிரபல ஷாப்பிங் காம்ப்ளக்சை மஞ்சரி அலசி ஆராய்ந்து கொண்டு இருந்தபோதுதான், ரதியை அவள் சந்தித்தாள்.

மஞ்சரியை அப்படி எதிர்பாராத விதமாகச் சந்தித்ததில், ரதிக்கும் ஆனந்தமே.

''நாம் இதைக் கொண்டாடுவோம்!'' என்று அவள் சொல்ல, இருவருமாகச் சென்று, இரண்டு சமோசாவும், குளிர் பானமும் வாங்கி வந்து சாப்பிட்டார்கள்.

ஆடை, அணிகள் பற்றி, ரதியோடு உரையாடிய ஒவ்வொரு கணமும், மஞ்சரியின் மனம், செல்வேசனைப்



பற்றிய பேச்சை எப்படித் தொடங்குவது என்பதிலேயே இருந்தது.

திடுதிப்பென்று, அவனது குணக்கேடு பற்றி, எப்படிச் சொல்வது? உனக்கு எப்படித் தெரியும் என்று ரதி கேட்டால், தன் அவமானத்தை வெட்கமின்றிச் சொல்ல முடியுமா?

''பத்து நாட்களாக, உன்னைப் பார்க்க வேண்டும் என்று நான் கிளம்பிக் கொண்டே இருந்தேன், மஞ்சரி. ஆனால், செல்வேஷ் அங்கே இங்கே என்று அழைத்துப் போய்க் கொண்டே இருந்ததால், அது முடியாமலேயே போயிற்று!'' என்றாள் ரதி பெருமிதமாய்ப் புன்னகைத்தபடி.

அதாவது, செல்வேசன் தடுத்திருக்கிறான். ரதி அவளிடம் பேசுவது, செல்வேசனுக்குப் பிடிக்கவில்லை.

வண்டவாளம் தண்டவாளத்தில் ஏறி விடும் என்கிற அச்சம்!

இது புரியாமல், இவள் பெருமைப்படுகிறாளே!

ஆனால், பேச்சில் வந்துவிட்ட செல்வேசனின் பெயரை விட்டு விடாமல் மஞ்சரி தொடங்கினாள். பலமுறை யோசித்து வைத்திருந்த விதமாகத்தான்.

''ரதி, நான் சொல்லுகிறேனே என்று தப்பாக நினைக்கக் கூடாது. வந்து.. செல்வேசனை உனக்கு எவ்வளவு நன்றாகத் தெரியும்? வெகு சமீபமாகத்தானே! அதற்குள், அவரை வாழ்க்கை முழுதுக்கும் துணையாகத் தேர்ந்தெடுப்பது, ஒரு மாதிரி ஆபத்தானதாகத் தோன்றவில்லை?'' என்று வினவினாள்.

கண்களில் கனவு மிதக்க, ரதி புன்னகை செய்தாள். ''இன்னார்தான் நம் இணை என்று தீர்மானிப்பதற்கு,

ஒரு பார்வை போதுமே, மஞ்சரி. நம் சீதையும், ராமனுமே அப்படித்தானே! என்னைவிட, செல்வேஷ் அதி விரைவு. என்னைப் பார்த்ததுமே, மின்சாரம் பாய்ந்தது போல இருந்ததாம், அவருக்கு. மற்ற எல்லாப் பெண்களும், குரங்கு மூஞ்சிகளாகத் தெரிகிறார்களாம். எப்படி இருக்கிறது, பார்!'' என்று சிரித்தாள் அவள். ''நான் இல்லாமல், அவரால் வாழவே முடியாதாம். உருகி உருகி உயிரே... அவரது உயிருக்கே உத்தரவாதம் கிடையாது என்கிறார். பார்த்த வினாடியே, இவ்வளவு அன்பு உண்டாயிற்று என்றால், நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி, மஞ்சரி! அதனால்தான், அவர் விருப்பம் போலத் திருமணத்தைச் சீக்கிரமாக வைக்கும்படி அப்பாவிடம் சொன்னேன்.''

பாவி! வார்த்தைகள் கூட, அதேதான்! புதுப் புது வசனங்களை உருவாக்க நேரம் இல்லையா? அல்லது, மூளை வளமே அவ்வளவுதானா?

பெரும் பிரச்சினையாக, இப்படிக் கண் சொக்கி நிற்கிறவளை, எப்படி நடப்புக்குக் கொண்டு வருவது?

''உனக்கும் அப்படி ஏதும் இருந்ததா, ரதி?'' என்று விவரம் கேட்கிற சாக்கில், ரதிக்கு நிலையுணர்த்த முயன்றாள் மஞ்சரி.


''இ.. ல்லை.. ஆனால், அவர் சொல்லச் சொல்ல, எனக்கும் அப்படி ஆகிவிட்டது!'' என்றாள் அவள், கனவுப் பார்வையுடன்.

''எதற்கும், சற்றுப் பொறுத்து... திருமணத்தைக் கொஞ்ச நாள் கழித்து நடத்தலாமே, ரதி!'' என்றாள் மற்றவள், சற்றுக் கெஞ்சுதலாக.



ரதியின் வாழ்வுக்காகத்தான், மஞ்சரி கெஞ்சுவது. ஆனால், அதை ரதி புரிந்து கொண்டால் அல்லவா, அவளுக்கு நல்லது.

மாறாக, ''எதற்காகவோ?'' என்று, தலை சரித்து, புருவம் தூக்கி, ஒற்றைச் சொல்லாகக் கேட்டாள் ரதி.




கொஞ்சம் நிதானித்திருந்தால், ரதி அப்படிக் கேட்ட விதமே, மஞ்சரியை எச்சரித்திருக்க வேண்டும்.

ஆனால், அந்த அப்பாவிப் பெண்ணைக் காப்பாற்றி விடும் வேகமே அவளுக்கு மிகுந்திருந்தது.

ரதி கேட்ட 'எதற்காக' என்ற வார்த்தையை மட்டும் எடுத்துக் கொண்டு, ''உன் பணத்துக்காக உன்னைச் சுற்றுகிறாரா என்று தெளிவுபடுத்திக் கொண்டு, அதன் பிறகு...'' என்று சொல்லிக் கொண்டிருந்தவளை இடையிட்டு, ''போதும், நிறுத்து!'' என்றாள் ரதி ஆத்திரத்தோடு.

''கல்யாணம் ஆகி விட்டது. அதுவும் ஒரு சிறந்த மனிதரோடு. முன்பு என்ன மாதிரி நடந்திருந்தாலும், இப்போது அடியோடு மாறியிருப்பாய் என்று நினைத்தேன்!'' என்றாள் அவள் கசந்த குரலில்.

இவள் என்ன சொல்லுகிறாள்? அவளுக்கு உதவி செய்ய முயன்றால், தன்னையே ஏதோ குற்றம் சாட்டுகிறாளே!

சற்றுத் திகைத்துவிட்டு, "நான் என்ன மாதிரி நடந்தேன் என்கிறாய்?'' என்று வியப்புடன் விசாரித்தாள் மஞ்சரி.

''எல்லாம் எனக்குத் தெரியும். தெரிந்தும், இதுவரை நான் உன்னைத் தப்பாக நினைக்கவில்லை. பெற்றோர் இல்லாதவள். தன்னது என்று உரிமையோடு வாழ ஆசைப்பட்டு, அப்படி நடந்திருப்பாய் என்று, எனக்குப் பரிதாபம்தான்...''

''இன்னமும், நான் எப்படி நடந்தேன் என்று நீ சொல்லவில்லை.''

''ஏன், சொல்லாமலே உனக்குத் தெரியாதா? நீயே திட்டமிட்டுச் செய்ததுதானே! உற்ற உறவினர் அற்ற அனாதைப் பெண் என்ற பரிதாபத்தில், செல்வேசன் கொஞ்சம் இளக்கமாகப் பேசினால், அதை வைத்துக் கொண்டு, அவரை வளைத்துப் போட முயன்றாயே! அவருக்கு அந்த மாதிரி எண்ணம் இல்லை என்று தெளிவாகச் சொன்ன பிறகும், அவரை மோப்பம் பிடித்துக் கொண்டு, நீ சுனாமி முகாமில் சேர்ந்து சென்று, அவரைச் சுற்றியது கூட, எனக்குத் தெரியும். அவரே, என்னிடம் வருத்தத்துடன் சொன்னார். அவர் ஒரேயடியாக மறுத்ததும், நீ அவரை மறந்து யோகேந்திரன் சாரை மணந்தாய் என்று நினைத்தேன். செல்வேசனே அதைப் பற்றி ரொம்பவும் சந்தோஷப் பட்டார். கடைசியில் பார்த்தால்... சே! இன்னொருத்தர் மனைவியாக இருந்து கொண்டு, செல்வேசனின் திருமணத்தைக் கெடுக்கப் பார்க்கிறாயே! உன்னை.. உன்னை... உன்னை என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லையே!'' என்று பொரிந்து கொட்டியவள், குனிந்து, தன் சாமான் பைகளை எடுத்துக் கொண்டாள்.



''செல்வேஷ் அவ்வளவு சொன்ன பிறகும், பரந்த மனதோடு உன்னிடம் பிரியமாகப் பேச வந்தேன், பார். என்னைச் சொல்ல வேண்டும்!'' என்று உரக்கவே முணுமுணுத்தபடி, வேகமாக நடந்து, அங்கிருந்து சென்று விட்டாள்.

மஞ்சரிக்கு மிகவும் மனதுக்குக் கஷ்டமாகிப் போயிற்று.

அவள் முயன்ற நல்ல காரியம் நடக்காதது மட்டுமின்றி, அவளுக்குக் கெட்ட பெயரையும் வாங்கிக் கொடுத்து விட்டதே!

ஆனால், அடிப்படையே இல்லாமல், செல்வேசன் இப்படிப் புளுகக் கூடும் என்று, யாரால் எதிர்பார்க்க முடியும்?

அவன் அடுக்கடுக்காய்ச் சொன்ன பொய்களை ஆசையுடன் நம்பிய பெண்ணால், அவளது நன்மை விரும்பியாக மஞ்சரி சொன்ன உண்மை எச்சரிக்கையைச் சும்மா ஒரு பேச்சளவில்கூட, ஏற்க முடியவில்லையே!

யோசிக்கிறேன் என்று வாய் வார்த்தையாகக் கூடக் கூறாமல், என்னென்ன சொல்லிவிட்டுப் போய் விட்டாள்!

மனம் மிகவும் சஞ்சலமுற்றுச் சங்கடப்பட்டது.

நடந்ததை யோகேந்திரனிடம் சொன்னால், அவனும் அவளுக்கு ஆறுதலாக எதுவும் கூறினானில்லை.

மாறாக, ''அவள் சொல்லத் தேடிய வார்த்தை என்ன என்று தெரிகிறதா? உன்னை வைக்கோல் போர் நாய் என்றிருக்கிறாள். தேவைதானா உனக்கு?'' என்றான் அவனும், சற்று ஏளனமாகவே.

''நான் ஒன்றும் செல்வேசன் பின்னே அலைந்தது கிடையாது!'' என்றாள் மஞ்சரி ஆத்திரத்துடன்.

''உண்மையே. ஆனால், அவன் இன்னொருத்தியை மணப்பதும் உனக்குப் பிடிக்கவில்லையே. அதுதானே இடிக்கிறது.''

ஆத்திரத்துடன் கணவனை முறைத்துப் பார்த்தாள் மஞ்சரி. ''ஹையோ! கண்ணை இப்படி முட்டை மாதிரி விரித்துப் பார்த்தால், பார்க்கச் சகிக்கவில்லை. ஆனால், இப்போது என்ன கோபம், உனக்கு? உள்ளதைச் சொன்னால், உடம்பு எரியும் என்பார்களே, அது போலவா? அல்லது, வேறு ஏதாவதா?''

''நான் எதற்காக ரதியிடம் பேசினேன் என்று, உங்களுக்குக் கூடவா தெரியாது? அதற்குப் பிறகும், அவளைப் போலவே உளறினால், கோபம் வராதா? அதற்கும் மேலாக, உள்ளதாம், உடம்பு எரிவதாம்! சரியான பேத்...தல்...'' என்றாள் அவள் மிகுந்த கோபத்துடனேயே.

ஆனால், சொல்லி முடிக்கும்போது, அவளது உதடுகள் நடுங்கத் தொடங்கிக் கண்களிலும் நீர் வடியத் தொடங்கி விட்டது.

அவளது திடீர் அழுகையில், அவர்கள் இருவரில் யார் அதிகமாக அதிர்ந்தது என்று சொல்வதற்கில்லை.

ஆனால், உடனே தன்னைச் சமாளித்து, ''ஏய்... மஞ்சு... என்ன இது?'' என்று அவளை இழுத்துத் தன் மேல் சாத்திக் கொண்டு, அவளது தலை, முதுகெங்கும், யோகன் வருடிக் கொடுத்தான்.

''என்னம்மா, இவ்வளவு நாளில், உனக்கு என்னைத் தெரியாதா? சும்மா ஒரு வேடிக்கைக்குச் சொன்னால், இப்படி அழுவதா? வேண்டுமானால், நான் சொன்னதை,



அப்படியே வாபஸ் வாங்கிக் கொள்ளட்டுமா? சரி, மஞ்சு! இனிமேல், நீ கண்ணை முட்டை மாதிரி... வெறும் முட்டையல்ல... டைனோசர் முட்டை மாதிரி விரித்து விழித்தாலும், பார்க்கச் சகிக்கும்படி... ஊகூம், பார்க்க அழகாகவே இருக்கும். சரிதானா?'' என்று அவன் சொல்லி முடிக்கும்போது, மஞ்சரிக்குத் தன்னை மீறி, லேசாகச் சிரிப்பு எட்டிப் பார்த்தது.

அவன் மார்பில் முகத்தை அழுத்தியபடியே, ''நான் ஒன்றும் அதற்காக அழவில்லையே!'' என்றாள் சிணுங்கலாக.

''நிஜமாகவா? அடடா, விஷயம் புரியாமல், அவசரப்பட்டு மன்னிப்புக் கேட்டு விட்டேனே! சரிம்மா! இப்போது மன்னிப்பு வாபஸ்! சரிதானா? நீ உன் கண்ணை...'' என்றவன், ''ச்சு, யோ..கன்!'' என்று அவள் புன்னகையோடு சலிக்கவும் வாய் விட்டு நகைத்தான்.

அருகில் கிடந்த இருக்கையில் அவளை உட்கார வைத்து, ''சரி, வேடிக்கை போதும், உட்கார்ந்து பேசலாம். இப்போது, ரதி உன் அறிவுரையை ஏற்கவில்லை என்று, உனக்கு வருத்தம். அதைப் போக்க, நான் என்ன செய்ய முடியும், சொல்லு?'' என்று வினவியவாறு, தானும் அருகில் அமர்ந்தான்.

என்ன செய்ய முடியும்? தீவிரமாகச் சிந்தித்தும், மஞ்சரிக்கு ஒன்றும் தோன்றவில்லை.

அவளைச் சற்று யோசிக்க விட்டு, அதன் பின் யோகனே பேசினான்.

''செல்வேசன், பொய்யில் பெரிய அரண்மனையே கட்டி வைத்திருக்கிறான், மஞ்சரி. சீதாராமன் சாரும்

கூட, அதை நம்பியிருப்பதால்தானே, திருமண ஏற்பாடுகள் நடப்பதே! அதை மறுப்பதற்கான உறுதியான சான்றுகள் நம்மிடம் கிடையாது. எனவே, இனி இதைப் பற்றிப் பேசினால், நாம்தான் அசிங்கப்பட நேரும். ஏதோ உன்னால் ஆனது, ஒரு முயற்சி செய்து விட்டாய். இதற்கு மேல், அவரவர் வாழ்க்கை, அவரவர் பொறுப்பு. விட்டு விடு!'' என்றான் அவன்.

சுழித்த புருவத்துடன் உட்கார்ந்திருந்தாள் அவள்.

விட்டு விடலாம். ஆனால், ரதி? இந்தப் பேராசைப் பேய்களிடம் சிக்கி என்ன பாடுபட நேருமோ?

ரதிக்குத் தனிப்பட்ட அழகான முக அமைப்பு கிடையாது. ஆனால், ஒரு சின்னக் குழந்தையின் கபடற்ற கண்கள், அவளை அழகியாக்கிக் காட்டும். அந்தக் கண்கள் கண்ணீரைச் சொரிய நேர்ந்தால்...?

மனக் கண்ணில் அந்தத் தோற்றத்தைப் பார்த்துவிட்டு, ''எப்படி விட முடியும்?'' என்றாள் மஞ்சரி.

முகம் மாற, ''ஏன் விட முடியாது?'' என்று சுருக்கமாகக் கேட்டான் யோகேந்திரன்.

''ரதியை நினைத்துப் பாருங்கள். அவளது வாழ்க்கை ஒரே துன்பமாகி விடாதா?''

''அந்தப் பெண்ணின் மகிழ்ச்சிக்குப் பொறுப்பாளி யாக உன்னை யாரேனும் நியமித்து வைத்திருக்கிறார் களா, என்ன?''

'இப்படிச் சொன்னால் எப்படி, யோகன்? அவளை நினைத்தால் பாவமாக இருக்கிறதே!'' என்றாள் அவள்.

''அங்கேதானே பிரச்சினையே.''



''என்ன பிரச்சினை?''

''உன் மனதில் பாவமாகத் தோன்றுவது, அவளா, நீயேதானா என்பதுதான்!''

''என்ன பைத்தியக்காரத்தனம்! செல்வேசனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவது, அவள்தானே! எனக்கென்னவாம்?''

''அதைத்தானே நானும் சொல்லுகிறேன்! இவ்வளவு நேரமாக.''

சற்று யோசித்துவிட்டு, மறுப்பாகத் தலையசைத்தாள் மஞ்சரி. ''என்னால் அப்படி ஒதுக்கி விட முடியாது!'' என்றாள் அவள் முடிவாக.

தோளைக் குலுக்கிவிட்டு, யோகேந்திரன் எழுந்தான்.

''உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டுமே. அடுத்த ஞாயிறன்று சிவநேசன் அங்கிள், நம்மை அவர் வீட்டுக்கு விருந்துக்குக் கூப்பிட்டிருக்கிறார். உன்னிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டுச் சொல்கிறேன் என்று விட்டு வந்தேன்,'' என்றான்.

மஞ்சரிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

சிவநேசனிடமே கொஞ்சம் ஒதுக்கம் என்பதோடு, அனிதா வேறு அங்கிருந்து போன மாதிரித் தெரிய வில்லை. அவள் இருக்கும் இடத்துக்குப் போகவே, அடியோடு பிடிக்கவில்லை.

ஆனால், அதை இவனிடம் சொன்னால், 'நாம் அங்கே போவதற்கும், அவருடைய உறவினளாக அனிதா அங்கே இருப்பதற்கும் என்ன சம்பந்தம்?'' என்பான்.

எனவே, ''கட்டாயமாகப் போய்த்தான் ஆக வேண்டுமா?'' என்று மட்டும் கேட்டாள்.

தேங்காய்க் கீற்றாய், யோகனின் புன்னகை தெரிந்தது. ''ஒரு தலைவலியைப் போகாதிருப்பதற்குச் சரியான காரணமாக, அங்கிள் ஒத்துக் கொள்ள மாட்டாரே!'' என்றான் இலகுவாக.

''அது சரி, அவரே ஒரு தலைவலி ஆயிற்றே!'' என்று அவள் உடனே கூறவும், சட்டெனச் சிரித்தான் அவன்.

அவளது மூக்கைப் பிடித்து, ஆட்டிவிட்டு, ''பெரியவர்கள் என்கிற மரியாதையே இல்லாமல், வர வர வாய் நீளுகிறது!'' என்றுவிட்டு, ''ஞாயிற்றுக்கிழமை வருவதாகச் சொல்லி விடுகிறேன்,'' என்று முறுவலோடு கூறிவிட்டுக் கிளம்பினான் அவன்.

''ம்ம்ம்... அடுத்த ஞாயிறு அங்கிள் வீட்டு விருந்து. அதற்கடுத்த ஞாயிற்றுக் கிழமை, ரதி - செல்வேசன் திருமணம்!'' என்றாள் மஞ்சரி யோசனையோடு.

''மீண்டுமா?'' என்று சிறு சலிப்புடன் கூறியபடி அங்கிருந்து வெளியே சென்றான் யோகேந்திரன்.

ரதியின் பிரச்சினையை, நமக்கு ஒன்றுமில்லை என்று விட்டுவிட முடியாது என்று யோகேந்திரனிடம் சொன்ன போதும், அது பற்றி மேற்கொண்டு எதையும் செய்யவும், மஞ்சரியால் முடியவில்லை.

அவளுடைய கணவன் கூறியது போல, செல்வேசன் கட்டி வைத்திருந்த பொய் மாளிகையை உடைப்பதற்கான ஆயுதம் எதுவும் அவளிடம் இல்லை.

அவளிடம் இருப்பது எல்லாம் அவளது வாய் வார்த்தைகள் மட்டுமே. அந்த வார்த்தைகள் உண்மை என்று நிரூபிக்கும் சான்று ஒன்றுகூட இல்லையே!



கூடவே இருந்து, அவன் அவளைச் சுற்றிச் சுற்றி வந்ததைப் பார்த்தவள் ப்ரீதிதான். ஆனால், அவளும் அவளுடைய அண்ணனோடு கூட்டுச் சேர்ந்து நாடகமாடியவள். இப்போதும், அதைத்தான் செய்வாள். அவளது சாட்சியம், மஞ்சரியை மேலும் கேவலப் படுத்துவதாகத்தான் அமையும்.

அது மட்டுமல்ல, செல்வேசனிடம் மஞ்சரி மயங்கியதையும்தான், எப்படிச் சொல்லுவது? அதுவுமே, தன்னைத் தானே அவள் கேவலப் படுத்திக் கொள்வது தானே?

இது பற்றி வாய் திறந்தாலே, அது மஞ்சரிக்குத்தான் அவமானம். அதனால்தான், அவளுடைய கணவன் அத்தோடு விட்டுவிடச் சொல்லியிருக்கிறான்.

பிடிக்கிறதோ, இல்லையோ, யோகனின் பேச்சைக் கேட்பது தவிர, மஞ்சரிக்கு வேறு வழி இருக்கவில்லை.

ஆனால், புத்திக்குத் தெரிந்து ஒரு தப்பு நடக்கப் போவதைத் தடுக்க முடியாமல், கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பதும் அவளுக்குக் கடினமாக இருந்தது.

அவள் அமைதியற்று இருப்பதைக் கண்ட திலகம், மஞ்சரிக்குச் சில பல வேலைகளைக் கொடுத்து, அவளது கவனத்தைத் திருப்பினாள்.

வீட்டை அழகு படுத்துவது, சமையலில் சில புதிய பதார்த்தங்களைச் செய்து யோகனை ஆச்சரியப்பட வைப்பது, யோகனின் அறையைச் சுத்தப்படுத்திப் பொருட்களை அடுக்கி வைப்பது... இப்படிப் பல வேலைகள்.

எல்லா வேலைகளுமே மஞ்சரிக்குப் பிடித்துப் போயின.

வீட்டை அழகு படுத்துவது, எப்போதுமே அவளுக்குப் பிடித்தமான ஒன்று, தோட்டத்துப் பூக்கள், இலைகளைக் கொண்டே, பூக்குவளைகளில் விதம் விதமாக, அழகாக அடுக்கி விடுவாள்.

சமையல் புதுப் பிரவேசம். சமையல்கார அன்னம் மாவும், மஞ்சரியைச் சிறு வயதில் இருந்து பார்த்து வந்தவள் என்பதால், பரிவுடனேயே உதவ, இவளும் சந்தோஷமாகச் செய்தாள்.

கேலியும் கிண்டலும் செய்தாலும், அவள் கவனத்துடன் செய்து வைத்தவற்றை யோகன் நன்றாகவே சாப்பிடவும், உற்சாகத்துடன் இன்னும் புதிது புதிதாகச் செய்வதில் மஞ்சரி ஈடுபட்டாள்.

அப்புறம், யோகனின் அறை.

அதைச் சுத்தம் செய்து, விரிப்பு மாற்றி, பொருத்தமாக ஜன்னல் திரை மாற்றி, ஏற்றாற் போலப் பூக்குவளைகளில் மலர் அடுக்கி... இந்த வேலைகளைச் செய்யும்போது, மிகவும் சந்தோஷமாக உணர்ந்தாள், அவள்.

யோகனுக்காகச் சமையல் செய்து, அவனது அறையைப் பராமரித்து, அவனோடு பேசிச் சிரித்து... ஒரு புது மனைவி என்னென்ன செய்வாளோ, அதையெல்லாம், மஞ்சரியும் செய்தாள் எனலாம்.

ஒன்றைத் தவிர.

விசித்திரம் என்ன என்றால், திலகம்கூட, அதைப் பற்றிக் குறைப்படவில்லை. அவளது அறைக்குப்



பக்கத்து அறையிலேயே, எப்போதும் போலவே, மஞ்சரி இருக்கும்போது.. அவளுக்கு விஷயம் தெரியாதிருக்க வழியில்லை.

யோசித்துப் பார்க்கையில், திருமணத்துக்கு முன்பே, யோகன் இந்த ஏற்பாடு பற்றித் தாயிடம் தெரிவித்திருக்கிறான் என்பதுதான் மஞ்சரியின் ஊகம்.

ஆனால், ஒரே ஒரு மகனைப் பெற்றிருந்த அந்தத் தாய், அதை எதிர்க்கவில்லையே!

மஞ்சரியின் மன நிலை உணர்ந்து, விட்டுக் கொடுத்து, அவளது ஐந்து வயதில் இருந்து காட்டி வந்த அன்பை இன்றும் தருகிறாள்.

மகனுக்கு ஒரு குழந்தை பிறந்து, அதைக் கொஞ்சிக் குலாவ வேண்டும் என்று எவ்வளவு ஆசைப்பட்டிருப்பாள்!

ஏன், மஞ்சரியிடம் இவ்வளவு பாசத்தைச் சொரிகிறவள், அவளுடைய மகளை அணைத்து மகிழ வேண்டும் என்றும்தான் ஆசைப்பட்டிருப்பாள்.

பாவம்! எல்...லாம் வீணாகி.. ஒரு வேளை, இயற்கையின் ரசாயனம், மகன், மருமகள் இருவரையும் வென்று, எப்படியாவது ஒன்று சேர்த்து விடும் என்று எண்ணியிருப்பாளோ?

பாவம்! அப்படி எந்த ரசாயன மாற்றமும், அந்த இருவரிடையே நடப்பதற்கான அறிகுறி கூட இல்லை என்று தெரியும்போது, அந்த அன்பான பெண்மணிக்கு எவ்வளவு ஏமாற்றமாக இருக்கும் என்று எண்ணும் போது, மஞ்சரிக்குப் பெருமூச்சு வந்தது.


சிவநேசனின் வீட்டுக்குச் செல்ல வேண்டிய நாளுக்கு முன் தினம், மஞ்சரிக்குத் திலகம் முந்திரிக் கொத்து செய்யக் கற்றுக் கொடுத்தாள்.

சின்னச் சின்னப் பூரண உருண்டைகளை மாவில் தோய்த்து, எண்ணெயில் போட்டு, ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு திராட்சைக் கொத்து வடிவில் வெந்து வந்தவற்றை எடுத்து வைக்கையில், செய்தவளுக்கே வாயில் நீர் ஊறிற்று.

அவற்றை டப்பாவில் அடைத்து எடுத்துப் போய்க் கொடுத்தபோது, "தானும் சேர்ந்து வராவிட்டாலும், தங்கச்சி எனக்குப் பிடித்ததைச் செய்து அனுப்ப மறக்கவில்லையே!" என்று மகிழ்ச்சியோடு ஒன்றைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டார், சிவநேசன்.

"அங்கிள், இதைச் செய்தது, அம்மா அல்ல. மஞ்சரி!" என்று யோகேந்திரன் அறிவிக்க, "மெய்யாகவா?" என்று வியப்புடன் கேட்டுச் சிவநேசனின் கண்கள் கனிந்தன.

பார்த்துக் கொண்டே இருந்த அனிதாவின் விழிகள் இடுங்கின.




சில காலமாக மறந்திருந்த தோற்றம்.

ஆனால் சிவநேசனது இந்த ஒரு பார்வை, சிறு வயதில் பார்த்த அவரது தோற்றத்தை நினைவுபடுத்த, மஞ்சரியின் மனமும் லேசாயிற்று.



ஷண்முகத்துடைய பெண் என்று, சிவநேசனும் முதலில் பிரியமாகத்தானே இருந்தார்!

பாடம் சொல்லிக் கொடுக்க முயற்சிக்கும்போதுதான், கலக்கமாக இருக்கும். ஆனால், அந்த வயதில் பிடிக்காத கலக்கமாக இருந்ததை இப்போது வேறு மாதிரியாக எண்ண முடிந்தது.

எத்தனையோ பெற்றோர்கள், பிள்ளைகளைப் படிபடி என்று உயிரை எடுக்கிறார்களே! வெறுப்பினாலா? இல்லையே! தன் மக்களை, 'அவையத்து முந்தியிருக்கச்' செய்யும் ஆசையால்தானே? அதே போலவே, இந்தச் சிவநேசன் அங்கிளும் முயன்றிருக்கலாம்.

இந்த எண்ணம் தோன்றியதும், அவரைப் பார்த்து முறுவலித்து, "நேற்றுதான் அத்தை கற்றுத் தந்தார்கள், அங்கிள். அதனால், பாதி அத்தையே செய்தது போலத்தான். ஆனால், அடுத்த முறை, நானே செய்து கொண்டு வருவேன்!" என்றாள் மஞ்சரி.

"அப்படிச் சொல்லம்மா!" என்றபோது, சிவநேசனின் முகமே வழக்கத்துக்கு மாறுபட்டுத் தோன்றியது. "தங்கச்சி மனம்போல நடந்துகொள். உனக்கு எப்போதும் நல்லதே நடக்கும்!" என்று அவர் தொடர்ந்து சொன்னபோது, நிஜம்தான் என்று மஞ்சரிக்கும் தோன்றியது.

"ஆனால்..." என்று குறுக்கே புகுந்தாள். அனிதா, "உங்களைப் போலவே பழைய தலைமுறை ஆட்களை, வெறும் முந்திரிக் கொத்தை வைத்தே கவிழ்த்து விடலாம், மாமா. ஆனால், இன்றையத் தலைமுறையின் இதயத்தை, நாக்கின் வழியே அடைய முடியாது. நாக்கைத் திருப்திப் படுத்த எத்தனையோ நல்ல

ஹோட்டல்கள் இருப்பதால், எங்களுக்கு வேறு எத்தனையோ வேண்டியிருக்கிறது. படிப்பு, பழகும் முறை, கண்ணைக் கவரும் உடை, ரசிக்கும்படியான அங்க அசைவுகள், சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் பேச்சு என்று, எத்தனையோ வேண்டும். ஒரு பொம்மை முகத்தையும், சுவையான சமையலையும் வைத்துக் கொண்டு, யார் மனதையும் பிடிக்க முடியாது!'' என்றாள் அவள்.

அதாவது யோகேந்திரன் விஷயத்தில், என் படிப்பு, மற்றத் தகுதிகளின் முன் உன் முகமும், சமையல் முயற்சியும் வீண் என்று, மஞ்சரிக்கு எச்சரிக்கை செய்கிறாளா?

ஆனால், அனிதா அப்படி நேரடியாகக் குறிப்பிடாத போது, மஞ்சரி இதற்கு என்னவென்று பதில் சொல்ல முடியும்?

யோகனாவது, 'என் பெண்டாட்டியின் அழகும் சமையலும் எனக்குப் போதும்!' என்று விளையாட்டுப் போலவேனும் சொல்லியிருக்கலாம். இத்தனைக்கும், அனிதாவின் 'சிக்' கவர்ச்சியின் முன் மங்கித் தெரிந்து விடக் கூடாது என்று, கவனத்துடன் அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தாள். வீட்டில், திலகத்தோடு சேர்ந்து, யோகனுமே பாராட்டத்தான் செய்தான்.

ஆனால், அனிதாவின் பேச்சை ஒப்புகிற மாதிரி, இப்போது அவன் சும்மா அல்லவா இருக்கிறான்!

யோசித்துவிட்டு, ''எத்தனை திறமைகள் இருந்தாலும், அததில், இன்னும் அதிகத் திறமையை வளர்த்துக் கொண்டவர்கள் வரும்போது, முன்னதில் உள்ள



மயக்கம் குறைந்து போய் விடும்தானே? எனவே, மற்ற எதையும்விட, அதிக முக்கியமாக இருக்க வேண்டியது, அன்புதான் என்று எனக்குத் தோன்றுகிறது!'' என்றாள் மஞ்சரி. ''அது இல்லாதபோது, அழகோ, மற்றத் திறமைகளோ இருந்து, ஒரு பயனும் இல்லை.''

யோகேந்திரன் இதற்கும் ஏதும் சொன்னானில்லை.

மனைவியை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''என்ன அங்கிள், 'செவிக்குணவு இல்லாதபோது வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும்' என்கிற மாதிரி, இரண்டு பெண்களையும் பேசவிட்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே! எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளுகிறது. எங்கே சாப்பாடு?'' என்று சிவநேசனிடம் கேட்டான்.

பேச்சு விவாதம் ஆகாமல் தடுக்கிற முயற்சியா?

''ஐயோ! ஆமாம்! என்னம்மா அனி, அவன் பசி என்கிறவரை விட்டு விட்டாயே! வீட்டுப் பெண்ணாகப் பொறுப்பாய்ச் சாப்பாடு வைக்கிற வேலையைத் தொடங்கு, பார்ப்போம்!''

சிவநேசன் சாதாரணமாகத்தான் சொன்னார். ஆனால், அது அனிதாவுக்குப் பிடிக்கவில்லை போலும்.

''ஏன், வீட்டுக்காரர்களுக்கு மட்டும்தான் பொறுப்பா? இந்த நாடே சுத்த மோசம், மாமா. அமெரிக்காவில் எல்லாம் இப்படி இல்லை. விருந்துக்கு வருகிறவர்களும், ஏதாவது பதார்த்தம் கொண்டு வருவார்கள். எல்லோருமாகச் சேர்ந்து பரிமாறிச் சாப்பிட்டுச் சுத்தம் செய்கிறதுவரை, எல்லா வேலைகளிலும், எல்லோரும் பங்கெடுத்துக் கொள்வார்கள். இங்கே போலப் பொறுப்பை யாராவது ஒருவர் தலையில் கட்டுவதும்

கிடையாது. பொறுப்பை ஏற்றவர், தன் சுகத்தைப் பாராமல், அந்தப் பொறுப்புதான் பிரதானம் என்று கஷ்டப்படுவதும் கிடையாது!'' என்றாள் எரிச்சலோடு.

தொடர்ந்து சிறு அமைதி. அனிதா வேறு எதையோ குத்திக் காட்டுவதையும், அதை மற்ற இருவரும் உணர்ந்திருப்பதையும், மஞ்சரிக்குத் தெரிவித்தது.

வேறு எதையோ, என்ன? அவள் விஷயம்தான். 'ஒரு பெண்ணின் பொறுப்போடு' என்று வரவேற்பன்று, அவளிடமே அனிதா சொன்னதுதானே?

வேதனையாக இருந்தது என்னவென்றால், யோகேந்திரன் அதை மறுத்துப் பேசாததுதான். ஆனால், உண்மை அதுவாக இருக்கையில், அதற்காகக் காதலையே தியாகம் செய்த அவனும்தான் எப்படி மறுப்பான்?

வலியை வெளிக்காட்டாமல் இருக்க, மஞ்சரி முயன்று கொண்டு இருந்தபோது, ''அழகு வழக்கம் போலக் கிளம்பி விட்டான் என்று நீங்கள் சொல்லவில்லையே, அங்கிள்! இப்போது என்ன செய்ய வேண்டும், அனிதா? சொல்லு. செய்கிறேன்,'' என்று எழுந்தான் யோகேந்திரன்.

தனியாளான சிவநேசன், தனி வீட்டை வைத்துப் பராமரிக்க மனமற்று, வசதியான ஃப்ளாட் ஒன்றில்தான் வசித்து வந்தார். யோகன் வீட்டுச் சமையல்காரி அன்னம்மாவுடைய மகனான அழகுதான், சிவநேசன் வீட்டுச் சமையலாள். மனைவி, மக்கள் இருந்ததால், இரவுச் சமையலை முடித்து, செல்லோவில் வைத்து விட்டு, மற்ற வேலையாட்களைப் போலவே, இரவு அவனது வீட்டுக்குப் போய் விடுவான். இன்றும் அதுவே நடந்திருக்கிறது.



அல்லது, இப்படி யோகனை இழுக்கலாம் என்று, அனிதாதான், அவனைப் போகச் சொன்னாளோ, என்னவோ? ஏனெனில், சிவநேசனுக்குத் தேவை என்றால், அவன் அங்கேயே தங்குவதும் உண்டு என்பது, மஞ்சரியும் அறிந்த விஷயமே.

யோகேந்திரன் தனியே, அனிதாவோடு செல்வது பிடிக்காமல், ''நானும் உதவிக்கு வரட்டுமா?'' என்று மஞ்சரியும் எழுந்தாள்.

''வேண்டாம்! வேண்டாம்! சமையல் எல்லாம்தான் அழகு செய்து வைத்து விட்டானே! எடுத்து வைப்பதற்கு, நாங்கள் இருவரே போதும். நீ, உன் அங்கிளுக்குப் பேச்சுத் துணையாக, இங்கேயே இரு. அவருக்கு உன்னிடம் என்னென்னவோ சொல்ல வேண்டுமாம்!'' என்றுவிட்டு, யோகனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள், அனிதா.

பார்வையை அவர்களிடமிருந்து, வலுக் கட்டாய மாகத் திருப்பி, ''என்ன அங்கிள், மின்சார விளக்கை யார் கண்டு பிடித்தது என்று தெரிய வேண்டுமா? அல்லது, பித்தகோரஸ் தியரத்தைப் பயன்படுத்தி, ரைடர் செய்ய வேண்டுமா?'' முயன்று வரவழைத்த இலகு வான குரலில் மஞ்சரி கேட்டாள்.

முகம் மாறி, உரக்கச் சிரித்தார் சிவநேசன். ''எல்லாம் நினைவிருக்கிறதாம்மா? சின்ன வயதில், உன்னைக் கொஞ்சம் அதிகமாக வாட்டி விட்டேனோ, மஞ்சு? எனக்கு உன் மீது பிரியம்தான்... ஷண்முகம் இருந்திருந் தால், இதை யெல்லாம், கட்டாயமாகக் கேட்டுப் பார்ப்பான் என்று தோன்றும். அதனால்தான், அந்த

வயதில், உன்னைத் தொல்லை செய்யும்படி ஆயிற்று. பிறகானால்... யோகு எனக்கு உயிர். அவனது வாழ்வு முக்கியம். அது கெடுகிறதோ என்று... எப்படியோம்மா... இன்றைக்கு நீ அவனுடைய மனைவி. அவன் அம்மா, அவனோடு இணைந்து, நீயும் சந்தோஷமாக இருக்க வேண்டும். அதுதான் என் ஆசை!'' என்றார் அவர்.

''என் ஆசையும் அதுதான் அங்கிள்!'' என்றாள் மஞ்சரி மெதுவான குரலில்.

''நம் இருவர் ஆசைகளையும் நிறைவேற்றுவது தவிரக் கடவுளுக்கு வேறு என்ன வேலை இருக்கப் போகிறது?'' என்று சிரித்தார் அவர்.

தாங்கள் மூன்று நண்பர்களுமாகச் சிறு வயதில் பண்ணிய குறும்புகளைப் பற்றி, நகைச்சுவை ததும்பத் தான், சிவநேசன் சொன்னார்.

ஆனால், மஞ்சரியின் மனம்தான் அதில் நிலைத்து நிற்க மறுத்து, தறிகெட்ட குதிரை போல, உள்ளே சென்றிருந்த இருவரிடமே ஓடிச் சென்று, அங்கேயே நின்று சண்டித்தனம் செய்தது.

''.... விஷயம் தெரிந்ததும், ஒரே சிரிப்பு!'' என்று சொல்லிப் பெரியவர் சிரிக்கவும், எதற்கென்று புரியாவிட்டாலும், அவர் மனம் நோகக் கூடாதே என்று, அவசரமாக, அவரோடு கூடச் சேர்ந்து சிரிப்பது போல நடித்தாள் அவள்.

அவர் அத்த கதையைத் தொடங்கு முன்பாக, ''அப்பா, பசி வயிற்றைச் சுருட்டுகிறது, அங்கிள்! எல்லாம் ஆறிப் போய்ச் சூடு பண்ணுகிறார்கள் என்று நினைக்கிறேன்! அதுதான் நேரமாகிறது போல.



அன்னம்மாவை விட, இன்றையப் புதுமை கலந்து, அழகு நன்றாகச் சமைப்பான் என்று அத்தை சொன்னார்களா, நிறையச் சாப்பிட வேண்டும் என்று, மாலையில் டிபனைக் கூடச் சாப்பிடாமல் வந்தேன்!'' என்று, கையால் வயிற்றை அழுத்திக் கொண்டு சொன்னாள்.

உருகிப்போய், ''பசி என்று முதலிலேயே சொல்லக் கூடாதா, மஞ்சரி?'' என்று அங்கலாய்த்தவாறு, உடனே எழுந்து விட்டார் பெரியவர்.

''வாம்மா. பசிக்குத்தானே உணவு! இருக்கிற சூட்டில் சாப்பிடுவோம். கொதிக்கக் கொதிக்கச் சாப்பிட, நாம் என்ன நெருப்புக் கோழிகளா?'' என்றபடி, அவளைச் சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்றார்.

யோகேந்திரனும், அனிதாவும் என்ன பேசிக் கொண்டிருந்தார்களோ, ஆனால் அவர்கள் இருவரும் அருகருகே நிற்பதைக் காண்கையில், மஞ்சரியுள் காந்தியது.

அன்றைய உணவு மஞ்சரிக்குச் சித்திரவதைதான்.

உங்களுக்கு இது பிடிக்குமே., இந்த மாதிரிச் செய்தால் பிடிக்குமே என்று, என்னவோ, யோகனுக்கு மட்டும்தான் விருந்து போல, அனிதா உபசாரம் செய்தாள். ஆனால், சிவநேசனும் பேசிக் கொண்டே இருக்கவும், இந்தத் தனிப்பட்ட கவனிப்பு, வெளிப்படையாகத் தெரியாது போயிற்று.

ஆனால், அதே கவனமாக இருந்த மஞ்சரிக்குப் புரியாது போகுமா? போதும் என்று எழுந்து போகவும்

முடியாமல், பசி என்று சொல்லி விட்டதால், மஞ்சரி நன்றாகச் சாப்பிடவும் வேண்டியிருந்தது.

ஒரு வழியாக உணவு முடிந்து கிளம்பலாம் என்று பார்த்தால், ''யோகு! அந்தப் பண விவகாரத்தைப் பார்த்து, முடிவு செய்து விடலாம், வாப்பா!'' என்று யோகேந்திரனைத் தனியே அழைத்துச் சென்றுவிட்டார், சிவநேசன்.

சற்றுத் தயங்கிவிட்டு, ''அதிக நேரம் ஆகாது. சீக்கிரமாக வந்து விடுகிறேன்!'' என்று சொல்லிவிட்டுச் சிவநேசனின் பின்னே சென்றான், யோகேந்திரன்.

சில நிமிஷ நேர அமைதியின் பின், ''இப்படி எத்தனை முறை பின்னோடு வந்து, யோகனைக் காவல் காக்க முடியும் என்று நினைக்கிறாய்?'' என்று கேட்டாள் அனிதா.

அவளது பேச்சு புரியாத மாதிரி நடிக்கலாமா என்று ஒரு கணம் யோசித்தாள் மஞ்சரி.

பிறகு, ''எனக்கு இங்கே சாப்பிட வந்ததாக எண்ணம். குற்றமுள்ள மனது வேறு மாதிரி நினைத்தால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்றாள் முடிந்தவரை அமைதியாக.

''ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகப் பேசிவிட்டதாக நினைப்போ? நீ வேவு பார்க்கத்தான் வந்தாய் என்று எனக்குத் தெரியும். யோகனுக்கும் தெரியும். நான் வந்ததில் இருந்து எத்தனை முறை, நாங்கள் இருவரும் சந்தித்துப் பேசியிருக்கிறோம் என்பது தெரிந்தால், அதிர்ச்சியில், உன் இதயமே நின்று போகும்!'' என்றாள் அனிதா. ''அப்படி நீ செத்துக் கித்துப் போய் விடக்



கூடாதே, அப்புறம் உன்னை நினைத்து அத்தை வருந்து வார்களே என்றுதான், நான் அங்கே வருவது இல்லை. ஆனால், யோகனுக்கு என்னைப் பாராமல் இருக்க முடியாது. அதனால், அவர் இங்கே வருகிறார்.''

பொய் என்று மறுக்க முடியாமல், யோகன் இங்கே வருவது மஞ்சரியும் அறிந்த விஷயமே.

ஆனால், அது இந்த அனிதா வந்த பிறகுதான் என்று இல்லை. எப்போதுமே, தொழில் தொடர்பாகப் பங்கு தாரர்கள் இருவரும் தனித்திருந்து நடப்பை ஆராய் வதும், அடுத்துச் செய்ய வேண்டியதைத் திட்ட மிடுவதும், இந்த வீட்டில்தான்.

ஆனால், இப்போதெல்லாம் இங்கே வந்ததாக, அவன் சொல்லும்போது, அடுத்து அனிதாவின் பெயர் வருமோ !என்ற ஒரு வெறுப்பினாலேயே, இல்லாத வேலையைக் கற்பனை பண்ணிக் கொண்டு, மஞ்சரி அகன்று விடுவாள்.

யோகனும், அனிதாவைப் பற்றிப் பேச விரும்ப வில்லை என்பது, அவளது கருத்து. ஆனால், என் னவோ, அவளைப் பார்க்கவே யோகன் அங்கே வந்தது போல அனிதா கூறியது அவளை மிகவும் பாதித்தது.

அனிதா தொடர்ந்து பேசியது, இன்னமும் அதிக வேதனையைத் தந்தது.

''இதோ பார், முன்புதான் நீ சின்னப் பெண். இந்தப் பெரிய உலகத்தில், தனியே விட்டால் எந்த இரண்டு கால் புலி, சிங்கம் உன்னை அடித்துத் தின்று விடுமோ என்று கவலைப்பட்டார். பிழைக்கத் தெரியாத நிலை. இப்போதென்ன வந்தது? அவர் தலையிலேயே ஏறி

உட்கார்ந்து கொண்டு, இன்னும் எத்தனை ஆண்டுகள், யோகனையும், என்னையும் ஒருவருக்காக ஒருவர் ஏங்கியபடி, நிம்மதியின்றித் தவிக்க வைக்கப் போகிறாய்? இப்போதேனும் வழி விலகி, எங்களை மகிழ்ச்சியோடு வாழ விட்டுத் தொலையேன்!'' என்று வெறுப்பும் சலிப்புமாகப் பேசினாள் வயதில் பெரியவள்.

இந்த நேரடியான தாக்குதலில், மஞ்சரி முதலில் கலங்கிப் போனாள். ஆனால், உடனேயே யோகன் சொன்னது நினைவு வர, ''யோகன் ஒன்றும் உங்களுக்காக ஏங்கிக் கொண்டிருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால்தான், எப்போதோ உங்களைத் தேடி வந்திருப்பாரே!'' என்றாள், முடிந்தவரை திடமாகவே.

''எப்படி வருவார்?'' என்றாள் மற்றவள் ஆத்திரத்துடன். ''நீதான் சிந்துபாத் கதையில் வருகிற கிழவன் மாதிரி, யோகனின் கழுத்திலேயே ஏறி அமர்ந்திருக்கிறாயே! உன் பொறுப்பை யார் தலையிலாவது கட்டும் வரை, அவர் எப்படி என்னைத் தேடி வருவார்? ஒரு மாதம்! ஒரே ஒரு மாதம் முன்னதாகக் கிளம்பி வந்திருந்தேன் என்றால், இந்தக் கண்ணராவிக் கல்யாணத்தையாவது தவிர்த்திருக்கலாம்!'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் அவள்.

உடனேயே, எதையோ கண்டு கொண்டவள் போல, ''ஆனால், இதிலும் ஒரு நன்மை இருக்கிறது. முன்புதான் நீ பாப்பா! இந்தப் பரந்த உலகத்தில், ஒன்றுமே இல்லாமல் உன்னை எப்படி விடுவது என்று தவித்தார். ஆனால், இப்போது அப்படியில்லையே. யோகனுடைய மனைவி என்கிற நிலையில், மண விலக்குக் கேட்டால்,



பல லட்சங்கள் கிடைக்குமே! அந்தப் பணத்தை வைத்து, நீ நன்றாகவே வாழலாம்!'' என்று உற்சாகத்துடன் கூறினாள்.

யோகேந்திரன், மஞ்சரி இருவருமே, இந்த மாதிரியான ஒரு பிரிவு பற்றிப் பேசியிருக்கிறார்கள். வேறு நாட்டம் ஏற்பட்டால், உடனே இந்தப் பந்தத்தில் இருந்து விடுவித்து விடுவதாக ஒப்பியும் இருக்கிறார்கள். அது சும்மா, வெறும் பேச்சுக்குச் சொன்னதும் அல்ல.

ஆனால் அதையே, இப்போது அனிதா கூறுகையில், மூளை அதிர்ந்து அசமஞ்சமாகக் குழம்ப, ''மணவிலக்கா? அது எப்படி முடியும்?'' என்று மொழியறியாதவள் போன்று, திகைப்புடன் கேட்டாள் மஞ்சரி.




மண விலக்கு என்ற வார்த்தையில் மஞ்சரி திகைத்தாள் என்றால், அவளது மறுப்பில், அனிதா எரிமலையாகக் கனன்றாள்.

''பின்னே? பொறுப்பு பொறுப்பு என்று, அதை வைத்தே யோகேந்திரனின் வாழ்வை நாசமாக்கிவிடப் போகிறாயா? சொந்தம் என்று ஒரு காசு இல்லாத அனாதை நீ. உன்னை, அந்தக் குடும்பத்தினர், வீட்டுப் பெண்ணாக ஏற்று வளர்த்ததற்கு, இதுவா நீ செய்யும் கைம்மாறு?'' என்று பொரிந்து கொட்டி, மஞ்சரியை மேலும் திணற வைத்தாள் அனிதா.

இந்த ராட்சசியிடம் அவளை விட்டு விட்டு, இந்த யோகேந்திரன் எங்கே போனான்?

பெரிய பொறுப்புள்ள கணவனாம். இதில், பொறுப்பு பொறுப்பு என்று, வாழ்க்கையையே கெடுத்துக் கொண்டதாக, இவள் சொல்லுகிறாள்!

அனாதை, அது இதென்று என்னமாக நோகப் பேசுகிறாள்! அத்தை இருக்கும்போது, அவள் எப்படி அனாதை ஆவாள்?

யோகன் வேறு இருக்கிறான்... ஆனால், யோகனுக் காகத்தானே, இவள் இப்படிப் பேசுகிறாள்.

இப்படி ஒரு ராட்சசியைப் போய், யோகன் காதலித் தானே! ஆனால், குணம் பார்த்தா காதல் வருகிறது? அவ்வளவு மோசமான செல்வேசனை ஒரு காலத்தில், அவள் நேசிக்கவில்லையா...?

சட்டெனத் திகைத்தாள் மஞ்சரி.

செல்வேசனை ஒரு காலத்தில் அவள் நேசித்தாள் என்று இறந்த காலத்தில் நினைப்பதானால், இப்போது அந்த நேசம் இல்லை என்றா பொருள்?

காதல் அப்படி மடியக் கூடுமோ? எப்படி முடியும்?

அவள் தீவிரமாக யோசிப்பதைப் பார்த்துவிட்டு, ''இப்போது புரிகிறதா? கைம்மாறு கருதியாவது, யோகனை விடுதலை செய். ஏனென்றால், நீயாக அவரை விடுதலை செய்தால்தான் உண்டு. மற்றப்படி, அந்தப் பொறுப்புப் பைத்தியம், இப்படியே கிடந்து கஷ்டப்படுமே தவிர, வாயைத் திறந்து பேசாது!'' என்றாள், அனிதா - உருக்கமான குரலில்.



அந்தக் குரல் உண்மையற்றுத் தோன்ற, ''யோகனுக்கு விடுதலை வேண்டும் என்றால், அதை அவரே என் னிடம் சொல்லுவார்!'' என்றாள் மஞ்சரி.

''மாட்டவே மாட்டார். இவ்வளவு நேரம் நான் சொன்னது உன் மர மண்டையில் ஏறவே இல்லையா? யோகன் அப்படிக் கேட்கிறவர் அல்ல என்று...''

''கேட்காவிட்டால், என்னோடான வாழ்வே அவருக்குத் திருப்தி என்றுதான் அர்த்தம். எனவே இதைப் பற்றி இனிப் பேச வேண்டாம்.''

மனதைக் காயப்படுத்தும் இந்த உரையாடலை முடி வுக்குக் கொண்டு வரத்தான் மஞ்சரி இப்படிப் பேசியது.

ஆனால், ஆத்திரமும் இகழ்ச்சியுமாக, ''உன்னோடான வாழ்வா? ஆளுக்கு ஒரு மூலையில் இருந்து கொண்டு நீங்கள் நடத்துகிற குடும்ப வாழ்வு பற்றி எனக்குத் தெரியாதென்றா நினைத்தாய்? சும்மா துள்ளாதே!'' என்று அனிதா கூறவும், அவள்தான் அப்படியே ஒடுங்கிப் போனாள்.

யோகேந்திரன் சொல்லாமல், அவர்களது சொந்த வாழ்வின் விசித்திரம் பற்றி, இவளுக்கு எப்படித் தெரியும்?

அதைக் கூடச் சொல்வது என்றால், யோகனின் 'சுட்ட மண் ஒட்டாது' கதையை எப்படி நம்புவது? அன்றைய நிலையில், மஞ்சரியின் துயரைக் குறைப்பதற்காக, அவன் பொய்தான் சொல்லியிருக்க வேண்டும்.

அதாவது, அனிதாவை அவன் நேசித்துக் கொண்டே தான் இருந்திருக்கிறான்.

ஆனால், இவளோ ராட்சசியாக இருக்கிறாளே! அத்தையை ஆட்டிப் படைத்து விடுவாளே!

ஆனால், யோகன் இவளை விரும்பினால்...

கடவுளே! இந்த நிலையில், அவள் என்ன செய்ய வேண்டும்?

அவளது மூளை அடியோடு மரத்துப் போனதுபோல, அனிதாவுக்குப் பதில் சொல்வதற்கான ஒரு வார்த்தையைக் கூட, அப்போது மஞ்சரியால் யோசிக்க முடியவில்லை.

ஏன், சரியாக மூச்சுக்கூட விட முடியாமல், முட்டிக் கொண்டு வந்தது.

சொல்வது அறியாமல் அவள் பேந்த விழித்தபோது, நல்ல வேளையாக, சிவநேசனின் அறைக் கதவுக் குமிழ் திருகி, மெல்லத் திறக்கலாயிற்று.

யோகனின் குரல்தான் முதலில் கேட்டது. "ஒரு பத்து நாட்கள் பொறுத்து, அதன் பிறகு பார்ப்போமே!"

"ஆனால், கையெழுத்து வேண்டுமே என்றுதான்.." என்று ஏதோ சொல்லியவாறே, கதவை நன்றாகத் திறந்து கொண்டு, சிவநேசன் வெளியே வந்தார்.

பின்னோடு வந்த யோகன் அவரை நேராகப் பார்க்கவும், அவரது பேச்சு நின்று போயிற்று.

அப்படியென்ன பெரிய தொழில் ரகசியம், வெளியே தெரிந்து விடும் என்று, அவரை வாய் மூட வைத்தானோ, அது மஞ்சரிக்குத் தெரியாது. ஆனால், கதவுக் குமிழ் திறக்கத் தொடங்கியதில் இருந்து, இருவரும் பேசியபடியே மெல்ல வெளிவரும் வரையிலான இடைவெளியில், மஞ்சரிக்கு வெகுவாகத் தன்னைச் சமாளித்துக் கொள்ள முடிந்தது.



அப்படியும், அந்த வீட்டை விட்டு வெளியே வந்து காரில் ஏறிய பிறகுதான், அவளால் நல்லபடியாக மூச்சு விட முடிந்தது எனலாம்.

ஆனால், இருவருக்குமே இயல்பான பேச்சு வரவில்லை.

யோகன் அமைதியாகக் காரை ஓட்ட, மஞ்சரி இருக்கையில் கண் மூடிச் சாய்ந்திருந்தாள்.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, "இன்னும் அதிக நேரம் ஆகவில்லை. ஏதோ பெரிய மில் விற்பனைக் கண்காட்சி வைத்திருக்கிறார்கள், பார்க்க வேண்டும் என்றாயே! பார்த்துவிட்டுப் போகலாமா? அல்லது, களைப்பாக இருந்தால் வீட்டுக்கே போய்விடலாமா?" என்று, யோகேந்திரன் வினவினான்.

வீட்டுக்கு நேராகப் போனால், விருந்து, மற்றது பற்றிப் பேச நேரும். மஞ்சரிக்கோ, அதை அடியோடு மறக்க வேண்டும் போல இருந்தது.

குறைந்த பட்சமாக, அப்போதைக்கேனும்!

துணி மில்லும் இந்தியாவில் முதல் இடத்துக்குப் போட்டி போடுவது.

மெல்லிய இசையும், தரமான துணிமணிகளும், அங்கங்கே வைக்கப் பட்டிருந்த கலைப் பொருட்களும் மனதைக் கவர, மஞ்சரியின் மன இறுக்கம் தளரத் தொடங்கியது.

ஆனால், ஊழ்வினை என்பது, பிறவி பிறவியாக உறுத்து வந்து ஊட்டுமாமே!

அன்றைக்கு மஞ்சரி நிம்மதியாக இருக்கக் கூடாது என்பது விதி போலும்.

நாலைந்து 'ஸ்டால்'களைப் பார்த்து, மஞ்சரி இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்ட சமயம், யோகனுடைய தொழில் துறை நண்பர் ஒருவர், அவனைப் பார்த்துவிட்டு, அருகில் வந்தார்.

''இப்படியே இடதுபுறமாகவே போய்க் கொண்டிரு, மஞ்சரி. நான் இதோ வந்து சேர்ந்து கொள்கிறேன்!'' என்று அவளை அனுப்பி வைத்தான் அவன்.

யோகன் விரைவிலேயே வந்து விடுவான் என்பதால், இது ஒன்றும் மஞ்சரியைப் பாதித்து விடவில்லை. எனவே, ஆராய்ச்சியும் ரசனையுமான நோக்குடன் பார்த்தபடி மெதுவே நடந்து சென்றாள்.

ஆனால், அடுத்த முதல் திருப்பத்திலேயே, அவள் செல்வேசன், ரதியைச் சந்திக்க நேர்ந்ததுதான் தலைவிதி என வேண்டும்.

ஆண்களுக்குரிய உடைகளில் அலசித் தேர்ந்தெடுத்தபடி, செல்வேசன் அங்கே நின்று கொண்டிருந்தான். அவன் முன் செட் செட்டாக அடுக்கப்பட்டிருந்த துணிகளைப் பார்க்கையில், இவற்றுக்குப் பணம் தரப் போவது யார் என்பது, மஞ்சரிக்குப் புரிந்தது.

அசூயாக உணரும்போதே, ''இங்கே, இந்தப் பக்கம் வா, மஞ்சரி!'' என்று அவளை எதிர்ப்புறம் அழைத்தாள் ரதி.

முந்தைய சந்திப்பை அடியோடு மறந்தவள் போன்று, புன்னகை செய்து, ''எல்லாமே நன்றாக இருக்கின்றன. ஆனால், இதில் எது எனக்கு நன்றாக இருக்கும்? தேர்ந்தெடுத்துக் கொடேன், ப்ளீஸ்!'' என்று, எடுத்துக் காட்டப்பட்டுக் குவியலாகக் கிடந்த சல்வார் செட்டுகளைக் காட்டினாள், அவள்.



வியர்த்து, விறுவிறுத்து நின்ற விற்பனைப் பெண்ணைப் பார்க்கையில், மஞ்சரிக்குப் பரிதாபமாக இருந்தது.

வாழ்க்கைத் தேர்வில் கோட்டை விட்டுவிட்டு, உடைத் தேர்வில் இவ்வளவு கவனத்தைக் காட்டும் ரதியைப் பார்க்கையிலும், அப்படித்தான் இருந்தது.

ரதிக்குப் பொருத்தமாகச் சிலதைத் தெரிவு செய்து கொடுத்துவிட்டு, ''நான் சொன்னதை யோசித்தாயா, ரதி?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள், மஞ்சரி!

''மஞ்சரி, ப்ளீ...ஸ்! தயவு பண்ணி, இந்தப் பேச்சு வேண்டாம். அதை அப்படியே முழுசாக மறந்து விடுவோம். எனக்கு உன்மேல் மதிப்பு அதிகம். பிரியமும் அப்படித்தான். நாம் சினேகிதர்களாகவே இருக்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அதைக் கெடுக்காதே. தயவு பண்ணி இந்தப் பேச்சை விட்டு விடு. என்ன... ம்?'' என்றாள் கெஞ்சுதலாக.

அதற்கு மேல் ஒருத்தி என்ன செய்ய முடியும்?

பேசாமல் தலையாட்டி வைத்தாள், அவள்.

ஆனால், ''உனக்கு ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லையா, மஞ்சு?'' என்று காதருகில் கேட்ட கணவனின் குரலில், மஞ்சரி துள்ளிக் குதிக்காத குறைதான்.

அவன் வந்ததையே கவனிக்காமல், ரதியுடன் பேசியிருக்கிறாள்.

''எங்கே?'' என்று சிரித்தாள் ரதி. ''இவ்வளவையும் எனக்குத் தேர்ந்தெடுத்துத் தருவதிலேயே நேரம் சரியாகிப் போயிற்று. உங்கள் மனைவியைப் போல எதை அணிந்தாலும், எனக்கு நன்றாக இருப்பது

இல்லை! அவளைப் போலப் பாந்தமாகவும், அதே சமயம் பளிச்சென்று தோன்றும் விதமாகவும் உடை தேர்ந்தெடுக்கவும், எனக்குத் தெரியாது. அதனால்தான் உதவிக்குக் கூப்பிட்டேன். பாருங்களேன், உங்கள் மஞ்சு சும்மாவே அழகு. அதிலும் இந்த உடையில்...''

''நிஜமான ரதி என் மனைவிதான் என்கிறாய்!'' என்று முறுவலித்தான் யோகேந்திரன்.

''நிச்சயமாய். நான் மட்டுமல்ல. சூழ இருப்பவர்கள் அத்தனை பேரின் கண்களுமே சொல்லுகிற உண்மை அது!'' என்றாள் ரதி மனதார.

லேசாக முகம் சிவக்க, ''ஷ், ரதி! வேறு பேசலாம்!'' என்று மஞ்சரி தணிந்த குரலில் அடக்க, ''இன்னொரு பெண்ணின் அழகை உளமாரப் பாராட்டும் உன் குணத்துக்கும் ஈடு இணை கிடையாது, ரதி. இதையும் எல்லோரும் உணர்ந்து கொண்டால் நன்றாக இருக்கும்!'' என்றான் யோகேந்திரன் சற்று உரக்கவே.

தன்னையறியாமல், மஞ்சரியின் பார்வை செல்வேசனை நோக்கியது. உணர வேண்டியவன் அவன்தானே?

ஆனால், அதுவரை அவளையே வெறித்த வண்ணம் நின்ற அவன், அவசரமாகத் தரையைப் பார்க்கவும், அவளுக்கு வேதனையாக இருந்தது. சொன்னால், இந்த ரதிக்கு ஏற்றுக் கொள்ளத் தெரியவில்லையே!

மேலே நில்லாமல், ''அப்பாவைக் கேட்டதாகச் சொல்லு!'' என்றதோடு, மனைவியை அழைத்துக் கொண்டு, யோகேந்திரன் அகன்று விட்டான்.

காரில் செல்லும்போதெல்லாம், மஞ்சரிக்கு ரதியின் நினைவுதான்.



செல்வேசனைப் பொறுத்தவரையில், ரதியிடம் அவனுக்குக் காதல் என்று, மஞ்சரி கொஞ்சமும் நம்பத் தயாரில்லை. பணத்தைத் தவிர, வேறு எதன் மீதும், அவனுக்குப் பற்று இருக்கக் கூடும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

அவனைப் பொறுத்தவரை, ரதி இப்போது ஒரு பொன் முட்டையிடும் வாத்து.

ஆனால், செல்வேசன் முட்டையோடு திருப்தி அடையாமல், வாத்தையே அறுக்கத் துணிந்துவிடக் கூடாதே என்றுதான், மஞ்சரி கவலைப்பட்டாள்.

அவளது பெருமூச்சைக் கவனித்துவிட்டு, ''என்ன அவ்வளவு சோகம்?'' என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டான் யோகன்.

''ரதியை நினைத்துப் பாவமாக இருந்தது.''

''ஓ!'' என்றான், அவன்.

''என்ன 'ஓ'?''

''நீ உன்னை நினைத்துப் பாவப்பட்டுக் கொண்டிருக்கிறாயோ என்று நினைத்தேன்!''

''ஏன்? என்னை நினைத்து எதற்காக...'' என்று கேட்கும் போதே, அவளுக்கு அனிதாவின் பேச்சு நினைவு வந்தது.

என்ன பைத்தியக்காரத்தனம்! அவளது வாழ்வே இப்போது ஆதாரமற்று அந்தரத்தில் ஆடிக் கொண்டிருக்கிறது! இந்த நிலையில், அடுத்தவரை நினைத்துப் பரிதாபம் வேறா என்று எண்ணம் ஓடும்போதே, வாக்கியத்தை முடிக்கவில்லை என்பதை உணர்ந்து,

''நான் ரதியைப் பற்றி மட்டும்தான் நினைத்தேன்!'' என்றாள் சற்றுக் கடுப்பாகவே.

நல்ல வேளையாகத் திலகம் உறங்கச் சென்று விட்டதால், விருந்து, மற்றது பற்றிப் பேச நேராமல், கணவன் மனைவி இருவரும் அவரவர் அறைக்குள் புகுந்து கொள்ள முடிந்தது.

ஆனால், மஞ்சரிக்குத் தூக்கமே வரவில்லை.

அனிதாவின் பேச்சை இனிச் சந்தேகிக்க வழியில்லை. தொண்ணூற்றொன்பது சதவீதம் அது உண்மையே. மிச்சமிருந்த ஒரு சதவீதம்கூட, அவளது ஆசை கொண்ட மனதின் எதிர்பார்ப்பு மட்டுமே.

ஏதாவது பெரும் அதிசயமாய், சுற்றி வளைத்து, வேறு ஏதாவது வழியில், அவர்களது வாழ்க்கை முறை பற்றி அனிதா அறிந்திருந்தாள் என்று ஆகிவிடாதா என்ற ஏக்கத்தின் விளைவான எதிர்பார்ப்பு.

ஆனால், அதற்கு வழியில்லை என்று, அவளது அறிவு எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், மனது அதைப் பிடிவாதமாக ஏற்க மறுக்க, இந்தப் போராட்டத்திலேயே இரவு கழிந்தது.

ஆனால், அவளது மனதின் உயிர் மூச்சை நிறுத்துவது போல, மறுநாள் யோகனின் அறையைச் சுத்தம் செய்தபோது, அவளுக்கு ஒன்று கிடைத்தது.

அது ஒரு போட்டோ வண்ணப்படம்.

யோகன் புன்முறுவலோடு நின்று கொண்டிருக்க, அவனது தோளை உரிமையோடு இறுகப் பற்றியபடி, அனிதா அவனை ஒட்டிக் கொண்டு நின்றிருந்தாள்.





## 17

சும்மா என்றால், இந்தப் புகைப்படம் மஞ்சரியை இவ்வளவு பாதித்திருக்குமோ என்னவோ? ஆனால், மனது கலங்கி, எதிர்மறையான ஓர் உறுதிக்காகத் தேடிய போது கிடைத்த இந்தப் படமும், அந்தப் படம் இருந்த இடமும், அவளது ஒரு சதவீத நம்பிக்கையையும் அடியோடு அழித்து விட்டன.

யோகனின் முக்கியமான பொருட்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தில், அவசரமாக உள்ளே திணித்து வைத்தது போல, அந்தப் படம் வைக்கப்பட்டிருந்தது.

அலமாரியில், அந்தத் தட்டு, அவன் மட்டுமே கையாள்கிற இடம். ''சில முக்கியமான பத்திரங்கள், பாஸ்போர்ட் எல்லாம் இருக்கிற இடம். இதை மட்டும் நானே பார்த்துக் கொள்ளுகிறேன்!'' என்று அவனே சொல்லி ஒதுக்கி வைத்திருந்த இடம்.

இன்று ஒரு குறுகுறுப்பில், மஞ்சரி அந்தத் தட்டைச் சுத்தம் செய்கிற சாக்கில் தேடினால், இடியாய் இது கிடைத்தது.

தினம் தினம் பார்த்துவிட்டு, அங்கேயே படத்தை வைத்திருப்பான் போலும்.

ஐந்து ஆண்டுகளுக்கு முந்தைய இளமையோடு, அனிதா மிகவும் அழகாக இருந்தாள்.

ஐந்து ஆண்டுகளாக, யோகன் இந்தப் படத்தைப் பத்திரப்படுத்தி வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்றால், அதற்கு மேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

எத்தனை குற்றம் குறைகள் இருந்தாலும், அதற்காக ஒருவர் மீது வைத்த அன்பு மாறி விடாது என்பதற்கு இந்த யோகனே சான்று. ஐந்து ஆண்டுகள் பிரிந்து இருந்த பிறகும், அனிதாவிடம் அவன் கொண்ட அன்பு மாறவில்லை.

அதற்காகத்தான், அன்று யோகன் பிரிவு பற்றியும் பேசினானோ என்று ஒரு தரம் எண்ணிவிட்டு, இராது என்று ஒதுக்கினாள் மஞ்சரி.

யோகன் சுயநலம் பிடித்தவன் அல்ல. அவன் சொன்னது, அவளுக்காகவே. சொல்லப் போனால், அதுதானே அனிதாவின் முக்கியக் குற்றச்சாட்டே. மஞ்சரிக்காகப் பொறுப்பேற்றதால், அவன் தன் வாழ்வை வீணாக்கிக் கொள்கிறான் என்பது.

ஆனால், அதற்காக, யோகனது உண்மையான நேசம் வீணாகலாமா? அப்படி வீணாக அவள் விடலாமா?

அத்தைக்கும் அனிதாவுக்கும் சரிவராதுதான். ஆனால், அத்தையை மஞ்சரி தன்னோடு வைத்துக் கொள்ளலாமே! அத்தையோடு அவளுக்கும் ஆறுதலாக இருக்கும்.

ஒரு சில பிரச்சினைகளுக்காக, யோகன் அவள் கழுத்தில் தாலி கட்டினான். ஆனால், அதற்காக, அவனைப் பிடித்து வைப்பது பெரும் தவறு.

இப்படியெல்லாம் யோசனைகள், மஞ்சரியின் மனதில் ஓடியபோதும், உள்ளூர ஒரு பெரிய வலியையும் மஞ்சரி உணர்ந்தாள்.



தாங்க முடியாத பெருவலி, இதய மத்தியில் இருந்து கிளம்பி, உடம்பின் ஒவ்வோர் அணுவுக்கும் பரவிச் சென்று, அவளைத் துடிக்க வைத்துக் கொண்டிருந்தது.

அது இன்னதென்று அவளுக்குப் புரியாமலும் இல்லை. ஐந்து வயதிலிருந்து, அவளுக்கு உற்ற துணைவனாக இருந்து வரும் யோகனை அவள் இழக்கப் போகிறாள்.

அப்படி ஒரேயடியாக, யாரோ என்று அவளை யோகன் விட்டுவிட மாட்டான்தான். ஆனால், அனிதாவுக்கு அது பிடிக்காதே. அவளால் யோகனுக்கும் அனிதாவுக்கும் இடையே பிரச்சினை வருமானால், மஞ்சரி ஒதுங்கிக் கொள்வதுதானே சரியாகும்?

இவ்வளவும் யோசித்து, தவியாய்த் தவித்த மனதை, யோகனுக்காக, யோகனுக்காக என்று மனதைத் திடப் படுத்திக் கொண்டு, அவனிடம் போய், "நம்முடைய இந்தத் திருமணத்திலிருந்து, உங்களுக்கு எப்போது விடுதலை வேண்டும் என்றாலும், அதைத் தருவதற்கு நான் மறுக்க மாட்டேன்ப்பா!" என்று அவள் வெகு சிரமத்தோடு, குரல் மாறாமல் சொன்னால், 'அப்பாடி' என்று ஆறுதலோடு நன்றி நவில்வதற்குப் பதிலாக, அவனது பதிலே வேறு மாதிரி இருந்தது.

கையில் இருந்த ஃபைலை, இன்னமும் கவனமாகப் பார்த்தபடி, "உனக்கு ஒன்று வேண்டுமானால், உனக்காக என்று சொல்லிக் கேள். என்னவோ, எனக்கு நன்மை செய்கிற மாதிரி, அதைக் காட்டிக்கொள்ள வேண்டாம்!" என்றான், முகத்தில் அடித்தது போல.

மெய்யாகவே, மஞ்சரி அறை வாங்கினாற் போலத் தான் உணர்ந்தாள். எவ்வளவு கஷ்டப்பட்டு, எவ்வளவு

வேதனையைப் படாதபாடு பட்டு உள்ளடக்கிக் கொண்டு, அவள் சொன்னால்... என்ன அநியாயம்!

''நான் ஒன்றும் எனக்காகக் கேட்கவில்லை!'' என்றாள், அவள் - ஆத்திரத்தோடு.

''அப்படியானால், இந்தப் பேச்சை விடு!'' என்றபடி, கையில் இருந்ததை மூடி வைத்துவிட்டு, அடுத்த ஃபைலை எடுத்தான் யோகேந்திரன்.

அவ்வளவு அலட்சியமா? ஆனால், அவன் அலட்சியப் படுத்துவது, அவனது சொந்த வாழ்வை அல்லவா?

மஞ்சரியின் ஆத்திரம் வருத்தமாக மாறியது.

''எப்படி முடியும்? வேண்டாத திருமண பந்தத்தில் மாட்டிக் கொண்டு இருக்கிறீர்களே, எனக்காக, அத்தைக்காக, அதைக் கஷ்டப்பட்டுச் சகித்துக் கொண்டு இருக்கிறீர்களே என்று எனக்குத் தவிப்பாக இருக் கிறதே!'' என்று வாதாடினாள் அவள்,

அப்போதும் அவன் அசைந்தானில்லை.

''ஒன்றை எப்போதும் கவனத்தில் வை, மஞ்சரி. எனக்கு விருப்பமற்ற எதையும், நான் யாருக்காகவும், எதற்காகவும், பொறுப்பு, கடமை என்று செய்வது இல்லை. எனவே, நான் கஷ்டப்பட்டு எதையும் சகித்துக் கொண்டு இருப்பதாக, அசட்டுக் கற்பனைகள் ஏதும் செய்ய வேண்டாம். இன்றைய நிலை எனக்குத் திருப்தியே. அதனால், 'எனக்காக' என்று சொல்லிக் கொண்டு, மேற்கொண்டு இதுபோல எந்தப் பேச்சும் வேண்டாம்!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டு, ஃபைலில் ஆழ்ந்துவிட்டதற்கு அறிகுறியாக,



பார்த்துக் கொண்டிருந்த காகிதத்தின் ஓரமாக ஏதோ குறிப்பெழுதலானான் அவன்.

இதற்கு மேல் இவனிடம் பேச வேண்டாமாம்.

அனிதாவின் பேச்சு, ஃபோட்டோ எல்லாமாகக் குழப்பமாக இருந்தாலும், மஞ்சரிக்கு உள்ளூர ஆறுதலாகவும் இருந்தது.

இப்போதைக்கு யோகனைப் பிரியத் தேவை இல்லை.

யோகன்தான் இன்றைய நிலையே திருப்தி என்று விட்டானே!

அதையும், கிட்டத்தட்ட அவள் அனிதாவிடம் சொன்ன மாதிரியே, அவன் சொன்னது வேறு, உள்ளூரக் குதூகலமாக இருந்தது. ஊசியாய்க் குத்திய மற்றதை நினைக்கக் கூடப் பிடிக்கவில்லை.

இந்த நிலையில், மஞ்சரி அறிந்தறியாத விசித்திர மாகத் திலகம் தனியாக ஊருக்குக் கிளம்பினாள்.

முன்னெல்லாம், ஆண்டுதோறும் ஒரு தரம் சொந்த ஊருக்கு எல்லோருமாகப் போய் வருவார்கள். கோவில் திருவிழா, குத்தகைப் பண வசூல் என்று பல்வேறு காரணங்கள் இருக்கும். பூஜை நேரத்துக்குக் கோயிலில் இருந்தாலும், மற்ற நேரத்தில், அக்கம் பக்கம் உள்ள குற்றாலம், பாபநாசம், கன்னியாகுமரி என்று கார்த்தி கேயன் கூட்டிப் போவார்.

கார்த்திகேயனின் மறைவுக்குப் பிறகு, யோகேந்திரன் மட்டும் எப்போதேனும் போய்க் குத்தகைப் பணம் வாங்கி வருவான்.

ஊரே மறந்து விட்டிருந்த இப்போது, திடுமெனத் திலகம் ஊருக்குக் கிளம்பியது. மஞ்சரிக்கு வியப்பூட்டியது.

''அத்தை தனியாக எப்படிப் போவார்கள்? நானும் கூடப் போகட்டுமா?'' என்று யோகனிடம் கேட்டாள்.

''வேண்டாம், வேண்டாம். நம் திருமணத்திற்கு ஊராரை முறைப்படி அழைக்கவில்லை என்று ஒரு கசமுசா இருப்பதாகக் கேள்வி. ஒன்றுவிட்ட பெரியப்பா தானே குத்தகை எடுப்பது! அவர் மூலம், எல்லோரையும் சமாதானப் படுத்துவதாக ஐடியா! நீயோ, நானோ போவது சரியாக இராது. அம்மாவுக்கு வேண்டியது செய்ய, அன்னம்மாவும் சீனியும் கூடப் போகட்டும். இங்கே, நாலைந்து நாட்கள், நாமே வீட்டைப் பார்த்துக் கொள்வோம்,'' என்றான் யோகேந்திரன்.

அந்த 'நாமே பார்த்துக் கொள்வது' நன்றாகத்தான் இருந்தது.

இரண்டு நாட்கள். அவள் கூடவே இருந்து, காய் வெட்டிக் கொடுத்து, காபி போட்டு, மிஷினில் வைத்த துணியைக் காயப் போட உதவி செய்து.. யோகேந்திரன் கூடவே இருந்தது, மஞ்சரிக்குச் சந்தோஷமாக இருந்தது.

இடையிடையே, அந்த ஃபோட்டோ, அனிதா பற்றிப் பேச வேண்டும் என்று அவளுக்குத் தோன்றும். ஆனால், யோகன் 'ஆமாம்' என்று விட்டால் என்ன செய்வது என்ற பயத்தோடு, அவள் பெயரைச் சொல்லி, இந்த மகிழ்ச்சியைக் கெடுக்க மனமில்லாததுமாகச் சும்மாவே இருந்து விட்டாள்.

இந்த மகிழ்ச்சி நீடித்தது இரண்டு நாட்களே.

மூன்றாம் நாளே, தொழில் தொடர்பாக வெளியூர் செல்ல வேண்டும் என்று யோகேந்திரன் கூறவும், மஞ்சரிக்கு முகம் வாடி விட்டது.



''என்ன யோகன், இது? இரண்டு நாட்கள் எவ்வளவு ஜாலியாக இருந்தது! அதற்குள், இப்படிக் குண்டு போடுகிறீர்களே!'' என்று அவனிடமே குறைப்பட்டாள்.

''என்னம்மா செய்வது? வயிற்றுப்பாட்டையும் பார்க்க வேண்டும் அல்லவா? இயன்றவரை, சீக்கிரமாக வரப் பார்க்கிறேன். வேலை முடிந்து விட்டால், இன்று இரவே கூடத் திரும்பி வந்து விடுவேன்!'' என்றான் அவன், சிறு இறுக்கத்துடன்.

யோகன் கிளம்பிச் சென்ற பின், சுற்று வேலை செய்யும் வேலைக்காரி, வேலை முடித்து, சாப்பாட்டை வாங்கிக் கொண்டு போனாள்.

கதவை உட்புறம் தாழிட்டுக் கொண்டு அமர்ந்த மஞ்சரிக்குப் போரடித்தது.

கடந்த இரண்டு நாட்களிலும்கூட, யோகன் அலுவலகத்துக்குப் போய்விட்டுத்தான் வந்தான். ஆனால், சற்றுத் தாமதமாகச் சென்று, சீக்கிரமாகத் திரும்பினான். வீட்டிலிருந்த நேரத்தில், கூடவே சுற்றியது எப்போதும் கூடவே இருந்தது போன்றிருந்தது.

வேலைக்காரி சென்ற பிறகு, கேட் காவலாள் வந்து கூப்பிட்டான்.

அவனுடைய தந்தை உயிருக்கு ஆபத்தாகக் கிடப்பதாகத் தகவல் வந்திருப்பதாகச் சொன்னான். ''போய், எட்டிப் பார்த்திட்டு வந்திடறேனுங்கம்மா! ராக் காவலுக்கு, எட்டு மணிக்கு, எப்படியும் முருகன் வந்திடுவான்மா. அது வரைக்கும், அம்மா கொஞ்சம் கவனமாக இருந்தாக்க... என்னம்மா சொல்றீங்க? நான் போகட்டுமா?''

மறுக்க மனம் வரவில்லை, மஞ்சரிக்கு.

இன்னும் சில மணி நேரம். அதற்குள் என்ன ஆகி விடப் போகிறது?

காவலாளியின் கையில் கொஞ்சம் பணத்தையும் கொடுத்து, அனுப்பி வைத்தாள்.

சுமார் ஒரு மணி நேரம் சென்ற பிறகு, அழைப்பு மணி ஒலிக்கவும், மஞ்சரிக்குக் கொஞ்சம் திக்கென்றிருந்தது.

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தால், அங்கே கவலை படிந்த முகத்துடன் செல்வேசன் நின்றான்.

அவளைக் கண்டதும், "மன்னித்துக் கொள், மஞ்சரி! ரதியைப் பற்றி, உன்னிடம் பேச வேண்டும். அதை வேறு யார் முன்னிலையிலும் பேச முடியாது என்பதாலேயே, மிஸ்டர் யோகேந்திரன் இல்லாத, இப்போது வந்தேன். வேலைக்காரனைக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் சொல்கிறாயா?" என்று வேண்டினான்.

வேண்டுதல்தான். ரதியைப் பற்றி என்னவாக இருக்கும்? அவளிடம் போட்டுக் கொடுத்து விடாதே என்று கேட்கப் போகிறானா?

இதைப் பயன்படுத்தி, அவளை நல்ல விதமாக நடத்தும்படி அறிவுரை கூறலாமே?

படித்தவன், குடும்பத்து மனிதன். பணத்தாசை இருந்தாலும், ரொம்பத் தைரியம் இராது.

அவள் தனித்திருப்பது தெரியாமல், வேலையாள் வீட்டில் இருக்கிற எண்ணத்திலும் இருக்கிறான்.

உள்ளே அழைத்து, இரண்டு வார்த்தை நல்ல புத்தி சொல்லி அனுப்புவதில் தப்பில்லை.




ரதிக்கு நல்லது செய்வதாக எண்ணித்தான், செல்வேசனை மஞ்சரி உள்ளே வரவிட்டது.

நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டே உள்ளே வந்து, "தொண்டை காய்ந்து போயிற்று. ஒரு வேலையாளைக் கூப்பிட்டு, குடிப்பதற்குக் குளிர்ச்சியாக எதையாவது கொண்டுவரச் சொல்லேன், மஞ்சரி," என்று கேட்டான் அவன்.

"வேலையாட்கள், அவரவர் ஏதாவது வேலை செய்து கொண்டிருப்பார்கள். நானே கொண்டு வருகிறேன்!" என்று, உள்ளே சென்று ஃப்ரிஜ்ஜில் இருந்த ஒரு குளிர் பானத்தைக் கண்ணாடித் தம்ளரில் ஊற்றிக் கொணர்ந்து அவனிடம் கொடுத்தாள் அவள்.

"உட்கார்ந்து குடியுங்கள்!" என்று சொல்லிவிட்டுத் தானும் எதிர் சோபாவில் அமர்ந்தாள்.

உட்கார்ந்து, பழச்சாற்றை ஆற அமரக் குடித்து முடித்துவிட்டு, "அன்று விற்பனைக் கண்காட்சியில் உன்னைப் பார்த்ததில் இருந்து, உன் நினைவாகவே இருக்கிறேன், மஞ்சு டார்லிங்!" என்று செல்வேசன் காதல் பார்வை பார்க்கவும், மஞ்சரி திடுக்கிட்டுப் போனாள்.




செல்வேசனின் பேச்சில் திடுக்கிட்டுத் திகைத்தபோதும், சில வினாடிகளிலேயே, மஞ்சரி சமாளித்துக் கொண்டாள்.

''என்ன உளறுகிறீர்கள், செல்வேசன்? நீங்கள் இங்கே வந்தது, ரதியைப் பற்றிப் பேசுவதற்காக. நினைவிருக் கட்டும்!'' என்றாள், சற்று அழுத்தமான குரலில்.

''ரதியா? அந்தக் கழுதையைப் பற்றி, இப்போது என்ன பேச்சு?'' என்று அவன் அலட்சியமாகக் கேட்கவும், மேலும் அதிர்ந்து, ''நாளையே, அவள் உங்கள் மனைவியாகப் போகிறாள், செல்வேசன்!'' என்றாள் மஞ்சரி.

''என்ன செய்வது? வேறு வழியில் அவளது பணம் எனக்குக் கிடைக்காதே!''

வெட்கமின்றி, வெளிப்படையாகச் சொன்னான், அவன். பாவி! பாவி! எப்படி யெப்படிச் சொல்லிப் பார்த்தும், இந்த முட்டாள் பெண் கேட்க மாட்டேன் என்று விட்டாளே!

இப்போதும்கூட, ரதிக்குப் புரிய வைத்து, அவளை மீட்க வழியில்லையே என்றுதான், மஞ்சரி கலங் கினாளே தவிர, தனக்கு எந்த விதத் தீமையும் நேரக் கூடும் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

தீமை எப்படி நேரக் கூடும் என்று, செல்வேசன் அவளுக்குப் புரிய வைத்தான்.

''எப்போதுமே, என் ஆசைக்கும், நேசத்துக்கும் உரியவள் நீதான், மஞ்சரி. அதை உனக்குப் புரிய வைக்கவே வந்தேன்!'' என்றபடி, எழுந்தான்.

பணம் இல்லை என்ற ஒரே காரணத்துக்காக, அவளை ஒதுக்கியவன், என்ன தைரியமாக இப்படிப் பேசுகிறான் என்று ஆத்திரம் வந்தது, அவளுக்கு.

எனவே, தலை சரித்து அவனை நோக்கி, 'உச்'சுக் கொட்டி, ''உங்களுக்கு ஒரு விஷயம் நினைவில்லை



என்று தோன்றுகிறதே! நான் இப்போது யோகனுடைய மனைவி, செல்வேசன்!'' என்றாள் ஏளனக் குரலில்.

''அதற்கென்ன?'' என்றான் அவன் அலட்சியமாக. ''உனக்கு, யோகேந்திரனின் பணம் வேண்டும், எனக்கு ரதியின் சொத்து பத்து எல்லாம் வேண்டும். இதற்கும், நாம் காதலர்களாக வாழ்வதற்கும், என்ன சம்பந்தம்?'' என்று கேட்டு, ஒன்றுமில்லை என்பது போலக் கையை விரித்தான் அவன்.

காதில் விழுந்ததை நம்ப முடியாமல், அவனை வெறித்துப் பார்த்தாள் மஞ்சரி.

இவ்வளவு கேவலமானவனா இவன்!

செல்வேசனைக் காதலனாகக் கருதிப் பழகிய நாட்களை எண்ணுகையில், அவளது உடல் சிலிர்த்தது. இவ்வளவு மோசமானவன், அவளைத் தொட்டு அசிங்கம் பண்ண முயற்சிக்காமல், எப்படி விட்டான்?

ஒருவேளை, உலக மகா உத்தமக் காதலனாகக் காட்டிக் கொண்டிருந்தானே, அந்த உன்னதத் தோற்றம் கலைந்து விடக்கூடாது என்று நினைத்திருப்பானோ?

திலகத்தின் வளர்ப்பு அவளைத் தப்பு பண்ண விட் டிருக்காது என்றாலும், அவளுக்குச் செல்வேசனிடம் மயக்கம் இருந்ததே!

எப்படியோ? சிறு பழுதுமின்றி, அவள் முழுமை யாகப் பிழைத்தாளே!

அவளது அருவருப்பு முகத்தில் தெரிந்துவிடக், காரணத்தை வேறாக எண்ணிய செல்வேசன், சற்றுத் தயங்கி, ''அப்படி வாழப் பிடிக்கவில்லையானால், யோகேந்திரனை விட்டு விலகி வந்துவிடு. ரதியின் பணம்தான் இருக்கிறதே! உன்னையும் நல்லபடியாகவே

என்னால் காப்பாற்ற முடியும்!...'' என்று அவன் முடிக்கு முன், ''சீச்சீ, வாயை மூடுங்கள். இவ்வளவு இழிந்தவரா, நீங்கள்! ஒரு காலத்தில், உங்களை விரும்பியதாக எப்படி நினைத்தேன் என்று புரியவில்லையே!'' என்றாள் மிகுந்த வெறுப்புடன்.

''ஒரு காலத்திலா? சும்மா பேசாதே. இப்போதும் உனக்கு என் மேல் விருப்பம்தான் என்று எனக்குத் தெரியும். மற்றப்படி, ரதியிடம் கலகமூட்ட முயன்றிருப் பாயா? இப்போதும் உன் ஆசை அப்படியேதான் இருக்கிறது!'' என்று அவள் புறமாக ஓர் எட்டு எடுத்து வைத்தான் செல்வேசன்.

''சீச்சீ! நிச்சயமாக இல்லை!'' என்று வேகத்துடன் மறுத்தவளின் கண்கள், ஒரு சுய விளக்கத்தில் சட்டென அகன்றன.

ஆமாம்! செல்வேசன் மீது, அவளுக்கு அணுவளவு கூட, ஆசை, அன்பு, விருப்பம் எதுவுமே இல்லைதான். அவளுக்கு இவனிடம் இருந்த மயக்கம், வெகு காலத்துக்கு முன்பே, முழுமையாக அடியோடு அழிந்து போய் விட்டிருக்கிறது.

இது.. இந்த உண்மைதான், வரவேற்பன்று காலையில், ஊடுபாவு போல அவள் மனதைக் குழப்பியதா? செல்வேசனின் மோசமான புத்தி தெரிந்திருந்தால், அவனை நேசித்திருக்க மாட்டாளே என்று எண்ணினாளே! குற்றம் குறைகளோடு ஏற்பது அல்லவா அன்பு. பிறகும், ரதியை எண்ணிப் பரிதாபமாக இருந்ததே தவிர, செல்வேசனை மணக்கப் போகிறாளே என்று, அவள் மீது கோபமோ, பொறாமையோ தோன்றவே இல்லையே! செல்வேசனை அடியோடு இழக்கிறோமே என்ற வருத்தம், ஒரு போதும் துளிக்கூடத் தோன்றவில்லையே!



இவை அனைத்திலிருந்தும், எப்போதோ அவள் அறிந்து கொண்டிருக்க வேண்டிய உண்மை, அவளது மந்த மூளைக்கு, இப்போதுதான் முழுமையாகப் புரிந்திருக்கிறது.

காதல் எப்படி மடியும் என்று அன்று அனிதாவோடு பேசியபோது யோசித்தாளே!

அப்போதுகூட, அவளுக்கு வந்தது காதலே அல்ல., அந்த வயதில், ஓர் இளைஞன், உலகமே நீதான் என்று ஓர் இளம் பெண்ணிடம் காட்டும்போது உண்டாகி, உடனே தெளிந்துவிட்ட அறிவு மயக்கம் என்று புரியவில்லையே!

மயக்கம் என்பதே தெளிவதுதானே!

இதற்குப் போய், அவசியமற்று, எவ்வளவு வேதனை! எவ்வளவு வருத்தம்!

இருட்டறையில் இருந்து வெளி வந்த உணர்வுடன், கண்கள் பளிச்சிட, ''சத்தியமாகச் சொல்லுகிறேன், செல்வேசன். எனக்கு உங்களிடம் காதல், பாசம், அன்பு என்று எதுவுமே, கொஞ்சம்கூட இல்லை. இல்லை. போதுமா?'' என்று உறுதியான குரலில் அறிவித்தாள்.

அவள் சொன்ன விதத்தில் ஆத்திரமுற்று. ''இதை நம்ப நான் ஒன்றும் முட்டாள் இல்லை. ஏதேது! விட்டால், என் புருஷனைத்தான் காதலிக்கிறேன்., அவனது அணைப்புக்காகத்தான் ஏங்குகிறேன் என்று கூடப் பேத்துவாய் போலிருக்கிறதே!'' என்று ஏளனமாக உரைத்தான் செல்வேசன்.

மஞ்சரியின் கண்கள் மீண்டும் அதிசயத்தால் அகன்றன.

கடவுளே! ஆமாம்.

அந்த வினாடியில், யோகனது கையணைப்புக்குள் நிற்பதற்காக, அவள் உயிரைக் கூடத் தரத் தயாராக இருந்தாள். உடம்பின் ஒவ்வோர் அணுவும் அவனுக்காகத் துடிப்பதை உணர்ந்தபோது, அவளுக்கே பிரமிப்பாக இருந்தது.

ஆனால், இதையும்தான், அவள் ஏன் புரிந்து கொள்ளவில்லை?

எப்போதுமே, அவளுக்கு யோகன்தானே எல்லாம். சிரிப்பு, அழுகை, சுகம், துக்கம் எல்லாவற்றுக்குமே, அவளுக்கு அவன்தானே தேவைப்பட்டான்!

அவன் மார்பில் சாய்ந்து அழுதால், எப்படிப்பட்ட துன்பமும் குறைந்து போகுமே!

இந்த இரண்டு நாட்களும், அவன் பெரும்பாலும் கூடவே இருந்தது, எவ்வளவு ஆனந்தமாக இருந்தது!

அனிதாவிடம் வெறுப்பு, வந்தனா பற்றிய நிம்மதி... எத்தனை சூசகங்கள்!

சட்டென நிமிர்ந்து, "ஆமாம்! அப்படித்தான்! அதுதான் நிஜம்!" என்று மீண்டும் அறிவித்தாள் மஞ்சரி.

அவ்வளவு நேரம் இருந்த திண்ணக்கம் மாறி, முதல் முறையாகச் செல்வேசன் சற்றுத் திகைத்தான். ஆனால், உடனேயே தலையை உதறி, "பொய். பொய். அப்போது உன்னைக் கைவிட்டதற்குப் பழி வாங்குவதற்காகப் பொய் சொல்லுகிறாய் என்று நினைக்கிறேன். அப்படித்தானே, டார்லிங்? சாரிம்மா - இனிமேல், நான் உன்னை விட்டுப் பிரியவே மாட்டேன். நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன் என்று காட்டுகிறேன், பார்!" என்றபடி, அவளை நெருங்கினான் அவன்.



"நீங்கள் எதையும் காட்டத் தேவை இல்லை, செல்வேசன்! நான் பொய்யேதும் சொல்லவில்லை. உண்மையாகவே, எனக்கு..."

"அதெல்லாம் ஒத்துக் கொள்ள முடியாது. ஒரு தரம் நான் கட்டி அணைத்தால், உனக்கே உண்மை புரியும், பார்!" என்றபடி, மஞ்சரியின் கையைப் பற்றினான் செல்வேசன்.

அப்போதும், மஞ்சரி அப்படி ஒன்றும் பயந்து விடவில்லை. எந்த அளவுக்குப் போகிறான் இந்த ராஸ்கல் என்று அவளுக்கு ஆத்திரம்தான் வந்தது.

ஓர் உதறலில் கையை விடுவித்துக் கொண்டு, "மரியாதையாக வெளியே போங்கள், செல்வேசன்! இல்லையானால், வேலையாட்களைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன்!" என்று மிரட்டினாள்.

அவள் 'கழுத்தைப் பிடித்து' என்றதில், செல்வேசனும் ஆத்திரம் கொண்டான். "எந்த வேலையாளைக் கூப்பிடுவாயடி? ஏதோ, அவரவர் வேலையைச் செய்கிறார்கள் என்றாயே, அவர்களையா? அப்படி இங்கே யாரும் இப்போது இல்லை என்று எனக்குத் தெரியாதா? உன் வாயில் காவலன்கூட, அவன் அப்பனுக்கு ஆபத்து என்று போயிருப்பதுகூட, எனக்குத் தெரியும். அப்படி அவனுக்கு ஒரு தகவல் கொடுத்துக் கிளப்பியதே, நான்தானே! நீ, ஜூஸ் எடுக்கப் போன போது, கதவையும் சாத்தியாயிற்று. நீ கத்தினாலும், சத்தம் வெளியே கேட்காது. இப்படி முழுக்க முழுக்க என் தயவில் நிற்கிறாய். என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதாக, நீ சொல்லுகிறாயா?" என்று செல்வேசன்

ஏளனமாகக் கேட்டபோது, முதல் தடவையாக, மஞ்சரியின் நெஞ்சுக் கூட்டினுள் குளிர் பரவியது.

கூடுமானவரை தன் பயத்தை மறைத்துக் கொண்டு, ''இப்போது என்ன திட்டத்துடன் இங்கே வந்திருக்கிறீர்கள், செல்வேசன்?'' என்று நிதானமாகக் கேட்டாள் அவள்.

அவளை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''நீ உன்னைக் கண்ணாடியில் பலமுறை பார்த்திருப்பாய். அதனால், நீ அழகி என்று நான் சொல்லத் தேவையிராது. அன்று, விற்பனைக் கண்காட்சியில், உன்னையும் ரதியையும் அருகருகே பார்த்த பிறகு... இந்த அழகு, எனக்குச் சொந்தமாகி யிருக்க வேண்டியது. சொந்த மாக்கிக் கொள்ள வந்தேன். சொந்தமாக்கிக் கொள்ளப் போகிறேன்!'' என்றபடி, அவளை நெருங்கினான் அவன்.

''அதை நீ மட்டும் நினைத்தால், போதாது, செல்வேசன்!'' என்று ஆத்திரத்துடன் ஒருமையில் பேசி, விலகிப் போனாள் மஞ்சரி.

''அதையும் பார்ப்போமடி! என்ன ஆனாலும், இன்றைக்கு உன்னை நான் விடப் போவது இல்லை!'' என்று, செல்வேசன், அவளது கையைப் பற்றி முரட்டுத் தனமாக இழுத்தபோது, இருவருமே எதிர்பாராத விதமாய், வாயிற்கதவு திறந்து, யோகேந்திரன் உள்ளே வந்தான்.

உள்ளிருந்த நிலையை ஒரு கணம் கவனித்துவிட்டு, செல்வேசனைப் பிடித்து இழுத்து, அவன் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

'சொத்'தென்று கீழே விழுந்த செல்வேசன் அப்படியே கிடக்கவும், மஞ்சரி பயந்து போனாள். மேலும் அவனை



உதைப்பதற்காக யோகேந்திரன் ஷூ அணிந்த காலைத் தூக்கவும், ''வேண்டாம், வேண்டாம்!'' என்று அவனைப் பிடித்து, அப்புறமாக இழுத்தாள் மஞ்சரி.

யோகன் புருவம் சுழித்து நோக்குவதைக் கவனியாது, அவசரமாகக் குனிந்து, செல்வேசனுக்கு மூச்சு இருக்கிறதா என்று, அவன் மூக்கருகே கை வைத்துப் பார்த்தாள்.

''ஏன்? உன் முன்னாள் காதலன் செத்துவிடுவானோ என்று பயமாக இருக்கிறதா?'' என்று யோகேந்திரன் ஆத்திரத்துடன் கேட்டான்.

''அப்புறம், அப்புறமாக, உங்கள் கைக்குக் காப்பு மாட்டி விடுவார்களே என்றும்தான் கவலை!'' என்று அவள் பதிலுக்கு வெடுவெடுத்துவிட்டு, பூஜாடியில் இருந்த தண்ணீரை எடுத்துச் செல்வேசன் முகத்தில் தெளித்தாள்.

அதற்குள், லேசாக முனகியபடி, செல்வேசன் கண்ணைத் திறந்து பார்க்கவும், 'அப்பாடி!' என்று நிம்மதியோடு, அவன் அருகே நிற்க விரும்பாமல் நகர்ந்தாள்.

ஆனால் செல்வேசனுக்கு, அவள் ஒருத்தி அங்கே இருப்பதே மறந்து போயிருந்தது.

கை முஷ்டி இறுக நின்ற யோகேந்திரனைப் பார்த்ததுமே, அச்சத்துடன் எழுந்தவன், தள்ளாடும் கால்களை வேகமாக நகர்த்தியபடி வெளியேறிச் சென்று விட்டான்.

இறுக்கம் தளாது போலச் சட்டை பட்டன்களைக் கழற்றிச் சட்டையைத் தளர்த்தி விட்டவாறே, சோஃபாவில் விழுந்த யோகேந்திரன், டீபாய் மீதிருந்த டம்ளரைப் பார்த்ததும், உதட்டைப் பிதுக்கினான்.

''விருந்து உபசாரம் பிரமாதம் போல! வருக, வருக என்று வரவேற்றுச் சிவப்புக் கம்பளம் விரிக்காத குறையாகத் தெரிகிறதே!'' என்றான் ஏளனமாக.

பதிலுக்குச் சுர்ரென்று மஞ்சரிக்குள் எழுந்த கோபம், உடனே தணிந்தது.

யோகன் வந்ததும் பார்த்த காட்சியை எண்ணிப் பார்த்துவிட்டு, ''ரதியைப் பற்றிப் பேச வேண்டும் என்றார். ஆனால், இப்படி நடப்பார் என்று தெரியாது!'' என்று அமைதியாகவே விளக்க முயன்றாள்.

ஆனால், ''என்ன தெரியாது?'' என்று எரிந்து விழுந்தான் யோகன். ''அன்று கண்காட்சியில், உன்னை விட்டுக் கண்ணை எடுக்க முடியவில்லை, அவனால். எப்போது வெளியே போவேன் என்றெல்லாம், செல்வேசன் நம் வீட்டு விவகாரங்கள் சேகரிக்கிறான் என்று தெரிந்ததுமே, நானும் உஷாராகி, வேலை செய்தேன். வீட்டில் வேறு ஒருவரும் இல்லாதிருக்கச் செய்து, அவனைத் தூண்டி விட்டேன். வாட்ச்மேனிடம் கூட, அவசியப் பட்டால், உன்னிடம் சொல்லிவிட்டு, எனக்கும் தகவல் தெரிவித்துவிட்டுப் போகச் சொல்லி வைத்திருந்தேன்...''

''எதற்கு இதெல்லாம்?''

''செல்வேசனால் உன்னை விட முடியவில்லை... அதைவிட நீயும் நானுமாக... குறைந்த பட்சமாக அவனது கற்பனையில், இணைந்து வாழ்வதை அவனால் சகிக்க முடியவில்லை என்பதை. அவன் பார்வையில் இருந்து என்னால் ஊகிக்க முடிந்தது. ஏதாவது செய்ய முயற்சிப்பான் என்று எனக்கு நிச்சயம்.



அது தப்பானதாக, கேவலமானதாக இருக்கும் என்று நினைத்தேன். அது என்னவென்று தெரியும்போது, நீயும் முழுமையாக அவனை வெறுத்து விடுவாய் என்று ஆசைப்பட்டேன்...''

கேட்டுக் கொண்டே வந்தவளுக்கு, ஒன்று உறைத்தது.

யோகனது இந்த ஆசை, கணக்கீடுகளில், அவளைப் பற்றிய அக்கறை தெரியவில்லையே!

''துணைக்கு யாருமே இல்லாமல் செய்தீர்களே, செல்வேசனால் எனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருந் தால்...?'' என்று கேட்டாள்.

ஆனால், ''என்ன ஆபத்து?'' என்று அலட்சியமாகக் கேட்டான் அவன்.''

என்ன ஆபத்து வர இருந்தது என்று எரிச்சலுடன் அவள் எடுத்துச் சொல்லுமுன், அவனே தொடர்ந்து, ''சின்ன வயதில் இருந்து, நீ தற்காப்புக் கலைகளைக் கற்க ஏற்பாடு செய்ததெல்லாம் எதற்கு? எல்லாமே, ஒரு தேவையில் பயன்படுத்தத்தானே! முதலைக்குத் தண் ணீரில் பலம் என்பார்கள். இது உன் வீடு. இந்த வீட்டில், இங்கே புழங்கிப் பழக்கமற்ற ஒருவனை, ஓர் அரை மணி நேரம், உன்னால் சமாளிக்க முடியாதா? காவலாள் சொன்னதுமே, நான்தான் உடனே கிளம்பி வந்து கொண்டே இருக்கிறேனே! உன் திறமைக்கு, நீயே அவனை அடித்துப் போட்டிருக்கலாம். அதையும் செய்யவில்லை. அத்தோடு நான் அவனை அடிக்க முயன்றால், அதுவும் பிடிக்கவில்லை என்பதுதான் ஒரு மாதிரி உறுத்துகிறது. பற்றாக் குறைக்கு, வீட்டுக்குள் கூப்பிட்டு, விருந்துபசாரம் செய்திருக்கிறாய்!''

யோகனின் குரலில் இருந்த குற்றச்சாட்டு, மஞ்சரியை வருத்தியது.

ஆனால், பல்வேறு உணர்ச்சிகளின் தாக்குதலில், அவளும் அப்போது களைத்துப் போயிருந்தாள். கடந்த ஒரு சிறு கால அளவில், அவள் கண்டு பிடித்த உண்மைகள் வேறு, அவளது நெஞ்சை அமைதியற்றுப் படபடக்க வைத்துக் கொண்டிருந்தன.

முழுக்க முழுக்க, அவளது வாழ்க்கையைப் பாதிக்கும் உண்மைகள்.

அவைகளைப் பற்றி ஆழ்ந்து யோசிக்க அவகாசம் கிடைக்காத தவிப்பு.

யோகன் வந்ததும், அவள் எதிர்பாராததுதான்.

அவன் அடித்து, செல்வேசன் செத்து விட்டானோ என்று அஞ்சியது... எல்லாமே பரபரப்பூட்டுபவைதான். அனைத்துக்கும் மேலாக, முத்தாய்ப்பு வைத்தது போலக் கணவனும் அவளையே குற்றம் சாட்டவும், அவளால் தாங்க முடியாது போயிற்று.

கண்ணைக் கரித்து வந்த அழுகையைக் கட்டுப் படுத்திக் கொண்டு, செல்வேசனின் மனநிலையைச் சரியாகக் கணித்து விட்டதால், "உங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்று நினைப்பா? ஒரு பெண்ணின் மனம் பற்றி, உங்களுக்கு என்ன தெரியும்? ஒன்றும் தெரியாமல், கண்டபடி உளறாதீர்கள்!" என்று படபடத்தவள், அதற்கு மேல் தாங்காது என்று புரிந்து, வேகமாக அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.






மஞ்சரியின் படபடப்பும் கண்ணீரும், சற்று நேரமே இருந்தது.

சும்மா கண்ணீர் விட்டுக் கொண்டு கிடக்க முடியாமல், யோசிப்பதற்கும் நிறைய இருந்தது.

சொந்தக் கணவன் மேல் அவள் கொண்டு விட்ட நேசம் கூட, இப்போது பிரச்சினையாகவே தோன்றிற்று.

அவளுக்குக் கணவன் மீது காதல், சரிதான்.

ஆனால், அவனது மனநிலை?

மண விலக்குத் தேவையில்லை என்று சொன்னான்தான்!

இருக்கும் நிலையே திருப்திதான் என்றவன், இருக்கும் நிலைக்கு மேல் எதுவும் தேவையில்லை என்பதையே அப்படிச் சொன்னதாக, இப்போது தோன்றியது.

யோகனைப் பொறுத்தவரை, அனிதாவின் மேல்தான், அவனுக்குக் காதல். ஆதாரமாக, அந்த ஃபோட்டோ இருக்கிறது! ஆனால், பல்வேறு மன வேறுபாடுகள் காரணமாக, அவளை மணப்பதில்லை என்று முடித்து விட்டான்.

நேசம் இல்லாமல், இன்னொரு பெண்ணுடன் வாழ அவனுக்கு விருப்பம் இல்லை.

எனவே, பெயருக்கு மனைவியாக, மஞ்சரி வீட்டில் இருப்பதே அவனுக்குப் போதும்.

இதைத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறான்.

எனவே, வாழ்க்கை இப்படியே தொடரப் போகிறது.

காட்டில் காய்ந்த நிலா என்பார்களே, அதுபோல, மஞ்சரியின் நேசமும் ஒரு பயனுமற்று வீணாகப் போகிறது.

வாழ்க்கையும் அப்படித்தான் என்று உணர்ந்தபோது, மனம் சோர்ந்து மீண்டும் அழுகை வந்தது.

யோகனை நேசிப்பதைக் கண்டு பிடித்துச் செல்வேச னிடம் அறிவித்தபோது இருந்த மகிழ்ச்சியும் கர்வமும், போன இடம் தெரியவில்லை.

திலகம் பக்கத்தில் இல்லையே என்று இருந்தது அவளுக்கு. இருந்தால் அவள் மடியில் படுத்தேனும், ஒரு மூச்சு அழலாம். என்னவென்று துளைத்துத் துருவாமலே, ஆறுதல் படுத்துவாள்.

திலகத்தின் நினைவு வெளியே இருட்டியும் விளக்குப் போடவில்லை என்பதை ஞாபகப்படுத்தியது. அவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு விளக்கேற்றிவிட்டு, இரவு உணவைத் தயார் செய்து, மேஜை மேல் எடுத்து வைத்தாள்.

யோகனின் அறைக் கதவைத் தட்டி, "சாப்பாடு தயார்!" என்று அறிவித்துவிட்டு, வேகமாகக் கீழே சென்றாள்.

அவனுக்கு ஒரு தட்டில் இட்டிலி, சட்டினி எடுத்து வைத்துவிட்டுத் தனக்கு இன்னொன்றில் எடுத்துக் கொண்டு, மூலை அறைக்குச் சென்று விட்டாள்.

சற்றுப் பொறுத்து அங்கே வந்த யோகனைக் கண் டதும், அளைந்து கொண்டிருந்த இட்டிலியை அவசரமாக வாயில் அடைத்தபடி, தட்டை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

வழியில் நின்று, "உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்!" என்றான் அவன்.



மஞ்சரி கையைக் காட்டவும், "கழுவி விட்டு வா. காத்திருக்கிறேன்!" என்று ஒதுங்கினான்.

மறுபடியும், தப்பு என்று தொடங்கினால், தாங்காது தான். ஆனால்... இது, இந்தப் பேச்சு, தவிர்க்க முடியாதது.

ஒருவேளை, வீட்டை விட்டுப் போ என்று விட்டால்...? ஊகூம்! திலகம் விட மாட்டாள்.

வேறு என்னவோ, ஏதோ என்று மனதைக் குழப்பிக் கொள்வதைக் காட்டிலும், விஷயத்தை அறிந்து கொள்வது மேல் என்று தோன்றிவிட, மஞ்சரி விரைவிலேயே வந்து விட்டாள்.

"என்ன?'

"முன்பே சொன்னதுதான்!" என்ற யோகேந்திரன், சற்றுத் தயங்கிவிட்டு, "நீ எப்போது விரும்பினாலும், இந்தத் திருமணத்திலிருந்து உனக்கு விடுதலை தர, நான் தயார், மஞ்சரி!" என்றான் அமர்ந்த குரலில்.

சில வினாடிகள் மஞ்சரிக்கு ஒன்றுமே புரியாத நிலை.

வெளியேறு என்றுதான் சொல்லுகிறானா? இந்த வீட்டை விட்டு, அவளால் எப்படிப் போக முடியும்? வீட்டை விட்டு, அவனை விட்டு, அத்தையை விட்டு... எப்படி முடியும்?

பதறிய மனதை அமைதிப் படுத்த முயன்றபோது, சில தினங்களுக்கு முன்னதாக, இதே வார்த்தைகளை அவள், அவனிடமே சொன்ன நினைவு வந்தது.

முகத்தில் அடித்தது போல, அவன் பதில் தந்ததும்.

என்ன, இவனுக்கு மட்டும்தான் ஏளனமாகப் பேசத் தெரியுமா?

"உங்களுக்கு ஒன்று வேண்டும் என்றால், உங்களுக் காக என்று சொல்லிக் கேளுங்கள்! அதை விட்டு, என்னவோ,

எனக்கு நன்மை செய்கிற மாதிரிக் காட்டிக் கொள்ள வேண்டாம்!'' என்றாள் அமர்த்தலாக. கிட்டத்தட்ட அவனைப் போலவே.

பார்வையில் கூர்மை ஏற, ''அதாவது இப்போதைய நிலையே திருப்தி, இங்கேயே இருக்கத்தான் விருப்பம் என்கிறாய்?'' என்றான் அவன் கேள்வியாய்.

''ஆமாம்!'' என்றாள் அவள் மிடுக்காக.

''அப்படி யென்றால், நிரூபி!'' என்று அவன் கேட்கவும், மஞ்சரி திகைத்தாள்.

''எ.. எப்படி?''

''உனக்குத்தான் தெரிய வேண்டும்!''

''அன்றைக்கு நீங்கள் எப்படி நிரூபித்தீர்களாம்?''

''நீ நிரூபிக்கச் சொல்லிக் கேட்டிருந்தால், நிச்சயம் நிரூபித்திருப்பேன்!''

''அதற்கென்ன? இப்போதுதான் காட்டுங்களேன், எப்படியென்று! அப்புறம் நானும்...''

ஆழப் பார்த்தபடி, யோகன் அருகில் வரவும், மஞ்சரியின் பேச்சு நின்று போயிற்று.

இரு கைகளாலும், அவள் முகத்தை ஏந்தி, ''இப்படி!'' என்று அவளது பிறை நெற்றியில் முத்தமிட்டான் அவன்.

பேச்சிழந்து அவள் பார்க்கையிலேயே, ''இப்படி!'' என்று, அவன் அவளது மாம்பழக் கதுப்புக் கன்னங்களில் முத்தமிட்டான்.

அப்புறம், ''இப்படி..'' என்று அவளது செவ்விதழ்களில் அவன் முத்தமிடும்போதே அவளது கரங்கள் தாமாகக் கணவனின் கழுத்தில் மாலையாய்க் கோத்துக் கொண்டன.



அப்புறம் நிகழ்ந்த அனைத்துக்குமே, இருவருமே சமப் பொறுப்பு எனலாம்.

விடிகாலையில் விழித்துக் கொண்ட மஞ்சரிக்குத் தன்னை நினைத்தே ஆச்சரியமாக இருந்தது.

தனக்குள் இப்படி ஒரு வேகம் இருந்ததை, அவள் அறிந்திருக்கவே இல்லையே! யோகன் என்ன நினைத்திருப்பான் என்று எண்ணிப் பார்க்கக்கூட அவளுக்குக் கூச்சமாக இருந்தது. ஆனால், அதில், அவனும் ஒன்றும் குறைவாக இல்லை என்பது, இன்னமும் வியப்பூட்டியது.

அவளாவது, அவனை நேசிக்கிறாள்! காதலில் உருகி விட்டாள் எனலாம்.

யோகன் இன்னொருத்தியைக் காதலிக்கிறவன் ஆயிற்றே!

முன்னிரவில் நடந்தது, எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு அல்ல. அவர்களுக்குள் இருந்த எல்லாப் பிரச்சினைகளும் அப்படியேதான் இருக்கின்றன.

சற்று முன் உணர்ந்த புளகிதம் மெல்ல வடிய, கவனத்துடன் எழுந்து சென்றாள் அவள்.

அவள் காபி கலந்து கொண்டிருக்கையில் வந்த யோகனின் முகத்திலும், ஒரு கவனம்தான் இருந்தது.

காபிக் கப்பை வாங்கிக் கொண்டு, ''ஒன்பது மணிக்குத் தயாராகி விடுவாய் அல்லவா? ரதியின் திருமணத்துக்குப் போக வேண்டும். பிடிக்கிறதோ, இல்லையோ, சீதாராமன் அழைத்துப் போகாதிருக்க முடியாது!'' என்றான் அவன்.

இருவருமாகச் சென்று, மனதை மறைத்துப் புன்னகை செய்து, சிரமப்பட்டு, விருந்து சாப்பிட்டார்கள்.

சிவநேசனும் வந்திருந்தார்.

''என்னப்பா, அந்தக் கையெழுத்து..'' என்று அவர் கேட்க, ''நாளை வாங்கித் தந்துவிடுகிறேன், அங்கிள்!'' என்றான் யோகன்.

''அனிதா வரவில்லையா, அங்கிள்?'' என்று மஞ்சரி உபசாரமாகக் கேட்டாள்.

''அவள் மும்பைக்குப் போய்விட்டாளே!'' என்றுரைத்து, அவளை அதிர வைத்தார், சிவநேசன்.

யோகனுக்குத் தெரியாமலா இருக்கும்? சொல்லாமல் மறைத்து விட்டானே என்றிருந்தது மஞ்சரிக்கு.

மஞ்சரிக்கு இருந்த குழப்பம், யோகனுக்கும் இருந்ததோ? அலுவலகத்துக்குப் போய்விட்டு, வெகு தாமதமாக, அப்போதும், கையில் சில ஃபைல்களுடன் வீடு திரும்பினான் யோகேந்திரன்.

இருவருமே, முந்தைய இரவைத் தொடரத் தயங்கி, வேறு ஏதேதோ வேலைகளைச் செய்து, நேரத்தை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, அவசரமாகக் கதவைத் தட்டும் ஓசையோடு, ''மஞ்சரி! மஞ்சரி!'' என்று ரதியின் குரலும் கேட்கவே, இருவரும் அவசரமாக வாயிலுக்குச் சென்றார்கள்.

ரதியேதான்!

அவள் கலங்கியிருப்பது தெரிய, அவசரமாகக் கதவைத் திறந்து விட்டனர்.

'மூசுமூசு'வென்று அழுத ரதிக்குச் சூடாகப் பால் கொணர்ந்து கொடுத்து, வற்புறுத்திக் குடிக்க வைத்தாள் மஞ்சரி.

பாலைக் குடித்ததும், சற்று அமைதியுற்று, ரதி விவரம் சொன்னாள்.



பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டலில், மணமக்கள் அறையை, மகள், மருமகனுக்காகச் சீதாராமன் ஏற்பாடு செய்திருந்தார்.

செல்வேசனுடைய தந்தை, அங்கேயும் மகனைத் தேடிக்கொண்டு வரவும், ரதிக்கு ஒரு மாதிரி இருந்தது.

ஏற்கெனவே, என்னென்னமோ கணக்குச் சொல்லி, செல்வேசன் வீட்டில் நிறையப் பணம் வாங்கியிருந்தனர்.

இரவுச் சாப்பாட்டுக்குக் கீழே போய்ச் சொல்லப் போவதாக, ஓர் அசட்டுக் காரணம் சொல்லிவிட்டு, செல்வேசன் தந்தையுடன் செல்லவும், ரதிக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

சாப்பாடுதான். அதை ஃபோனிலேயே சொல்லலாம்! எதற்குக் கீழே போவது?

அவர்களைப் பின்பற்றிப் போய், ஒளிந்து நின்று கவனித்திருக்கிறாள். சீதாராமனுடைய பணத்தை, எப்படிக் கபளீகரம் பண்ணுவது என்று, அப்பாவும், மகனுமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

''அவர்கள் சொன்னதை எல்லாம், என்னால் திருப்பிச் சொல்லக்கூட முடியாமல், என் உடம்பு பதறுகிறது, மஞ்சரி. அத்தனை விதமாகச் சித்ரவதைகள்! இரண்டு பேருமாய், உற்சாகமாகத் திட்டம் போடுகிறார்கள்! எப்படியோ போகட்டும் என்றிராமல், எத்தனை தரம் என்னை எச்சரிக்க முயன்றாய்! நல்ல எண்ணத்தோடு வந்த உன்னைத் தரக் குறைவாகப் பேசியதற்குக் கடவுள் எனக்குத் தண்டனை கொடுத்து விட்டார்!'' என்று அழுதாள் ரதி.

''சீச்சீ! இப்படியெல்லாம் பேசக் கூடாது, ரதி. செல்வேசனை மிகவும் நம்பியிருந்த அந்த நிலையில் நீ பேசியதைப் பெரிதாக எடுக்கக் கூடாது!'' என்று, மஞ்சரி அவளைத் தேற்றினாள்.

''அப்புறம்?'' என்று யோகன் வினவினான்.

''அவர்களுக்குத் தெரியாமல், நகைப் பெட்டியை மட்டும் எடுத்துக் கொண்டு, ஹோட்டல் டாக்சியிலேயே, ஓடி வந்துவிட்டேன்! எங்கள் வீட்டுக்குப் போகப் பயம்! அப்பா, தொழிலில் கெட்டிக்காரரே தவிர, சாதாரண விஷயங்களில் அவரை எளிதாக ஏமாற்றிவிட முடியும்.

''நானும், கெட்டிக்காரி அல்ல. நான் அங்கே இருக்கிற நேரம், செல்வேசன் குடும்பம் வந்து, ஏதாவது தில்லுமுல்லு பண்ணினால், சமாளிக்க எங்களால் முடியாது. அப்பாவிடம், திடீரெனச் சொல்வது, அவரது உடல் நிலைக்கும் ஆபத்து. அதனால்தான், இங்கே வந்தேன். நீங்கள் இரண்டு பேரும், என்னோடு வந்து, அப்பாவிடம் விவரம் சொல்லி, செல்வேசனை வீட்டில் சேர்க்கக் கூடாது என்று ஏற்பாடு பண்ண வேண்டும். அப்புறம், நிரந்தரப் பிரிவுக்குக் கூட!'' என்று ரதி, அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

அவளைத் தேற்றி, அவள் கேட்டுக் கொண்ட மாதிரி, அவளுடைய தந்தையிடம் பேசி, ரதிக்கு விவாகரத்து செய்யவும் ஏற்பாடு செய்து விட்டுத் திரும்பியபோது, இருவருக்கும் இடையே அன்று முழுவதும் இருந்த தயக்கம் பெரிதும் மறைந்திருந்தது.

பேசியவாறே, காரை ஷெட்டில் நிறுத்திவிட்டு வந்தனர்.

''நல்லவேளை! என்னிடம் பணம் இல்லை. இருந்திருந் தால், ரதி மாதிரி, நானும் கஷ்டப்பட்டிருப்பேன்!'' என்றாள் மஞ்சரி.

''பணம் இருக்கிறது, மஞ்சரி! வைப்பு நிதியாக, உன் பெயரில் நிறைய, ஏறத்தாழ ஐம்பது லட்ச ரூபாய் இருக்கிறது. அதைப் பல்வேறு விதமாக முதலீடு



செய்யத்தான், அங்கிள் உன் கையெழுத்தைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்! திருமதி யோகேந்திரன் பெயரில் முதலீடு பண்ண!'' என்று யோகேந்திரன் கூறவும், மஞ்சரி, திகைத்து நின்று, அவனை நோக்கினாள்.

''அவ்வளவு பணமா? பின்னே, பணம் இல்லை என்று, செல்வேசனிடம் பொய்யா சொன்னீர்கள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ம்ம்ம்... ஒரு வகையில், அவனிடம் சொன்னது பொய்யல்ல, மஞ்சு. உன் அப்பா உனக்காக வைத்த பணம் பற்றி, அவன் கேட்டான். அப்படி ஏதும் கிடையாது என்று உண்மையைத்தான், அவனிடம் நான் சொன்னேன்.''

''ச்சு, யோகன்! என்னைக் குழப்புகிறீர்களே!''

''ஒரு குழப்பமும் இல்லை. உன் பெயரில் பணம் போட்டது, உன் அப்பா அல்ல. என் தந்தை. நண்பருடைய மகளைத் தன் மகளாக ஏற்று, அவளது எதிர் காலத்துக்கும் பணம் போட்டு வைத்தார். அதைப் போய், அந்தச் செல்வேசனிடம் தாரை வார்க்கச் சொல்லுகிறாயா? அந்தப் பணம் இருப்பது தெரிந்தால், உன்னை விட மாட்டான் என்று புரிந்து, மறைத்ததே...'' என்று சொல்லிக் கொண்டிருந்தவன், மஞ்சரி அவனைப் பிடித்துப் பக்க வாட்டில் தள்ளிய வேகத்தில், தடுமாறி, கிட்டத்தட்ட விழப்போய்ச் சமாளித்து எழுந்து வந்தான்.

விவரம் கேட்க அவசியமே இல்லாமல், ஒரு பூந்தொட்டி விழுந்து சிதறிக் கிடக்க, ''பாவீ... என் வாழ்வைக் கெடுத்தாயே!'' என்றபடி, யோகன் மீது வீசுவதற்காக, இன்னொரு பூந்தொட்டியைத் தூக்கிக் கொண்டிருந்தான் செல்வேசன்.

ஆனால், அதற்குள்ளாக அவனது இடுப்பில் மஞ்சரி கொடுத்த உதை, அவனை வலியில் அலறி, உருளச் செய்ததோடு, கேட் அருகே உட்கார்ந்திருந்த காவலாளியையும் ஓடி வரச் செய்தது.

எல்லோருமாக அடித்து உதைத்துக் கேட்டதில், விவரம் வெளிவந்தது.

ரதி திடீர் என்று காணாமற் போகவும், தந்தை மகன் இருவருமாக, ஓசைப்படாமல் தேடினார்கள். ஹோட்டல் டாக்சி மூலம், இங்கு வந்தது தெரிந்து, வந்திருக்கிறான். காவலாளுக்குத் தெரியாமல், பக்கத்து வீட்டு வழியே உள்ளே வந்து ஒளிந்திருந்தபோதுதான், மஞ்சரியின் பண விவரம் தெரிய வந்தது. கொதிப்பில் தொட்டியைத் தூக்கி வீசி விட்டான்.

இனி இந்தப் பக்கம் தலையை நீட்டினால், கை அல்லது கால் போய்விடும் என்று மிரட்டி, அவனை அனுப்பி விட்டு, யோகன் தம்பதி வீட்டினுள் சென்றபோது, மணி பன்னிரண்டைத் தாண்டியிருந்தது.

ஆனால், தூக்கத்தைப் பற்றிய நினைவே இல்லாமல், 'இதைத்தான் இப்போது, அவனை உதைத்தாயே, இதைத் தான் நேற்று ஏன் செய்யவில்லை என்று, யோசித்து யோசித்து.. பெண் மனம் புரியாது என்று வசனம் வேறா? தவியாய்த் தவித்துத் தப்பான முடிவெடுத்தேன். இங்கேயே இருப்பேன் என்று நீ சொல்லும்வரை, நான் என்ன பாடு பட்டேன் தெரியுமா? நல்ல வேளை! இன்றாவது, தெளிவாயிற்றே!'' என்று உற்சாகத்துடன் கூறி, மஞ்சரியை அணைக்க முயன்றான், யோகேந்திரன்.

ஆனால், அவள் விலகிச் செல்லவும், ''என்ன மஞ்சரி?'' என்று வினவினான்.



அவள் உள்ளே சென்று, யோகன் - அனிதாவின் ஃபோட்டோவை எடுத்து வந்து, அவனிடம் காட்டினாள். ''ஐந்து ஆண்டுகளாகப் பத்திரமாக வைத்திருக்கிறீர்களே! அவ்வப்போது பார்த்து... ரசித்து.. ஆசை, பாசம் இல்லாமலா?'' என்று தன் மன உளைச்சலைக் கொட்டினாள் அவள்.

படத்தை அவளிடமே காட்டினான் அவன். ''இதில், அனிதா நிற்கிற போஸ் பார்த்தாயா? என் தோளை, எப்படிப் பிடித்திருக்கிறாள்! உரிமை வெறி எப்படித் தெரிகிறது பார்! அவ்வப்போது எடுத்துப் பார்த்து, எந்த மாதிரியான ஆபத்திலிருந்து தப்பினேன் என்று சந்தோஷப் பட்டுக் கொள்வேன்!'' என்றான், வெகு இயல்பாக.

ஆனால், மஞ்சரியின் முகம் தெளிய மறுத்தது.

''நாம் தனித் தனியே வாழ்ந்த விதம்...? அதைக்கூட, அவளிடம் சொல்லிவிட்டு, நேசம் இல்லை என்றால், எப்படி நம்புவது?''

''நம் விஷயத்தை நான்தான் சொல்ல வேண்டுமா? அழகு யார்? நம்-அன்னம்மாவுடைய மகன் அல்லவா? அன்னம்மா மூலமாக, அவனுக்குத் தெரிந்திருக்காதா? அனிதா எப்போதும் வேலையாட்களிடம் வம்பு பேசுகிற வள். அழகுவிடம் நம் வீடு பற்றிக் கிண்டியிருக்கலாம். நாமும், அப்படி ஒன்றும் பெரிதாக ரகசியம் காக்கவில்லையே! ஆனால், அவள் சொன்னால், அப்போதே என்னிடம் கேட்பதில்லையா?'' என்று அதட்டினான் யோகன்.

''எனக்குக் கேட்கப் பயம்!'' என்றாள் மஞ்சரி.

''பயமா? உனக்கு, என்னிடம் பயமா? நம்புவதற் கில்லை. வேறு காரணம் சொல்லு.''

''ஐயோ, பயமேதான், யோகன்! நீங்கள் பாட்டில், 'ஆமாம்' என்று விட்டால்...? அந்தப் பயம்தான்!'' என்று கண்ணில் குறும்புடன் அவள் கூற, சட்டென அவளைப் பற்றி முத்தமிட்டான் அவன்.

அவனது கை அணைப்பை ரசித்து, முகத்தால் அவன் மார்பை உரசியவாறே, ''சொல்லுங்கள், யோகன். அனிதா எப்படி வந்தாள்? என்னால்தான், உங்கள் இருவருக்கும் நடக்க இருந்த கல்யாணம் நின்றதாக, அவள் சொன்னாளே, அது நிஜம்தானே?'' என்று, வெறும் தகவல் அறியும் ஆவலோடு கேட்டாள் மஞ்சரி.

''அது பெரிய கதை ஆயிற்றே!'' என்று, அவளை அலாக்காகத் தூக்கிச் சென்று, சோஃபாவில் நெருக்கமாக அருகில் அமர்த்திக் கொண்டு, அவன் சொன்னான்.

''பதினைந்து ஆண்டுகளுக்கு முன், உன் தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு, மருண்ட முகத்துடன், நீ இந்த வீட்டுக்கு வந்தாய். நினைவிருக்கிறதா, மஞ்சரி? பெரிய கண்களை விரித்து, என்னைப் பார்த்தாய். அந்த முகம், இன்னும் என் மனதில், கல்லில் பொறித்தது போலத் தெளிவாக இருக்கிறது.

''அன்றிலிருந்து, எனக்கு நீ மிக முக்கியமானவள், மஞ்சு.

''அப்புறம், ஐந்து ஆண்டுகளுக்கு முன், சிவநேசன் அங்கிளுடைய தங்கை மகளான அனிதா இங்கே வந்தாள். அப்போதும், அங்கிள் வேண்டுமென்றே, வரவழைத்திருப்பார் என்பது என் ஊகம். அந்த வயதில், என் மனதில் ஒரு மயக்கம் வரத்தான் செய்தது.

''சொன்னேனே, உரிமை வெறி என்று. மயங்கியிருக்கிறேன் என்று தெரிந்ததும், அவள் நிபந்தனைகள் போடத் தொடங்கினாள். முதல் நிபந்தனை, உன்னை வீட்டை விட்டு விரட்ட வேண்டும். அடுத்தது, அம்மாவைக் கிராமத்துக்கு அனுப்ப வேண்டும். கடைசியாக, இந்த வீட்டை விற்றுவிட்டு ஃப்ளாட்டில் வசிக்க வேண்டும்.



''மூன்றுமே முடியாது என்றேன், நான். அங்கிள் ரொம்ப பேசி, மற்ற இரண்டையும் அவளை விட வைத்தார். ஆனால், உன் விஷயத்தில் அவள் பிடிவாதமாக இருந்தாள். நானும் அதே பிடிவாதத்தில் இருந்தேன்.

''அனிதாவுக்கு ஸ்டேட்சுக்குச் செல்ல வாய்ப்புக் கிடைத்தது. நிம்மதியோடு கை காட்டிவிட்டேன்.

''என் மனதைப் பொறுத்தவரையில், அத்தோடு, அவளைக் கை கழுவியும் விட்டேன்.

''அமெரிக்காவில் ஆட்டம் போட்டு அலுத்துப்போய், அனிதா இங்கே வருவதாக இருந்தது. மீண்டும் பழைய முயற்சியில், அங்கிள் ஈடுபடுவார் என்று எனக்கு நிச்சயம்.

''அதனால்தான், அவர் மும்பைக்குக் கிளம்பும்வரை, அம்மாவிடம்கூட, நம் திருமணம் விவரம் சொல்ல வேண்டாம் என்றேன். அப்புறம், இதைத் தடுக்க அவர் ஏதாவது செய்தாலும் ஆச்சரியமில்லை என்று தோன்றியது. திருமணம் ஆன பிறகு, தங்கை பெண்ணுக்காகக் கூட, அவர் நம்மைப் பிரிக்க முயற்சிக்க மாட்டார் என்பது, என்ன நிச்சயம்?

''அன்று விருந்துக்குப் போனபோது, பழைய எண்ணம் எதுவும் எனக்கு இல்லை என்று, அவளிடம் தெளிவாகச் சொல்லிவிட்டேன். அந்தக் கோபத்தில், உன்னை வருத்தியிருக்கிறாள் என்று நினைக்கிறேன். அவ்வளவுதான் அவளைப் பற்றிய விவரம்.''

தொடர்ந்து சிறு அமைதிக்குப் பின், ''எப்போதுமே, எனக்கு அனிதாவைப் பிடிக்காது!'' என்றாள் மஞ்சரி.

''எனக்குச் செல்வேசனைப் பிடிக்காத மாதிரியா?''

''பிடிக்கிறதோ, இல்லையோ? நாம் செல்வேசனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். தெரியுமா?''

''தேவுடா! இருந்திருந்து அவனுக்கா? இதென்ன புதுக்கதை?''

''கதையில்லை. நிஜம். என் மனதை எனக்குப் புரிய வைத்தவன் அவன்தான்.''

''எப்படி, மேடம்?''

எழுந்து தள்ளி நின்றுகொண்டு, ''அந்த யோகேந்திரன் அணைத்தால் பிடிக்குமா?'' என்று ஒரு கோபத்தில் கேட்டான். அந்தக் கணத்தில்தான்...'' என்று அந்த நினைவில் கண் சொக்கி நின்றாள் அவள்.

வியப்புடன் நோக்கி, ''அந்தக் கணத்தில்...'' என்று ஊக்கினான் கணவன்.

''அந்தக் கணத்தில், உங்கள் அணைப்புக்காக, என் உடம் பின் ஒவ்வோர் அணுவும் எப்படித் துடித்தது, தெரியுமா?''

''ஆஹா! மனைவி இவ்வளவு சொன்ன பிறகு, சும்மா இருப்பது, கணவனுக்கு அழகல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. நீ என்ன சொல்லுகிறாய், மஞ்சு மகாராணி?'' என்று எழுந்தான் யோகேந்திரன்.

கடைக் கண்ணால் நோக்கி, ''அதையும் நான்தான் சொல்ல வேண்டும் என்றால்...'' என்றவளால் வாக்கியத்தை முடிக்க முடியவில்லை.

அதன் பிறகு, சலசலக்கும் அருவியாய்ச் சிரிப்புச் சத்தம் மட்டுமே அங்கே கேட்டது.